
கிறிஸ்து
காவியம்
கவிஞர்
வாகரைவாணன்

# கிறிஸ்து காவியம்

கவிஞர் வாகரைவாணன்
ஆசிரியர்,
புனித பத்திரிசியார் கல்லூரி,
யாழ்ப்பாணம்,
இலங்கை.

தமிழ் இலக்கியத் தடாகத்தில்
கிறிஸ்து காவியம்
ஒரு
தாமரைப் பூ

முதற்பதிப்பு : 18 வைகாசி 1995

உரிமை : திருமதி மகேஸ்வரி அரியரத்தினம்
(வாகரைவாணன்)
ஆசிரியை,
பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரி,
கொழும்பு - 12.

வெளியீடு : 15

அச்சகம் : அன்னை அச்சகம்
89, மவுண்ற்காமல் வீதி,
குருநகர்,
யாழ்ப்பாணம்.

விலை : ரூபா 150-00

அச்சிடலாம் :
அருள்திரு. எஸ். ஜே இம்மானுவல் அடிகள்
குரு முதல்வர்,
யாழ். மறைமாவட்டம்.
யாழ்ப்பாணம்,



பொன்னினைப் போலும் நூலைப்
புகழ்மணி சூடும் நூலைக்
கண்ணினைப் போலும் நூலைக்
காவியம் ஆன நூலை
மண்ணினை வெல்லும் நூலை
மனங்களில் இனிக்கும் நூலை
அண்ணலே இறைவா உன்றன்
அழகிய பாதம் வைத்தோம்

— வாகரைவாணன்

# கொள்ளை இன்பம் குலவு கவிதை

இறைமகன் இயேசுவின் வாழ்க்கை, அடியவர்களுக்கு
அணையாத விளக்கு! அருட் கலைஞர்களுக்கு.
வற்றாத ஊற்று! அத்தெய்வீக வாழ்க்கையின்
தெளிவையும், நிறைவையும் மாத்துச் சிற்பமோ, கல்லின்
சிலையோ, கோடின் ஓவியமோ சொல்லின் காவியமோ
முழுமையாக வெளிப்படுத்துவது என்பது கடினம். ஆக,
எந்த ஒரு காவியமும் யேசுவின் வாழ்க்கை வரலாற்றுக்கு
முற்றுப்புள்ளியாக அமைந்திட முடியாது. கவிஞர் கண்ண
தாசனின் இயேசு காவியத்துக்குப் பின்னும் ஒரு கிறிஸ்து
காவியமா என்னும் கேள்விக்கு, இப்படியும் ஓர்
இனிய காவியத்தைப் படைக்க முடியும் எனச் செயலில்
காட்டுகிறார் சொல்லேர் உழவர் வாகரைவாணன்.
கிறிஸ்து காவிய ஆசிரியரின் கவிதை ஒழுக்கில் மரபு
புதுமையுடன் இலகுவாகக் குலவுகிறது; கற்பனை இறையியலுடன்
இதமாக விளையாடுகிறது; கிறிஸ்தவம் தமிழுடன் உரிமையோடு
கை கோத்துக் கண்சிமிட்டுகிறது. இத்தகைய ஆற்றல்
படைத்த கலைவாணர் ஒருவரின் படைப்பினை நூல்
வடிவில் வெளியிடுவதில் திருமறைக் கலாமன்றம்
பெருமகிழ்ச்சி அடைகிறது.
ஈழத்து மண்ணுக்கும் திருமறைக்கும் பெருமை தேடித்
தரும் ஒரு கவிஞரின் சொல்வண்ணம், படிப்பவர்
அனைவருக்கும் நல்ல பயனையும் இலக்கியச் சுவை
கலந்த இறை உணர்வையும் அளிக்க வேண்டும்
என இறைவனை இறைஞ்சுகிறேன்.

புலவர். நீ. மரியசேவியர் அடிகள்
இயக்குநர்
திருமறைக் கலா மன்றம்

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்,
இலங்கை.

# கடல் அல்ல
# சமுத்திரம்

கவிஞர் வாகரைவாணன் அவர்கள் படைத்துள்ள கிறிஸ்து காவியத்தைச் சுவைக்கும் பேறு எனக்குக் கிட்டியது. உள்ளத்தில் உருவாகும் எண்ணங்களைப் பழகு தமிழிலே கவிதையாக வடிக்கும் ஆற்றல் கைவரப் பெற்றவர் இக் கவிஞர் என்பதற்குச் சாட்சி பகர்கின்றன இந்நூலில் இடம் பெறும் கவிதைகள். 'கிறிஸ்து தத்துவம்' என்ற நூலைப் புதுக்கவிதை வடிவில் தந்த ஆசிரியர் அந்நூலிற் புலப்படுத்திய தத்துவங்கள் யாவற்றையும் கிறிஸ்து நாதரின் வாழ்க்கையுடன் இணைத்து, இக்காவியத்திலே தந்துள்ளார்.

பாயிரத்திலே, 'கையளவு திறமை கடலளவு ஆசை' என்றும்

காதைதனைப் பாடக்
கடுகளவுந் தகுதி
பேதையெனக் கில்லை......

என்றும், அவையடக்கம் கவிஞர் கூறுவது மரபு மீறாமைக்காகவே. கவிஞரிடம் கடலளவல்ல, சமுத்திரமளவு திறமையிருப்பதைக் காவியத்தைப் படிப்போர் உணர்வர்.

தமிழன்னையை விளித்து 'பதி எனது நெஞ்சில் பரதம் நீ ஆடு' என்று கவிஞர் இறைஞ்சியமையை அவள் ஏற்றுக் கவிஞர் நெஞ்சிலும், நாவிலும், கையிலும் நின்று பரதம் ஆடியிருப்பதைக் காவியம் முழுவதிலும் காணமுடிகின்றது.

அன்னை மரியாள் யூதேயாவுக்குச் செல்லும் அழகை,

மீனினைக் கண்ணிலேந்தி
மேகத்தைக் குழலிலேந்தித்
தேனினை இதழில் ஏந்தித்
தென்றலை நடையில் ஏந்தி
வானினைத் தன்னுள் ஏந்தி
வாழ்த்தினை நினைவில் ஏந்தி......

என வருணிக்கும் பாங்கு பானைச்சோற்றில் பதம் பார்க்கும் ஒரு சோற்றவிழ்.

இயேசு நாதருடன் தொடர்புடைய கதைகள் யாவற்றையும் எடுத்துரைக்கும் போது அவை புகட்டும் பேருண்மைகள், வெவ்வேறு கோணத்தில் வைத்து அவற்றைப் பார்க்கும் கவிஞரின் சமய ஞானத்தைப் படம் பிடித்துக் காட்டுகின்றன. மலைப் பிரசங்கத்தில் இடம் பெறும் ஆழ்ந்த கருத்துக்களை,

'உள்ளங்கள் கொண்டவர் உத்தமனைக் காணுவர்
மறைவான தெல்லாம் மாபரன் அறிவார்.
அளக்கும் உன் அளவால் அளந்திடப்படுவாய்.

என்பன போலச் சுருங்கிய ஒரு சில சொற்களிற் கூறும்போது வாகரை வாணன் அவற்றில் தனது முத்திரைகளைப் பதித்திருப்பதை அறிந்தின்புறலாம்.

சொற்புணர்ச்சிகள் கவிதையைத் தின்றுவிடாது மிக மிக விழிப்புணர்வுடன் கவிதைகளை யாத்துள்ள பண்பு தனியாகப் பாராட்டப்பட வேண்டியதோர் அம்சமாகும்.

கண்ணதாசனின் இயேசு காவியத்தைப் படித்தோர் வாகரை வாணனின் கிறிஸ்து காவியம் அதனிலும் ஒருபடி விஞ்சியே நிற்கின்றது என்ற கூற்றை மறுக்க மாட்டார்கள்.

கவிஞரின் தமிழாற்றல், ஆங்கிலத் தேர்ச்சி, சமயஞானம், உலகியலறிவு தொடர்ந்து நாளும் கற்றுத் தனதாக்கிக் கொள்ளும் பண்பு ஆகியவற்றைக் கடைந்தெடுக்கத் திரண்டு மேலெழுந்த வெண்ணெய்ப் பந்தே கிறிஸ்து காவியம் எனலாம்.

ஈழத்தின் தலைசிறந்த கவிஞர்களுள் ஒருவராக விளங்கும் வாகரைவாணன் அவர்கள் பல்லாண்டு வாழ்ந்து மேலும் பல ஆக்கங்களைப் புனைந்து தமிழன்னைக்குச் சூட்ட இறையருள் துணை செய்க.

**அமரர். வித்துவான் சி. குமாரசாமி, B. A.**

நல்லூர்,
*11-7-1993*

# நறுமணங்கமழும் நற்றமிழ்க் காவியம்

கிறிஸ்தவ சமய நம்பிக்கையின் அடித்தளமாகவும் இச்சமயத்தின் நடுவமாகவும் விளங்குவது ஒரு விசுவாசச் சத்தியப் பிரமாணமன்று, அன்றேல் ஒரு இலட்சியக் கோட்பாட்டு நெறியுமன்று. மாறாகக் கிறிஸ்தவ சமயத்தின் மையமாக, அச்சாணியாக அதன் தோன்றலுக்கான மூல காரணியாக விளங்குபவர் ஓர் வரலாற்று மனிதர். நசரேத்தூர் 'யேசு' என்று தம் பெற்றோரினால் பெயரிடப்பட்ட இந்த மனிதனை 'ஆண்டவர்', 'மீட்பர்', 'மெசியா', 'கிறிஸ்து என்று விசுவாச உணர்வுடன் அறிக்கையிட்டு வழிபடுதல் கிறிஸ்தவ சமய வாழ்வின் உயிரூட்டம் நிறைந்த உட்கிடக்கையாகும்.

கடந்த இருபது நூற்றாண்டு கால உலக, சமய, கலாசார, அரசியல் வரலாற்றில் ''இயேசு கிறிஸ்து' என்ற பெயர் நிலை மாறாத முக்கியத்துவத்தையும் நிரந்தரமான தனித்துவத்தையும் கொண்டுள்ளது என்பது விவாதத்திற்குரியதொன்றல்ல. கி. மு. 7 ற்கும் கி. பி 30 ற்கும் இடைப்பட்ட குறுகிய கால எல்லைக்குள் பலஸ்தீன நாட்டிலுள்ள ஓர் யூத குடும்பத்தில் பிறந்து, வாழ்ந்த இவர் அந் நாட்டின் ஆளுநர் போஞ்சியு பிலாத்து என்பவரின் அதிகாரத்தின் கீழ் சிலுவை மரணத்துக்கு உள்ளாக்கப்பட்டு கடவுளின் வல்லமையின் வெளிப்பீடாக உயிர்ப்பிக்கப்பட்டார் என்பதனை இவரது சீடர்கள் போதித்து வந்தனர் என்று வேதாகமும் கிறிஸ்தவ சமயத்தைச் சாராத ஏனைய வரலாற்றுக் குறிப்புக்கள் அடங்கிய நூல்களும் எடுத்தியம்புகின்றன. நசரேத்து யேசுவின் வார்த்தைகளும், வாழ்வியல் நோக்கும் அவர் போதித்த அறநெறிக் கோட்பாடுகளும், அன்று முதல் இன்று வரை உலக நாடுகள் பலவற்றில் அரசியல், சமூக, சமய, பொருளாதாரக் கலாசாரப் போக்குகளில் ஏதோ ஒரு வகையாலும் அளவிலும் தாக்கத்தை ஏற்படுத்தி வந்துள்ளமை உலக வரலாற்றின் அடிப்படை உண்மைகளுள் அடங்குவதாகும்.

தந்தையாகிய இறைவனின் தன்னிகரில்லாத ஊடகமாகக் கிறிஸ்து உலகிற்கு வந்தார் என்பதை மையமாகக் கொண்ட நற்செய்தி நூலின் உட்பொருள் காலந்தோறும் பல கலைஞர்களையும், கவிஞர்களையும் இன்னும் பல ஆக்கப் படைப்பாளிகளையும் ஈர்த்து வந்துள்ளமை வரலாறு கூறும் செய்தி. அவரவர் தத்தம் படைப்பாற்றல்களுகேற்ப கிறிஸ்துவின் கதையினைக் கவிதைத் தொகுதிகளாக, காப்பியங்களாக யாத்துள்ளனர். கல்சேதோன் சங்கத்தின் கிறிஸ்து இயல் குறிப்புக்கள் முதல் கண்ணதாசனின் இயேசு காவி

யம் வரை, கிறிஸ்து யேசுவின் உள்ளியல்பும், வாழ்வும் வார்த்தைகளும் உலகளாவிய ரீதியில் பல மொழி வழிக் கலாசாரங்களில் வளம் நிறைந்த பல இறையியல் - இலக்கிய ஆக்கங்களுக்கு வழிசமைத்தன. இந்த வரிசையில் நற்செய்தி நூலில் தேங்கியிருக்கும் நல் வார்த்தைகளின் நறுமணம் நாற்றிசையும் வீசிட வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் இலகு தமிழில் நமது கவிஞர் வாகரைவாணன் வார்த்துள்ள கிறிஸ்து காவியம் வரவேற்கப்பட வேண்டிய படைப்பாகும். நற்செய்தி நூல்களின் உரைப்புக்களைப் பற்றுக்கோடாகக் கொண்டு புனையப்பட்ட இக்கவிதை மாலை, இயேசுவின் வாழ்வையும் பணியையும் பல பரிமாணங்களிலும் பளிச்சிடும் பாக்களைக் கொண்டுள்ளது. நற்செய்தி நூலின் உரைநடை வார்த்தைகளுக்கு சந்தமும் ஓசையும் தந்திடும் இக்கவிகைளில் பலஸ்தீன நாட்டினதும் ஜெருசலேம் நகரத்தினதும், ஏனைய நகர்ப் புறங்களினதும் இயற்கை எழில் மிகவும் இயல்பான வகையில் இனிமையாக இணைக்கப்பட்டுள்ளமை கவிஞரின் கற்பனை வளத்திற்குச் சான்றாக அமைகின்றன. இயேசுவின் பாடுகளின் உரைப்பினை அடியொற்றி எழுந்த கவிதைகள் எண்ணுக் கணக்கில் குறைவேயாயினும் எண்ணக் கணக்கில் அல்ல,

யாப்பமைதியும், ஓசைச் சிறப்பும் அர்த்தம் மிக்க சொல் வளமும் ஒருங்கிணைந்து நூலாசிரியரின் கவித்துவத்திற்கு மெருகூட்டுகின்றன. நான்கு நற்செய்தி நூல்களிலும் தேக்கப்பட்டுள்ள இயேசு கிறிஸ்துவின் அறவியல் படிப்பினைத் தாங்கி வரும் உவமைகள், புதுமைகள், உவமான உவமேயங்கள் அடங்கிய உரைப்புக்களையும் பொருண்மைகளையும் ஏனைய வாழ்வறநெறி படிப்பினைகளையும் கிறிஸ்துவின் தனித்துவம் மிக்க மனிதநேய ஆளுமையையும் மனங்கொண்டு யாக்கப்பட்ட இப்பாக்களில் பொருள் தெளிவும் கருத்தழுத்தமும் குறைவின்றிக் காணப்படுகின்றன. கற்றவரும், மற்றவரும் படித்தும் பாடியும் பயன் பெறும் வண்ணம் இலகுவான நடையில் எழுதப் பெற்றுள்ள பாக்கள், காலத்தால் அழியாததும், வரலாற்றின் ஓட்டங்களை வளமான பாதையில் வரட்சியுறாமல் வலுப்பெற செய்கின்றனவுமான கிறிஸ்துவின் வாழ்வையும் வார்த்தைகளைஙும் தாங்கி நிற்கின்றன. இத்தகைய இக்காவியத்தினை தமிழ் உலகம் வரவேற்றுப் பயன் பெறுவதாக.

**கலாநிதி. ஏ. ஜே. வி. சந்திரகாந்தன் அடிகள்**

தலைவர்
கிறிஸ்தவ · இஸ்லாமியத் துறைகள்,
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,
திருநெல்வேலி.

# தமிழ்க் கிறிஸ்தவம் தழைத்தோங்க....

கவிஞர் வாகரைவாணன் தமக்குரிய தனிப்பெரும் பாணியிலே இயேசு கிறிஸ்துவில் நடந்தேறிய இரட்சணிய மறைபொருளைத் தெளிவாகவும், இலகுவாகவும் விளங்கக் கூடிய முறையிலே தர முன்வந்ததைத் தமிழ்க் கிறிஸ்தவ உலகம் வரவேற்கிறது.

மேல் நாட்டவர்கள் இயேசு கிறிஸ்துவின் மறைபொருளைத் தங்களுடைய மொழிகளிலும் இலக்கியங்களிலும் கலை கலாசாரத்திலும் பல நூற்றாண்டுகளாக வெளியிட்டு, கிறிஸ்தவ மதத்தையும் தங்களுடைய கலை கலாசாரத்தையும் இணைத்து ஒன்றாக வளர்த்து வந்தனர். 16-ம் நூற்றாண்டிற்குப் பின் கிறிஸ்தவம் நம்முடைய நாட்டிற்கு வந்த பொழுது அது ஒரு கலை கலாசாரத்துடன் பின்னிப் பிணைந்து வளர்ந்த ஓர் விருட்சமாகவே எம் மண்ணில் நாட்டப்பட்டது. இலத்தீன் மொழி திருச்சபையின் உத்தியோக மொழியாகவும், மேற்கத்திய நாடுகளின் மெய்யியல், இறையியல் என்பன கிறிஸ்தவத்தின் அறிவுச் செல்வமாகவும், அந்நாடுகளின் கலை கலாசாரம், சங்கீதம், வழிபாடுகள் யாவும் எமது கிறிஸ்தவத்தின் ஆடையாபரணங்களாகவும் இருந்தன.

இவைகள் மத்தியிலும், முற்போக்கான, துணிவுள்ள துறவிகள் சிலர், எம் நாட்டு மொழியிலும் இலக்கியத்திலும் நற்செய்தியையும் கிறிஸ்தவ உண்மைகளையும் சரித்திர சம்பவங்களையும் விளக்கப் பெரும் முயற்சி எடுத்து இருக்கின்றனர். ஆனால் இம் முயற்சிகள் உரிய முறையில் ஊக்குவிக்கப்படவில்லை.

இந்த நூற்றாண்டில் எம்நாட்டில் வெள்ளையர்களின் ஆட்சி முறைகள் முடிவடைய, நாடு சுதந்திரம் பெற, நாட்டவர் தலைமைத்துவத்தைக் கையேற்க, திருச்சபையிலும் மேல்நாட்டு மிசனரிமார் வீடு திரும்ப, நம்நாட்டுத் திருச்சபையின் தலைமைத்துவத்தை நம்மவர் பொறுப்பு ஏற்றனர். அத்துடன் 2-ம் வத்திக்கான் சங்கம் எமது திருச்சபையும் கிறிஸ்தவத்திற்கு ஒரு தனிப்பெரும் வளமூட்டுதல் செய்ய வேண்டும் என்று விரும்பியது. இதற்கிணங்க, அண்மையில் பல முயற்சிகள் தமிழ்க்கிறிஸ்தவ சமூகத்தில் எடுக்கப்பட்டு வருகின்றன. இவைகளில் ஒன்று வாகரைவாணனின் முயற்சி.

இறைவனின் செய்தியை, மக்களை உய்விக்கும் கலை வடிவங்களுடன் கொடுப்பது, கலையின் செல்வத்தை இறைவார்த்தைக்கு அளிப்பதாகவும், வார்த்தையின் தெய்வீகத்தைக் கலைக்கு ஊட்டுவதாகவும் அமையும். நற்செய்தியையும் தமிழ் இலக்கிய முறைகளையும் சங்கமிக்கச் செய்து ஒன்றுக்கொன்று மெருகூட்டச் செய்யும் பணியில் வாகரைவாணன் ஈடுபட்டிருக்கிறார், இவரின் முயற்சி வளர்க. இதைப் போன்ற முயற்சிகள் பெருகுக. தமிழ்க் கிறிஸ்தவம் தழைத்தோங்குக.

**அருள்திரு. எஸ். ஜே. இம்மானுவல்**
குருமுதல்வர்
யாழ். மறைமாவட்டம்

புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை
யாழ்ப்பாணம்
இலங்கை
*22 - 01 - 94*



# வண்டமிழ்க் கவிஞன் வாகரைவாணன்

பாகுநேர் தனிப்பாடல்கள்
　　பைந்தமிழ் செழிக்கச் செய்யும்
காவிய நலும் பாடல்கள்
　　காலங்கள் பலவாய் நல்கி
பாநலம் துய்ப்போர் தம்மைப்
　　பரவசம் உறச் செய்கின்றார்
வாகரை வாணன் என்ற
　　வண்டமிழ்க் கவிஞன் நன்றே,

கற்பனை இன்பம் சேர்த்துக்
　　கருத்தொடு மரபு காத்துப்
பொற்கலந் தன்னிற் பாலைப்
　　புவியிடைத் தருவார் போல
அற்புதக் கவிதை தன்னை
　　அவனியோர் மகிழும் வண்ணம்
பற்பல ஆண்டாய் நல்கும்
　　பண்பினார் வாழ்க நீடே.

மன்னிப்பும் கருணை தானும்
　　மாண்பு சேர் ஈகை தானும்
நன்மை சேர் மானுடத்தின்
　　நாடியே என்று கூறும்
பன்னலம வாய்க்கப் பெற்ற
　　பகாரும் கிருத்துவத்தின்
தன்மையை விளக்கும் வணணம்
　　தண்டமிழ்க் கவிதை செய்தார்

கொக்குவில்.
10-07 94

புலவர். ம பார்வதிநாதசிவம்

# கபாடகோபுரம்

உலகெலாம் போய்ப் படைப்பிற்கெல்லாம் நற்செய்தியினை அறிவியுங்கள். (மாற் – 16 : 15)

யேசுகிறிஸ்துவின் மேற்படி ஞான உபதேசத்தை அத்திபாரமாகக் கொண்டே பாரதி சொன்னதுபோல் 'சொல்லையும் கள்ளையும் நெஞ்சையும்' சேர்த்து உருவான இந்தக் காவிய மாளிகை உங்கள் முன் எழுந்து நிற்கின்றது.

இறைமகன் கிறிஸ்துவினால் ஈர்க்கப்பட்ட மனித உள்ளங்கள் எத்தனையோ. வேற்றுமதக் கொள்கைகள் வேரோடிப்போன ஞானிகள் கூட அவரின் அருள்வெள்ளத்தில் திளைத்து அமிழ்ந்திருக்கின்றார்கள். இதற்கு ஒரு காட்டாக விளங்குபவர் சுவாமி விவேகானந்தர். அதனால்தான் பட்டி தொட்டியெல்லாம் இயேசு கிறிஸ்துவைப் பற்றி பிரசாரம் செய்யுங்கள் என்று அவரால் பகர முடிந்தது.

ஐரோப்பிய வரலாற்றின் மத்தியகாலப் பகுதியில் (கி.பி. 1450) புதுவெள்ளமெனப் பெருக்கெடுத்தோடிய சமய மறுமலர்ச்சியையும்' (Renaissance) அது தொடர்பான சீரமைப்பு இயக்கங்களையும் (Reformation Movements) ஒத்த ஒரு காலகட்டமாக இந்திய வரலாற்றில் 19-ம் நூற்றாண்டு விளங்குகின்றது.

இக் காலப்பகுதியில் உருவாகி முன்னெடுக்கப்பட்ட நவீன இந்து மதத் (Neo – Hindu ism) தின் சிற்பிகளில் ஒருவராக விளங்கும் சுவாமிஜியைப் போலவே அவரது குருநாதர் இராமகிருஷ்ண பரமஹம்சரும் கிறிஸ்துவின் அருட்கிரணங்களைப் பெற்றுப் பிரகாசித்தவர் என்பதற்கு அவரது பூசை அறையில் வைக்கப்பட்டிருந்த யேசுவின் திருவுருவப்படமே தக்க சான்று.

இவர்கள் இருவருக்கும் முன்பே கிறிஸ்தவ சிந்தனைகளால், குறிப்பாகப் புதிய ஏற்பாட்டினால் (New Testament) பெரிதும் கவரப்பட்ட ராஜாராம் மோகன்ராய் (1772 – 1833) அவர்கள் தாம் உருவாக்கிய பிரம்ம சமாஜத்தின் போதனைகளில் ஒன்றாக நான்கு சுவிஷேங்களையும் வைத்துக் கொண்டமை கிறிஸ்துவின் உயர்ந்த கோட்பாட்டில் அவருக்கிருந்த பற்றுதலை உணர்த்தப் போதுமானதாகும். இவரின் பாதையில் கிறிஸ்தவ, மேலைநாட்டுச் சிந்தனைகளின் செல்வாக்கிற்குட்பட்டவர்களில்,

மகாத்மாகாந்தி,
அரவிந்தர்

மகாகவி தாகூர்
மகாகவி பாரதி
டாக்டர் எஸ். இராதாகிருஸ்ணன்

முதலானோர் சிறப்பாகச் சுட்டப்பட வேண்டியவர்கள்.

கிறிஸ்தவம் தொடர்பாக இம் மகான்களில் நிலைப்பாடு ஒரு புற மிருக்க,

இந்தியத் தத்துவங்களில் மிக முக்கிய இடத்தை வகிக்கின்ற வேதாந்தம் சைவ சித்தாந்தம் ஆகிய இரண்டும் கிறிஸ்தவ இறை இயற் கோட்பாட்டோடு நெருக்கமானவை என்னும் உண்மைகளை அத் தத்துவங்களை ஆழ்ந்து கற்ற மகான்கள் நமக்குத் தெளிவு படுத்தியிருக்கின்றார்கள்.

குருநானக் (Gurunanak) என்னும் மகானால் உருவாக்கப்பட்ட சீக்கிய மதத்தின் (15-ம் நூற்றாண்டு) புனிதநூலில் (Granthsahib) புதிய ஏற்பாடு, பழைய ஏற்பாட்டில் உள்ள சங்கீதங்கள் (Psalms) ஆகியவற்றையும் உள்ளடக்கியிருக்கின்றமையை வரலாறு எடுத்துக் காட்டுகின்றது. நடைமுறை இவ்விதம் இருக்க இன்னும் இந்துமதத் தவர்கள் சிலர் கிறிஸ்தவத்தை அந்நியம் என்று அடையாளம் காட்டி அதன்மீது வெறுப்பை உமிழ்ந்து கொண்டிருப்பது வேதனை யைத் தருகின்றது.

அந்நியம் என்று கிறிஸ்தவத்தை அடையாளம் காட்டும் அவர் களின் இந்த மதமும் அந்நியம் தான் என்னும் வரலாற்று உண்மை யை ஏன் மனம் கொள்ளக்கூடாது? சங்கத்தமிழ் மக்கள் வாழ்க்கை நெறிக்கும் இந்து சமயத்திற்குமிடையே உள்ள மிகப் பெரிய இடை வெளியை ஏன் எண்ணிப் பார்க்கக் கூடாது?

21-ம் நூற்றாண்டின் உதயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக் கும் நாம் சமயங்களுக்கிடையே வேண்டாத சர்ச்சைகளை உருவாக்கி இருக்கின்ற சமூக ஆரோக்கியத்தையும் கெடுத்துக் கொள்ளக் கூடாது. இவ்வெண்ணம் காரணமாகவே இந்துமத மகான்களுக்கும் கிறிஸ்த வத்துக்குமிடையிலான இறுக்கமான பிணைப்பு இங்கே எடுத்துக் காட்டப்பட்டது.

இனி, காவியம் பற்றிச் சில கருத்துக்களை முன்மொழிய விரும்பு கிறேன்.

சமஸ்கிருதத்தில் 'காவ்ய' என்னும் சொல் கவிதையைக் குறிக் கும். கவிஞனால் இயற்றப்படுவது காவியம் என்பர். காப்பியம் எனும் சொல் காவியம் என்னும் சொல்லின் திரிபு என்பர் பேராசிரி யர் எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்கள். ஆனால், இன்று தமி

ழில் காவியம் என்பதும் கவிதை என்பதும் வெவ்வேறு பொருளில் வழங்கி வருவதைக் காணலாம்.

காவியத்தின் இயல்பு பற்றி தண்டி அலங்காரம் (கி. பி. 14 – ம் நூற்றாண்டு) எடுத்துச் சொல்கிறது. இது அவரால் வடமொழியில் எழுதப்பட்ட 'காவிய தர்ச' என்னும் நூலின் மொழிபெயர்ப்பு என்று அறிஞர் உலகம் கருதும். இக்காவிய இலக்கண நூல்களால் தமிழிலக்கியங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டன என்பது உறுதி என்பர் வையாபுரிப்பிள்ளை அவர்கள். (காவியகாலம் பக் 17) பேராசிரியரின் கூற்றுக்கு நாயக்கர்கால இலக்கியங்களே நல்ல உதாரணம் எனலாம்.

தமிழ் இலக்கிய வரலாற்றில் பிற்காலச் சோழர் காலத்திலேயே காவியங்கள் பல படைக்கப்பட்டன. இதே கா ல த் தி ல் வாழ்ந்ததாகக் கருதப்படும் (3-ம் குலோத்துங்கன் காலம்) கவிச்சக்கரவர்த்தி கம்பர் படைத்த இராமாயணம் தமிழில் உள்ள காவியங்களிலெல்லாம் தலைசிறந்து விளங்குகின்றது.

சோழர் காலத்திற்குப் பின்பும் காவிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றில் இத்தாலி நாட்டுப் பெரும் புலவரான வீரமாமுனிவரால் பாடப்பட்ட தேம்பாவணியில் கம்பரையும் திருத்தக்க தேவரையும் நாம் கண்டு மகிழலாம்.

இன்றையத் தமிழ்க் கவிதையின் தந்தையாக விளங்கும் மகாகவி பாரதி படைத்துத் தந்த பாஞ்சாலி சபதம் ஓர் அருமையான காவியமாகும். இதைப்போலவே பாரதிதாசன், தமிழ் ஒளி, கண்ணதாசன், முடியரசன், கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை, நாமக்கல் இராமலிங்கம்பிள்ளை, சுத்தானந்த பாரதியார் முதலானோர் காவியம் படைத்துத் தந்த கவிஞர் பெருமக்களாவர்.

கிறிஸ்து யேசுவின் வாழ்க்கையை மையமாக வைத்து இலக்கியங்கள் சில எழுந்துள்ளன. அந்தவகையில் இலங்கையர் ஒருவரால் இயற்றப்பட்ட ஞானப்பள்ளு, கவியரசு கண்ணதாசனின் இயேசு காவியம் எஸ். அந்தோனிசாமியின்' சுடர்மணி' தஞ்சை வேதநாயக சாஸ்திரியாரின் 'பெத்தலேகம் குறவஞ்சி' ஆகியவை குறிப்பிடத் தக்கவை.

இன்றுங்கள் கைகளில் தவழ்ந்து கொண்டிருக்கும் எனது கிறிஸ்து காவியம் பாரதி குறிப்பிட்டுள்ளது போல காவியத்திற்குள்ள நயங்கள் குறைவு படாமல் எழுதப்பட்டதொன்று. இனிய ஓசை, உணர்ச்சி இவை இரண்டுமே எனது கவிதையின் அன்னை தந்தை. இவை பெற்றெடுத்த இந்தக் குழந்தையினைப் பேணிப் பாதுகாப்பது வாசகர்களாகிய உங்கள் கடமை என்று நான் சொல்லவும் வேண்டுமா?

கவியரசு கண்ணதாசனின் கவிதைகளை ஆராய்ந்து, கண்ணதாசன் ஒரு கண்ணோட்டம் என்னும் ஒரு நூல் எழுதிய திரு. ஆ. செந்தில்நாதன் எம். ஏ. அவர்கள் கவிஞரின் கவிதைகள் பற்றி இவ்விதம் எழுதினார்.

கண்ணதாசன் கவிதைகளிலுள்ள யாப்பமைப்பு இறுக்கமான இலக்கண வசதிகளுக்கேற்ப செதுக்கப்பட்டதாக இல்லாமல் இனிமையான ஓசை நயத்தால் செம்மையுற்றதாகக் காணப்படுகிறது. வேறு வகையில் கூறினால் அருமையான சந்தங்களின் பின்னணியில் அவர் பாடல்கள் யாப்பிலக்கணத்தைத் தழுவி நிற்கின்றன எனலாம்.

(பக் - 110)

திரு. செந்தில்நாதனின் மேற்படிக் கூற்று எனது கவிதைகளுக்கும் மிகப் பொருந்துவதாகும்.

கண்ணதாசன் மட்டுமல்ல, பாரதி கம்பன் முதலான கவியரசர்கள் கூட மரபிலிருந்து விலகி நின்று தமது இலக்கியங்களைப் படைத்தபோது தான் அவர்களின் மேதாவிலாசம் மிக அதிகமாகவே பிரகாசித்தது. ஆற்றல் மிக்க கவிஞர்களாக இருந்தும் மரபுச் சட்டத்தை மீற விரும்பாததால் தான் ஒட்டக்கூத்தர், காளமேகப் புலவர் முதலானோரின் கவித்துவம் காட்டில் எறிந்த நிலவானது.

மரபை அடித்தளமாகக் கொண்டு புதிய கவிதை வடிவங்கள உருவாக்கும் முயற்சியில் நான் ஈடுபட்டிருப்பதை கிறிஸ்து காவியத்தில் வாசகர்கள் கண்டுணரலாம். பழமையைப் பழிக்க வேண்டியதல்ல. அதேநேரம் புதுமையைப் போற்றும் உள்ளம் தமிழருக்கு வேண்டும்.

காவியத்தைப் படைத்தால் மட்டும் போதுமா? அதை நூலாக்கவும் வேண்டும். இதற்காக நான் பட்ட பாடு இருக்கிறதே -- அதை எழுத்தில் வடிக்க முடியாது. அதிஷ்டவசமாக ஒரு சில கத்தோலிக்க குருக்கள் எனக்கு உதவ முன்வந்தார்கள். அவர்களில் அருள்திரு. நீ. மரியசேவியர், அருள்திரு. ஏ. ஜே. வி. சந்திரகாந்தன், அருள்திரு. பிரான்சிஸ் ஜெயசேகரம் முதலானவர்களை நான் நன்றி உணர்வோடு எண்ணிப் பார்க்கிறேன்.

இக்காவியத்தை எழுதிக் கொண்டிருந்தவேளை, எங்களோடு ஓர் ஆசிரியராக, அடக்கமும் அன்பும் நிறைந்த ஒரு சான்றோராகத் திகழ்ந்த வித்துவான் திரு. சி. குமாரசாமி B. A, அவர்கள், காவியத்தைப் பலமுறை படித்து, வேண்டிய திருத்தங்கள் செய்து தந்ததோடு ஒருசிறு விமர்சனமும் எழுதித் தத்துள்ளார். அந்த இனிய மனிதர் இன்று அமரர். இதை எண்ணும்போது என் நெஞ்சம் கனக்கின்றது.

இன்னும்...

மங்கையின் நெற்றியில் இட்ட மங்கலப் பொட்டுப் போல ஓர் அணிந்துரையை அளித்திட்ட கலாநிதி ஏ.ஜே.வி. சந்திரகாந்தன் அடிகளாரை எப்படி மறக்க முடியும்?

எனது கவிதைகளோடு நீண்டநாட் பழக்கமுள்ளவரும் இலங்கையின் சிறந்த கவிஞர்களில் ஒருவருவான புலவர் பார்வதிநாதசிவம் அவர்கள் மனமுவந்து பாடித்தந்த புகழ்ச்சிப் பாடல்கள். -

யாழ். மறைமாவட்டக் குரு முதல்வரும், புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியின் அதிபருமான எஸ். ஜே. இம்மானுவல் அடிகளார் வழங்கிய பாராட்டுரை. -

கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக 'கலைவழி இறைபணி' ஆற்றி வரும் யாழ். திருமறைக் கலாமன்றத்தின் இயக்குநரும் கலாநிதியுமான நீ. மரியசேவியர் அடிகளார் நல்கிய வெளியீட்டுரை. -

இவற்றுக்கெல்லாம் எப்படி நான் நன்றி சொல்வதென்றே தெரியவில்லை. என்னையும் என் இலக்கியப் புலமையையும் மதிக்கும் இந்த அறிஞர் பெருமக்கள் முன் தலை தானாகவே தாழ்கின்றது.

இந்நூலை அச்சிட்டுதவிய குருநகர் 'அன்னை அச்சகம்' உரிமையாளர் திரு. எஸ். ஏ. அழகராசா அவர்களுக்கும் அவரது அச்சகத் தோழர்களுக்கும் என் அன்பு கனிந்த நன்றி. இந்நூலின் அட்டைச் சித்திரத்தை ஓவியர் ரமணியைக் கொண்டு வரைந்தெடுத்து அதனைக் கொழும்பில் அழகுற அச்சிட உதவிய நண்பர் திரு. வி. ஜே. கொன்ஸ்ரன்ரைன் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றி.

கவிஞனின் மனைவியாக இருப்பது கஸ்ரமான பணி என்று செல்லம்மா பாரதி போல் சொல்லாவிடினும், அதை அனுபவித்துக் கொண்டே தமது குடும்ப ஆசிரியப் பணிகளுக்கிடையே எனது கிறுக்கல்களையெல்லாம் அழகான கையெழுத்துக்களாக வடித்துத்தரும் என் இல்லத்தரசி திருவாட்டி மகேஸ்வரி அரியரத்தினம் (வாகரைவாணன்) அவர்களுக்கு நான் நன்றி சொல்லாவிடில் என் நெஞ்சே என்னை நெருப்பாகச் சுடும்.

இறுதியாக –

வாசகர்களே .....! நீங்கள் தான் நேர்மையான தராசுகள்...... நிறுத்துப்பாருங்கள். விமர்சனங்களை விருப்பத்தோடு வரவேற்கின்றேன்.

அன்பன்

22-06-1995 **வாகரைவாணன்**

# இலக்கியம் பற்றி இவர்கள்

எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சந்தம்; பொது ஜனங்கள் விரும்பும் மெட்டு - இவற்றினையுடைய காவியமொன்று தற்காலத்திலே செய்து தருவோன் நமது தாய் மொழிக்குப் புதிய உயிர் தருவோனாகின்றான். ஓரிரண்டு வருஷத்து நூற்பழக்கமுள்ள தமிழ் மக்களெல்லோருக்கும் நன்கு பொருள் விளங் கும்படி எழுதுவதுடன் காவியத்துக்குள்ள நயங்கள் குறைவுபடாம மலும் நடத்தல் வேண்டும்.

— **மகாகவி பாரதி**
(பாஞ்சாலி சபதம் முன்னுரையில்)

தற்காலத்தில் நமது கண்ணெதிரே மரபு மாற்றம் நிகழ்கிறது. பழைய செய்யுள் வகைகள் மறைந்து வருகின்றன. மறுமலர்ச்சிக் கவி ஞர்கள் சிந்து வகைகளை இயற்றித் தமது கவித்துவத்தைப் புலப் படுத்தி வருகின்றனர். இவர்களுக்கு வழிகாட்டியாய் விளங்கிய தேசிய கவி பாரதியும் சிந்து வகைகளையே பெரும்பாலும் பேணியிருக்கின் றார்.

— **பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை**
(காவிய காலம்: பக்கம் 344)

ஒரு சமுதாயத்தில் வாழும் மக்கள் புதிய கருத்துக்களையும் தழு வத் தொடங்கிப் பழையனவற்றைக் கைவிடுவதால் அவர்களின் வாழ்க் கைப் போக்கில் மாற்றமுண்டாகின்றது. அது இலக்கியப் போக்கை யும் ஓரளவிற்கு மாற்றி விடுகின்றது. சில சமயம் ஆற்றல் மிக்க இலக் கிய ஆசிரியனும் ஒரு மொழியின் இலக்கியப் போக்கில் பெரிய மாற் றங்களைப் புகுத்தி விடுகின்றான்.

— **பேராசிரியர் வி செல்வநாயகம்**
(தமிழ் இலக்கிய வரலாறு நூன்முகம் பக்கம் 10)

தொல்காப்பியமும் பெரிய அளவில் செய்யுளியல் என்று வகுக் கின்றது. இவ்வியலில் கவிதை இயற்ற இலக்கணம் பேசப்படுகிறது. கவிதையை அனுபவிப்பதற்கும் அதன் குறைவு நிறைவுகளை ஆராய வும் இச் செய்யுளியல் பயன்படாது. பின்னர் வந்த இலக்கணங்க களும் கவிதையை அனுபவிப்பது எவ்வாறு என்பது பற்றி ஒன்றுங் கூறவில்லை.

— **தமிழறிஞர் திரு. அ. ச. ஞானசம்பந்தர், எம். ஏ.**
(இலக்கியக்கலை முன்னுரை பக்கம் 8)

இலக்கணமின்றிச் சிறந்த கவிதையை எந்த மொழியிலும் இயற்றலாம். வடமொழியிலும் இலக்கணம் சோபையை (அழகினை) அளிப்பதற்குப் பதிலாக கவிதையின் அழகைப் பாதித்தும் உள்ளது.

**— பேராசிரியர் வி. சிவசாமி**
(சமஸ்கிருத இலக்கியச் சிந்தனைகள் பக்கம் 162)

ஆபரணம் எந்த வடிவிலும் இருக்கலாம். அது பொன்னால் செய்யப்பட்டதா? இல்லையா என்றுதான் பார்க்க வேண்டும்.

**— பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை**

பாரதியின் குயிற்பாட்டை எந்தப் பிரபந்த வகையாகக் கொள்வது? புதுமைப் பித்தனின் கவிதைப் பரிசீலனைகளை பிச்சமூர்த்தியின் புதுக்கவிதைகளை எந்த யாப்பில் அடக்குவது?... ஒவ்வொரு புதுப் படைப்பையும் அதனதன் தகுதி நோக்கியே ஆராய்ந்து மதிப்பிட வேண்டியதாகின்றது.

**— பேராசிரியர் க. கைலாசபதி**
(இலக்கியமும் திறனாய்வும் பக்கம் 115)

டி. எஸ். எலியட் சொல்லுகின்ற மாதிரி மனசில் பசையுடனும் பார்வையில் பூவிழாமலும் இருக்கிறவனுக்குத்தான் கையில் கிடைத்தது காகிதப்பூவா, நிஜப்பூவா என்பதை உணர்ந்து கொள்ள முடியும்.

**— புதுமைப் பித்தன்**

He (Kamban) made ever new experiments in metre and Verse and Produced a harmonoy never achieved before. He set up in fact a new tradition which began to find followers

**— Professor S. Vayapuripillai**
(Kampan kaviyam – Page 162)

Every great writer it has been well said brings one absolutely new thing into the world - himself; and it is Just because he puts this one new thing into what he writes that his work bears its own special hall - mark and has something about it which makes it unlike the work done by anyone else.

**— William Henry Hudson**
**(An out line History of English literature Page - 2)**

தமிழ் மொழியானது கம்பரின் கைகளில் சொக்கத் தங்கத்தைப் போல இழுத்த இழுப்புக்கு வந்துள்ளது. கம்பர் தமக்கு விருப்பமான முறையில் எல்லாம் இலக்கண வரம்பை மீறியும் எழுத்தாட்சியையும், சொல்லாட்சியையும் மாற்றிக் கொள்ளக்கூடிய ஆற்றலையும் அதிகாரத்தையும் பெற்றிருந்தார். அதனால், கவிச் சக்கரவர்த்தி என்ற ஒரு பாராட்டும் கிடைத்தது.

**— பேராசிரியர் கே. கே. பிள்ளை**
(தமிழக வரலாறு - மக்களும் பண்பாடும் பக்கம் 348-349)

எல்லாருக்கும் எக்காலத்துக்கும் பொதுவான சருவரோக நிவாரணி ஒன்று இல்லவே இல்லை. ஆகையினால் தான். அச்சருவரோக நிவாரணி தனது சட்டைப் பைக்குள்ளேயே உண்டு என்ற பிரமை மறைப்போடு பேசுகிற பண்டிதம் நிகழ்கால எழுத்திலே தலையிடத் தொடங்கும்போது எல்லை கடந்து அத்துமீறி நுழைந்து அடாத்துச் செய்கிறது என்று கூறுதல் வேண்டும்.

**— இ. முருகையன்**
(இன்றைய உலகில் இலக்கியம் பக்கம் 76-77)

## இறை வணக்கம்

கையளவு திறமை
 கடலளவு ஆசை
மையளவு பெய்யும்
 மழையளவு புலமை
பையளவு கொள்ளும்
 பண்டமெனக் கவிதை
வையளவு விஞ்சும்
 வானவனின் காதை

காதைதனைப் பாடக்
 கடுகளவுந் தகுதி
பேதைஎனக் கில்லை
 பெருகிவரும் ஆசைப்
போதைதனில் வீழ்ந்து
 புலம்புகிறேன் இதனைத்
தாதைநீ ஏற்றுத்
 தந்தருள் செய்திடுவாய்

# அன்னை மரி வணக்கம்

தொழுதனன் தாயே நின்னைத்
துணையென வருவாய் என்றன்
எழுதுகோல் தன்னில் நீயே
இருந்தருள் செய்வாய் அம்மா
பழுதது நேரா வண்ணம்
பயன்தரு நூலைக் காப்பாய்
பொழுதது காலை போலும்
பொலிவுற வாழவேண்டும்.

அன்னையே மரியே நானும்
அறிவிலி அதனால் தானே
உன்னையே பிடித்தேன் வேறு
ஒருவரைக் கண்டேன் இல்லை
கண்ணையே போலும் தெய்வக்
காவியம் செய்தேன் இந்த
மண்ணையே வெல்ல வேண்டும்
மாமரி அருளு வாயே


இறைமகன் கதையைத் தானே
இயற்றினேன் ஆசையாலே
குறைகுடம் அம்மா நானும்
குழந்தையின் செயலென் றெண்ணி
நிறைகுட மாகச் செய்வாய்
நிமலனின் தாயே என்றன்
முறைதனைக் கேட்பாய் என்றும்
முத்தமிழ் வாழ வேண்டும்.

# தமிழ் வணக்கம்

பொதிகை மலைப் புதல்வி
    பூந்தென்றற் காற்றே
நதியெனவே மெல்ல
    நடை பழகும் குமரி
கதியெனவே உன்றன்
    காலடியில் வீழ்ந்தேன்
பதியெனது நெஞ்சில்
    பரதம் நீஆடு

ஆடுநீ பாவாய்
    அதற்கேற்ப நானும்
பாடுவேன் தமிழில்
    பழம்போல இனிக்க,
நாடுவார் மக்கள்
    நாதனவன் காதை
கூடும் வரைபடித்துக்
    கொள்ளுவார் பயனே

# முதலாம் பாகம்



## வானம் இறங்கி வருகின்றது

# வாக்கு

ஆதியில் வாக்கவர் இருந்தார்
அவ்வாக் காண்ட வரோடு
சோதி ஞானச் சுடராம்
சுயம்பு ஆக இருந்தார்
மேதினி உயிர்கள் யாவும்
மேலவன் ஊடாய்த் தோன்றும்
கோதிலா அவரிடம் என்றும்
குன்றிடா ஆவி இருக்கும்

ஆவி அதுவே ஒளியாம்
அனைவர்க் கும்மூல மாகும்
மேவிய இருளில் மிளிரும்
மிஞ்சிடும் இருளது தோற்கும்
ஏவிய சான்றோன் ஒருவன்
இயம்புவார் அருளப்பர் என்று
கூவி அழைத்துச் சொல்வார்
குன்றா ஒளியின் சாட்சி

என்வழியாக அவரை
ஏற்பீர் என்பார்; எனினும்
விண்ணொளி அல்லர்! அவரும்
விளங்கிடுமொளியின் சாட்சி
ஒண்ணொளி அவரேயாவர்
உயரிய அந்த வாக்கு
மண்ணில் அனைவரும் ஒளிர
மார்க்க மானது அறிக!

உலகினில் இருந்தது வாக்கு
ஒருவரும் அறிய வில்லை
இலகிடும் அவரின் பேரில்
என்றுமே நம்பிக்கை வைப்பார்
அலகிலா அருளைப் பெறுவார்
ஆண்டவன் மக்கள் ஆவார்
குலமது வாழ மனிதக்
குழந்தையாய் வந்தவர் அவரே

மனு உருவான அவரின்
மாட்சிமை யாவும் கண்டோம்
அனைத்தும் அவரது தந்தை
அருளிய கொடைகள் அன்றோ?
வனத்தில் வாழும் முனிவன்
வாயது திறந்து சொன்னான்
எனக்குப் பின்னவர் வருவார்
என்னிலும் உயர்ந்தவர் என்றே

(வேறு)

பூரணன் அவரிடமிருந்து
பொலிந்திடும் அருளைப் பெற்றோம்
காரணன் அவரே யார்க்கும்
கருணையும் உண்மையுமாவார்

# பழம்பெரும் பலஸ்தீனம்

பண்டு புகழ்சூடும்
    பலஸ்தீன மண்ணில்
உண்டு மூநாடு
    ஒன்றதனை யூதர்
கொண்டு தம்வீடாய்க்
    குடி வாழ அதனை
மண்டு மிருள்நெஞ்ச
    மன்னனவன் ஆள்வான்!

மன்னனவன் நித்தம்
    மதுநாற்றம் வீசக்
கன்னியர்கள் அணைப்பில்
    கண்மூடிக் கிடப்பான்
அன்னவனின் நாட்டில்
    அருளாளர் ஒருவர்
தன்பணியாம் தெய்வத்
    தவப்பணியே செய்வார்

சக்கரியாஸ் என்னும்
    சற்குருவாம் அவரே
ஒக்கலெலாம் போற்றும்
    ஒருநல்ல மனிதர்
தக்ககுண மனைவி
    தண்ணிழலைப் போல
எக்கணமும் தேவன்
    ஏவற்படி வாழ்வார்

ஆண்டுபல கடந்து
அனுபவத்திற் கனிந்து
நீண்டபெரு வாழ்க்கை
நிகழ்த்துகையில் இணைந்து
ஆண்டவரின் முன்னம்
ஆனபணி செய்ய
மீண்டுமவர் பேரில்
வீழுமொரு சீட்டு

கோவிலுளே சென்று
குறித்தபடி சீட்டில்
தூபமது காட்டும்
தொண்டாற் றும்போது
தேவனவன் தூதன்
தேர்ந்தவுரை சொல்வான்
பூவுலகம் இந்தப்
புதுமைதனை அறியா!

இன்னுஞ் சிலநாளில்
இனியதொரு மகனை
உன்னன்பு மனைவி
உதரத்தில் தரிப்பாள்
அண்ணலவன் தன்னை
அருளப்பன் என்பாய்
மண்ணுலக மெல்லாம்
மகிழ்ச்சிக் கடலோடும்

தாயவளின் வயிற்றில்
தரித்திருக்கும்போது
தூயநல் ஆவி
சொரியுமருள் மழையில்
தேயனவர் நனைவார்
நிமலனவன் பக்கம்
ஆயனென ஆட்டை
அவரிட்டுச் செல்வார்.

கிண்ணமது ஏந்தார்
    கிறுகிறுக்கும் மதுவை
எண்ணியவர் கொள்ளார்
    இறைவனவன் வழியை
வண்ணமுறச் செய்வார்
    வருநிகழ்வு சொன்ன
அண்ணலவர் எலியாஸ்
    ஆகஅவர் திகழ்வார்

தூதனுரை கேட்டுச்
    சொல்ல வொண்ணா வியப்பில்
பேதலித்துப் போவார்
    பெருமானின் தொண்டர்
ஏதிது? மனைவி
    என்னைப் போல் வயதில்
மூதடைந்த பெண்ணே
    முடியுமோ? என்பார்

ஈங்கிறைவன் உரையை
    ஏற்காத நீயும்
மூங்கையன் ஆவாய்
    முகிழ்க்கும்வரைஉண்மை
ஆங்கிதனைச் சொல்லி
    அத்தூதன் மறைந்தான்
பாங்குடனே பேசும்
    பான்மையினை இழந்தார்,

# திருமண ஒப்பந்தம்

திருமணப் பேச்சுக்காகச்
 சேருவார் பெரியோர் எல்லாம்
ஒருமனமாவான் சூசை
 ஒன்றியே போவாள் மேரி
அருமண நிகழ்வுக் கான
 அடித்தளம் அதனைக் கண்டு
நறுமண வாழ்த்துப் பூக்கள்
 நல்குவார் இனிக்கத் தானே.

மணவுரை முடிந்த பின்னால்
 மனையினில் விருந்துக்காக
இனசனம் கூடு மங்கே
 எளிய நல் ஊணைத் துய்த்து
மனமது மகிழச் சொல்வார்
 மற்றொரு குறையும் காணார்
தனமது இல்லாச் சூசை
 தரமதன் படியே யாமே.

# வானவன் வாழ்த்து

திங்கள் ஆறாகும்
திருத் தூதன் இந்த
மங்களமும் பாடி
மனமெல்லாம் நிறையும்

இன்னுமொரு நிகழ்வு
இதுபோல நடக்கும்
பன்னிரண் டாண்டுப்
பாவையவள் வாழ்வில்

நசரேத் தெனுமொரு
நல்லூராம் ஆங்கே
இசையுற வாழ்ந்திருக்கும்
ஏந்திழையின் குடும்பம்

கோயிலென விளங்கும்
குடும்பமதன் விளக்காய்த்
தூயமரி ஒளிர்வாள்
துதிக்குமொரு தோற்றம்

கன்னியவள் ஓர்நாள்
காலை இளநேரம்
தன்னந் தனியாகத்
தன்கருமம் செய்யக்

கடவுளவன் தூதன்
கண்களிலே தெரிவான்
நடப்ப தென் னென்று
நங்கை திகிலடைவாள்

தூதனவன் சொல்வான்
தூயவளே இந்தப்
பூதலத்தின் தேவன்
பொங்கு மருளாலே

அரிய மகவொன்றை
அன்புடனே பெறுவாய்
பெரியவராய் எவர்க்கும்
பேரரசு செய்வார்.

யேசுவென அவரை
இகமெலாம் அழைக்கும்
வீசுபுகழ் தாவீது
வீற்றிருந்த அணையைப்

பரம பிதா அவர்க்குப்
பாசமுடன் தருவார்
இரகசியம் எதுவும்
இதிலொன்று மில்லை

முடிவறியா ஆட்சி
முறையுடனே புரிவார்
கொடிமலரே; இதனைக்
கொள்ளுநீ என்றான்

தூதனவன் வார்த்தை
தோகையவள் கேட்டு
ஈதெனக் காதல்
எங்ஙனமோ? என்றாள்

மங்கையவள் வினவ
மறுமொழியாய் அவனும்
பங்கமின்றி அந்தப்
பரிசுத்த ஆவி

நாடி வர நின்மேல்
நங்கை கரு வுறுவாய்
ஈடிணையே இல்லா
இறைவனருள் என்றான்

வானவனின் உரையை
வண்ண மயிலேற்று
நானடிமை என்றாள்
நாதன் உதித்தானே!

# உறவைத் தேடி....

தெள்ளிய உள்ள மாகத்
திருவருள் வாசம் வீச
வெள்ளிய பனியைப்போல
விளங்கிடும் வதனமாக
விள்ளிய அமுதம் என்னும்
விரும்பிய உறவை நாடி
ஒள்ளிய மரியா ளென்பாள்
ஊரயல் செல்லு வாளே.

மீனினைக் கண்ணில் ஏந்தி
மேகத்தைக் குழலில் ஏந்தித்
தேனினை இதழில் ஏந்தித்
தென்றலை நடையில் ஏந்தி
வானினைத் தன்னுள்ஏந்தி
வாழ்த்தினை நினைவில் ஏந்திக்
கானினை மலைகள் எல்லாம்
கடந்தவள் கால்கள் செல்லும்.

தனியவள் செல்லக் கண்ட
தையலின் சொந்தக் காரர்
கனிமொழி கிளிகள் வண்ணக்
கலாபங்கள் புறாக்கள் எல்லாம்
மணியவளோடு போகும்
மரஞ்செடி கொடிகள் எல்லாம்
பனியிளங் காலைப் பூவைப்
பாயென விரிக்கு மம்மா!

இளையவள் நடையைப் பார்த்து
எழுநதிக் கரையி னோரம்
பழகிடும் திரையின் கூட்டம்
பன்முறை தவறி வீழும்
வளைதனில் வாழும் நண்டு
வந்திதைப் புதினம் பார்க்கும்
கழையென அழகுத் தோளாள்
கண்டிதை நாணிப் போவாள்.

நிலமகள் நெஞ்சின் மீது
நெடியதோர் ஆரம் போலச்
சலசலத் தருவி வீழும்
சந்தனக் காற்று வீசும்
மலையதன் ஊரினூடே
மரியவள் செல்லும் வேளை
பலபல காட்சிப் பெண்கள்
பார்வையைக் கவருவாரே.

வாடிய தேது மில்லை
வளந்தரு மரங்க ளெல்லாம்
மூடிய இலையி லென்றும்
முதுமை யைக் காணவில்லை
சூடிய பூக்கள் எல்லாம்
சோர்ந்துமே குவிய வில்லை
கூடிய அழகுத் தோட்டம்
கும்பிடும் கைகள் கோடி.

ஆடிய தென்றற் காற்று
ஆயிழை மரியாள் தம்மைத்
தேடியே தழுவிக் கொள்ளும்
திருமகள் திணறிப் போவாள்
ஓடியே விலகப் பார்ப்பாள்
ஒளியிடைத் துவளும் மேனி
நீடிய வியர்வை யாற்றில்
நீந்திடும் படகைப் போல

விண்ணினைப் பிளந்தவாறே
    விரைந்திடும் கலத்தைப் போல
கன்னியின் உள்ளம் செல்லும்
    காலது சோர்ந்த போதும்
பெண்ணவள் வயதில் மூத்தாள்
    பேரருள் தாயைக் கண்டாள்
தன்னிரு கையை நீட்டித்
    தாவியே யணைத்துக் கொள்வாள்

இனியவள் அணைப்பில் தானே
    இறுகிய மரியாள் நெஞ்சம்
பனிமொழி வாழ்த்துக் கூறும்
    பாவையின் வயிற்றில் பிள்ளை
துனியறத் துள்ளும் அந்தத்
    தூய நல்லா வியாலே
தனிமொழி பகர்வாள் தேவ
    தாய்மரி மகிழத் தானே

மங்கையர் திலகம் நீயே
    மாசிலாக் கனியும் வாழ்க
இங்குநீ வந்த தென்னை?
    என்னுயிர்த் தேவ னன்னை
தங்கமுன் வாழ்த்தி னாலே
    தவமகன் துள்ள லானான்
பங்கமே இல்லை அந்தப்
    பரமனை நம்பினாலே.

அம்மொழி காதில் வீழ
    அன்னையும் குழையச் சொல்வாள்
எம்மனம் போற்றும் வானத்
    தீசனே எளியோர் மீது
தம்மனம் வைக்க லானார்
    தாழ்ந்தவர் உயர லானார்
அம்புவி யறியச் சொல்வேன்
    அடிமையை ஆட்கொண் டாரே.

பரமனுக் கஞ்சி வாழும்
பரம்பரை தொடரும் போது
இரங்குவன் ஏழைக் கெல்லாம்
ஏற்றமே தருவன் செல்வர்
கரங்களை வெறுமையாக்கிக்
காட்டுவன் வலியோர் தம்மை
அரசணை தன்னை விட்டு
அகற்றுவன் கர்வந் தீரும்.

முன்னவர்க் குரைத்தாற் போல
முதுகுல யூதர் மீது
இன்னருள் கொண்டான் என்றும்
இறையவன் நாமம் தூய்மை
பொன்மயில் மரியாள் இந்தப்
புகழ்மொழி வாழ்த்துக் கூறித்
தன்னவள் இல்லம் தன்னில்
தங்கினாள் மூன்று மாதம்.

# அருளாளர் அருளப்பர்

பேரிளம் பெண்ணின் வாழ்வில்
பேறது நெருங்கும் வேளை....
ஓரெழில் மகனைப் பெற்றாள்
உற்றவ ரெல்லாம் தந்தை
பேரினை இடுவீர் என்பார்
பெற்றவள் மறுத்துச் சொல்வாள்
ஆருயிர் மகனின் நாமம்
அருளப்பர் அதனைக் கேட்டோர்.

இப்பெயர் போலு முண்டோ
எம்மவர் இனத்தில் முன்னம்?
அப்பனை அறிவோ மென்று
அவரிடம் சமிக்கை செய்ய
அப்பரன் சொன்ன பேரை
அவரொரு பலகை வாங்கி
ஒப்பினார் எழுத்தின் மூலம்
உறவினர் வியப்பில் மூழ்க.

அக்கணம் நீங்கிப் போகும்
அவரது ஊமைத் தன்மை
சக்கரி யாசின் வாயில்
சரமென வார்த்தை நீளும்
மக்களுக் கெல்லாம் அச்சம்
மலையென நெஞ்சில் மூளும்
திக்கெலாம் போற்றுந் தேவன்
திருவடி வணங்கிச் சொல்வார்.

தேவனும் வந்தார் இங்கே
தேடித்தம் மக்கள் தம்மைத்
தாவிதின் குலத்தில் தானே
தாரணி மீட்கச் செய்தார்
தூவிய பகையைத் தூர்த்துத்
துணிவினை நெஞ்சில் மூட்டிப்
பூவிலே வாழச் செய்த
புனிதரின் நாமம் போற்றி!

அன்றொரு காலஞ் செய்த
அழிவிலா ஒப்பந்தமாம்
நின்றிடும் நெஞ்சந் தன்னில்
நேரிலே சொன்ன சொல்லும்
இன்றதன் வழியே நாமும்
இறையவன் பணிகள் செய்வோம்
நன்றொரு வார்த்தை சொல்வேன்
நனியிளம் மகனே கேளாய்!

(வேறு)

வருபவர் வாக்கைநீ பகருவாய்
வழியதை ஆயத்தம் பண்ணுவாய்
இருளிலும் மரணத்தின் நிழலிலும்
இருப்பவர் ஒளிபெறச் செய்குவாய்
அருள் மழைத் தாரைநீ சொரிகுவாய்
அமைதியின் வழியிலே நடத்துவாய்
கருணையங் கடவுளின் ஏவலால்
கதிரொளி வானத்தில் தோன்றுமே

# ஐயம் தீர்ந்த ஐயன்

(வேறு)

சூசை எனும் நாமம்
சொல்லுமொரு சான்றோன்
மாசு மறுவில்லா
மரியா ளின்அன்புக்

கரம் பற்றி வாழக்
காத்திருந்த போது
திறம்மா றிப்போன
செய்தி தனை அறிந்து

பெண் மணி யாம்அவளைப்
பிரிவ தெனஎண்ணிக்
கண்மூடித் துயில்வான்
கனவொன்று தோன்றும்

கனவு தனில் வந்த
கடவுளவன் தூதன்
அனைத்துமுரை செய்து
அவனையம் தீர்ப்பான்

ஐயமெலாம் தீர்ந்த
ஐயனவன் தனது
பொய்யறியாத் துணையைப்
பூவெனவே ஏற்பான்.

## அகஸ்து சீசர் ஆணை

உலகெலாம் துதிக்கும் மன்னன்
ஒண்புகழ் அகஸ்து சீசர்
அலகிலாப் பெருமை யோடு
அறைகுவான் முரசம் எங்கும்
குலமெலாம் கணக்குக் காகக்
கூடிட வேண்டும் இந்த
நிலமெலாம் என்பான் மக்கள்
நெஞ்சினிற் பதித்துக் கொள்வார்

அண்ணல் நம்சூசை தாமும்
ஆணையைச் சிரமேற் கொண்டு
முன்னவர் வாழ்ந்த பூமி
முதுபெரும் யூதா தேசம்
கன்னியைக் கூட்டிக் கொண்டு
கழுதையிற் பயண மாவார்
அன்னவள் குழந்தைப் பேறு
அண்மிக்கும் நேர மாமே!

# பெத்தலேகம் நோக்கி.....

மழையது பொழியுங் காலம்
மண்ணது குளிருங் காலம்
வளையவே வீசுங் காற்று
வாடையென் றோதுங் காலம்
குழைமரந் தானும் அந்தக்
கூதலில் நடுங்குங் காலம்
விளைநிலம் எல்லாம் பச்சை
விரிஎழில் காட்டுங் காலம்.

மாரியின் ஆட்சிக் காலம்
மனமது மகிழும் வண்ணம்
பாரியைப் போலும் அள்ளிப்
பரிசுகள் பொழியுங் காலம்
சூரியன் துயிலுங் காலம்
சூழ்இருள் மேவுங் காலம்
ஏரிகள் குளங்கள் எல்லாம்
எழுந்தலை ஆடுங் காலம்.

நிலையது தெரிந்த போதும்
நெடியதோர் பயணம் என்று
தலைமகன் உணர்ந்த போதும்
தையலை அழைத்துக் கொண்டு
குலமகன் ஆண்ட நாடு
கூறுமோர் கிராமம் நண்ணிப்
பலபல எண்ணம் தோன்றப்
பரனடி தொழுது செல்வார்.

சிறியதோர் கழுதை மீது
 சேயிழை அமர்வாள் அன்புக்
குரியவன் சூசை ஆங்கு
 ஒன்றியே நடப்பான் மெத்தப்
பெரிய தோர்கூட் டமாகப்
 பெத்லேம் நோக்கி மக்கள்
அரியதாம் கதைகள் கூறி
 அவ்வழி தொடருவாரே.

பற்பல கதைகள் பேசிப்
 பாரினை மீட்கும் தேவன்
உற்பவக் காலம் பற்றி
 ஓர்பெரும் விவாதம் செய்து
கற்பனை உண்மை யெல்லாம்
 கலந்தவர் பேசிச் செல்வார்
பொற்புறு தேவ மாதா
 பூரித்துப் போவாள் அம்மா.

பகலிர வாக நீளும்
 பயணமும் முடியும் போது
அகலிள விளக்குப் போல
 அழகிய ஊரும் தோன்றும்
புகலரும் காட்சி அந்தப்
 புராதனக் கிராமஞ் சூழ
சகலரும் சுவைப்பார் கண்டு
 சாரலிற் குளித்த வாறே.

குன்றதன் மேலே தோன்றும்
குறையறு கிராமந் தன்னை
நின்றுமே பார்ப்பார் சூசை
நேரிழை யாளும்சேர்ந்து
நன்றவர் பார்த்துக் கொண்டே
நடந்தவர் வேகத் தோடு
சென்றனர் ஊருக் குள்ளே
சிரித்திடும் மாலைப் போது!

(வேறு)

அந்திப்பூ மலரும் ஆகாயக் குளத்தில்
சுந்தரமதிலே சொக்கும் மனமெல்லாம்
விந்தைப்பூ அதனை விழிகளாற் பருகி
அந்தப்பூ விழுமுன் அவரில்லம் சேர்வார்

சத்திரங்க ளெல்லாம் சனநெரிசல் அதனால்
பத்திர மாய்த் தங்கப் பாவையவள் ,மரியாள்
எத்திசையில் தானும் எவ்வீடும் இல்லை
சித்தமது என்று செப்புவார் சூசை.

இடந்தேடி எங்கும் ஏங்கு மனத்தோடு
குடிலொன்றைச் சூசை குடும்பமது கொள்ளும்
நடந்த களையாற நங்கையவள ஆங்கே
உடல்தன்னைச் சாய்ப்பாள் ஒடிஇருள் சூழும்.

# யேசு நிலா

மைக்கோல மேக
மழைபொழியும் மாதம்
பொய்க்கோலங் களையப்
புனிதன் அவதாரம்

பெத்லேகம் என்னும்
பேரறியாக் கிராமம்
முத்துநிலா அங்கே
மோகனமாய் எழுந்தான்

தளிர்க்கொடியில் பூத்த
தாமரையோ அன்ன
விழியெல்லாம் அள்ளும்
விமலனவன் வதனம்

குறுகுறுத்துப் பார்க்கும்
குவளைமலர்க் கண்கள்
கருகருத்த புருவம்
கணைவில்லைப் போல

பவளம்போற் சிவந்த
பால்நாறும் இதழ்கள்
தவழுமந் நகையில்
தத்துவமே தோன்றும்

சின்னஞ்சிறு கைகள்
செங்கீரைத் தண்டு
அன்னமதன் தூவி
அழகுமலர்ப் பாதம்.

# கோயிலான குடிசை

வீடுதனைத் துறந்த
விண்ணுலகின் அரசன்
மாடுகளின் குடிலை
மாளிகையாய் ஏற்றான்

அற்புதமாய்ப் பிறந்த
ஆசைமகன் பார்த்துப்
பொற்புடைய மாதா
பூரித்துப் போவாள்

வைக்கோலில் உறங்கும்
வானவனைப் பார்த்துக்
கைக்கோலன் சூசை
கண்களவை கனியும்

குடிசையிலே பிறந்த
கொற்றவனைச் சுற்றிக்
குடிமக்க ளாகக்
கோவினமே நிற்கும்

மந்தையவை எல்லாம்
மாதவனை வணங்கிச்
சொந்தமது காட்டும்
சோதரனைப் போல

## தேவதூதரின் செய்தி

தேவமகன் பிறப்பைத்
தேவதூதர் எல்லாம்
நாவினிக்கப் பாடி
நற்செய்தி சொல்வார்.

தாவீதவன் ஊரில்
தாரணியின் மீட்பர்
தேவிமரி யாளின்
திருமகனாய்ஆனார்

விண்ணிலே பரனார்க்கு
விளைந்திடுக மகிமை
மண்ணிலே நல்ல
மனமுள்ளோ ரெல்லாம்

அமைதிமிகப் பெற்று
அன்புடனே வாழ்க
இமைத்தறியாத் தூதர்
எங்குமிதைச் சொல்வார்.

# கானில் கேட்ட கானம்

தேவதூதர் சொன்ன
    தேனின்உரை கேட்ட
கோவலர்கள் எல்லாம்
    குதித்தோடி வருவார்.

காடுகளில் விழித்துக்
    காவல்தாம் செய்த
ஆடுகளை மறந்து
    அவரோடி வருவார்.

ஓடியவர் வருவார்
    உரத்தகுர லெடுத்துப்
பாடியவர் வருவார்
    பரவசத்தி னாலே.

பாதையெலாம் அவர்க்குப்
    பழக்கமான தாலே
போதைதலைக் கேறிப்
    புத்தியிலார் போல

அங்கு மிங்கு மாக
    ஆடியவர் வருவார்
கங்குல் இருளேனும்
    கால்கள் வழி செல்லும்

வந்தவர்கள் எல்லாம்
    வானவனின் இனிய
சுந்தரப்பூ முகத்தில்
    சொக்கிப் போய் நிற்பார்

சொக்கியவர் தமது
    சுயநினைவு பெற்றுப்
பொக்கெனவே வீழ்ந்து
    பொன்மகனைத் தொழுவார்.

# கீழ்த்திசைக் கிழவர்

விண்ணிலொரு வெள்ளி
விந்தை யெனத் தோன்றி
அண்ணலவன் பிறப்பை
அனைவர்க்கும் உணர்த்தும்

முன்னுணர்ந்த ஞானி
மூவரிதைக் கண்டு
விண்ணவனின் ஜனனம்
விளக்குமிது என்பார்.

கீழ்த்திசையின் அறிவுக்
கிழவரவர் எல்லாம்
ஆழ்த்தும் மனமாக
அதையுடனே தொடர்வார்

தொடர்ந்தநெடும் பயணம்
தொலை தூரம் இருந்தே
அடர்ந்தஇருள் ஊடே
அவ்வெள்ளி நடத்தும்

பாவமெனும் இருளில்
பயணம்நிதம் செய்யும்
பூவுலகைத் திருத்தும்
புனிதனவன் காண

ஆவல்மிக வுற்று
அறிஞரவர் செல்வார்
தாவுமுளம் அந்தத்
தாரகையின் முன்னே

# ஏரோதன் எண்ணம்

உடுவதனைத் தொடர்ந்து
    உடன் வந்த கணிகர்
நடுவழியில் மன்னன்
    நகரம்தைச் சேர்வார்.

சேர்ந்தந்த மன்னன்
    செவி கய்க்கச் சொல்வார்
ஓர்வெள்ளி வானில்
    உதிக்குமது புதுமை.

விண்ணவனின் வரவை
    விளக்குமிது ! அறிவோம்
நண்ணியதைத் தொட்டு
    நாம்வந்தோம் இங்கே

அண்ணலவன் யூத
    அரசனவன் உதித்த
மண்ணெதுவோ சொல்க
    மனிதரவர் கேட்பார்.

வேந்தனவன் மேனி
    வியர்க்குமது கேட்டு
பாந்தள்என ஓடி
    படித்த குருமாரை

என்ன இது என்பான்
    எடுத்தவரும் உரைப்பார்
மன்னனவன் நல்ல
    மதிநுட்பத் தோடு

ஞானிதமை அணுகி
    நல்லவன்போற் பகர்வான்
வானவனைக் கண்டு
    வணங்கிவரும் போது

என்னிடத்தில் சொல்க
ஏந்தல்தனை நானும்
கண்குளிரக் கண்டு
கைகுவிக்க வேண்டும்

வேந்தனவன் வேண்டி
விடைதருவான் அவர்க்கு
ஆந்தையென நெஞ்சம்
அலறுமவன் சாய்வான்.

விடைபெற்றுக் கொண்ட
வித்தகர்கள் முன்னே
தடையின்றி வெள்ளி
தான் நகர்ந்து செல்லும்

வெள்ளியது வந்து
விமலனவன் துயிலும்
பள்ளித்தலம் அருகே
பளபளத்து நிற்கும்.

பாலனவன் தன்னைப்
பார்த்ததுமே அறிஞர்
காலடியில் வீழ்வார்
கை குவியும் மேலே

தொழுதவர் எழுந்து
தூயன்ஒளிப் பாதம்
பழுதில்லாப் பொருளைப்
படைத் தொதுங்கு வாரே!.

## கனவில் ஒரு கட்டளை

இறைமகன் தன்னைக் கண்டு
இணையடி வணங்கிப் பின்னால்
கரவுறு அரசன் தன்னைக்
கண்டிடல் வேண்டா மென்று
ஒருமொழி காதில் வீழும்
உறக்கமே கொள்ளும் வேளை.
திருவுடை அறிஞர் வேறு
திசையது மாறிச் செல்வார்.

# பெயர் சூட்டல்

எட்டாம்நாள் வந்தது
எல்லோரும் கூடினர்
எருசலேம் ஆலயமே
இட்டார்கள் பேரினை
யேசுஎன அன்று
இயம்பிய சொற்படியே

அர்ச்சிக்கப் பட்டவர்
அபிஷேகம் பெற்றவர்
அப்பழுக்கற்ற வரே
இச்சிக்கப் பட்டவர்
இறைவனின் குமாரனே
இரட்சகரா வாரே!

# காணிக்கை

மோயீசன் அன்று
மொழிந்ததன் படியே
தாய் மரி சூசை
தம் மகனை ஏந்தி

ஆலயம் வருவார்
அங்கு ஒரு சான்றோன்
காலமது உணர்ந்து
காத்திருப்பாரே

குழந்தை தனை வாங்கிக்
குறித்தவரும் சொல்வார்
இளந் தருவே நீதான்
எல்லோர்க்கும் ஈங்கு

இரண்டுமாய் இருப்பாய்
இது உண்மை இந்த
உருண்டோடும் உலகின்
ஒளி யாவாய் நீயே

அஞ் ஞானம் போக்கும்
அருளாளன் நீயே
மெய்ஞ் ஞானப் பொருளே
மீட்பு நீ அறிவோம்

தாய் தன்னைப் பார்த்துத்
தவ ஞானி சொல்வான்
தூய உன் நெஞ்சைத்
துளைக்கு மோர் ஈட்டி.

விடிவு நான் கண்டேன்
விமலனே உன்றன்
அடிமை நான் என்னை
அமைதியில் விடுக!

அன்னவனைப் போல
'அன்னா' எனும் பெண்ணும்
அண்ணலவன் யேசு
அரும் புகழே சொல்வாள்.

# துளிர்கள் கொய்யப்படுகின்றன.....

கடவுளவன் பிறப்பைக்
கடுகள்வும் விரும்பா
விடமுடைய மன்னன்
விடுப்பன் ஓர் ஆணை.

இரண்டு வய தான
இளங் குழந்தை யெல்லாம்
உருண்டு விழச் செய்க
உயிர் பறித்து வருக.

ஆணை இதை ஏற்ற
அரசனது வீரர்
பாண மெனப் பாய்ந்து
பாலகரை மாய்ப்பார்.

பெத்த லேகம் எங்கும்
பேரழுகை கேட்கும்
புத்திரரை இழந்தோர்
புலம்பி மனம் சாவார்.

குருதி நெடி அந்தக்
குக்கிராமம் எங்கும்
கருதி வரும் நரிகள்
கடித் துண்ணும் உடலம்.

மயான வெளியாக
மனை யெல்லாந் தோன்றும்
வியாகுலமே எங்கும்
விடி வில்லா இரவு.

அன்னை யரின் துயரை
ஆர் சொல்லக் கூடும்?
மன்னனவன் செய்த
மா பெரிய பாவம்!

தேவன் இதை முன்னம்
தெரிந்து மகன் தன்னை
பாவியரின் கையில்
படாமலருள் செய்தான்.

எகிப்து எனும் நாடு
ஏகு எனத் தேவன்
வகுத் துரைக்கச் சூசை
வார்த்தை யது கேட்டுத்

தாயுடனே மகனைத்
தான் கூட்டிச் செல்வான்
வாய் பேசாக் கழுதை
வலது கர மாகும்.

# பாலைவனப் பயணம்

கழுதை யதன் மேலே
கன்னி மரி அமர்வாள்
அழகு மகன் தாயின்
அணைப் பிலிருப்பானே!

இருவரையும் முதுகில்
ஏந்தி மகிழ்வோடு
கரு மிருளில் அந்தக்
கழுதையது செல்லும்.

பஞ்சு தனைச் சுமக்கும்
பான்மையினைப் போல
வெஞ்சுரத்தை நோக்கி
விருப்ப முடன் நடக்கும்

பா லை வனம் அதற்குப்
பசிய மரம் வளர்ந்த
சோலை யினைப் போல
சுழன்றடிக்கும் காற்று.

'அரிக்க' னது மெல்ல
அசைந்து வரும் தென்றல்
தரிக்கும் நினை வின்றித்
தன் பயணம் தொடரும்.

தன் முதுகில் இறைவன்
தானமர்ந்த தெண்ணி
இன்னு மது விரைவாய்
எடுத்து கால் வைக்கும்.

நள்ளிரவின் துயர
நாடகத்தைக் கண்டு
வெள்ளி மலர் வாடி
வீழ்கின்ற வேளை

இருண்ட மனம் போன்ற
இரவு அது ஓட
வரண்ட மனம் போன்ற
வனாந்தரமும் தோன்றும்.

உள்ள மெலாம் சிலர்க்கு
உறையும் விடம் போல
முள்ளணியே உடம்பு
முழுவதுமாய்ப் பூண்டு

கள்ளிச் செடி ஒன்றே
காணு மிட மெல்லாம்
கொள்ளி எரி நெருப்பாய்க்
கொடும் பாலை யம்மா!

கொடும் பாலை வனத்தில்
கோ மகனும் தாயும்
நெடும் பயண மாவார்
நிழலாவான் சூசை.

அருகிருந்தும் என்னால்
ஆன தென என்றே
உருகு மவன் உள்ளம்
ஒளி மெழுகைப் போல.

நெடும் பயணம் நிகழும் ...........
நேரிழையாள் மரியாள்
சுடும் வெயிலில் வாடும்
சோலை மலராவாள்

கன்னி யவள் மேனி
களைத்து மிகச் சோர்ந்தும்
எண்ண மெலாம் மகனாய்
இரு விழிக்குள் வைப்பாள்

தன்னை ஒரு குடையாய்த்
தாயவளும் செய்து
வண்ண மகன் மேனி
வாடாது காப்பாள்

அன்னையவள் போல
அத்தனையும் தாங்கும்
இன்னு மொரு பிறப்பு
இவ்வுலகில் உண்டோ?

தாயவளே உலகைத்
தாங்கியுள சக்தி
கோயிலென அவளைக்
கும்பிடாதோர் யாரோ?

தாய் மரியின் செயலைத்
தானுணர்ந்த சூசை
வாய் இவைகள் சொல்லும்
வழுவதிலே இல்லை

தையலவள் களைத்துத்
தாகம் மிகவாக
மையல் விழி சொல்லும்
மாதவனைப் பார்த்து

தாகமென உணர்ந்த
தவமுனிவன் மனதில்
சோகமது நிறையும்
சுரத்தி லென் செய்வான்?

கைகளையே விரித்துக்
கடவுளடி தொழுவான்
ஐயனவன் இரங்கி
அருள்மாரி பொழிவான்

தூர ஒரு குன்று
தோன்றுமவன் கண்ணில்
ஈரமதில் இருக்கும்
என்று மனம் நம்பும்

குன்றதனில் இருந்து
குளிர்ந்த நீரூற்று
நின்று சுரந்தோடும்
நெஞ்சமது ஆற

தையலவள் பருகித்
தாகமது தணிவாள்
மெய்யுருகிச் சூசை
மேலவனைப் பணிவான்

மதியமது மாறி
மாலையது பூக்கும்
புதிய பல வேடம்
பொன் வானம் போடும்

அடி வானம் எங்கும்
ஆயிரமாய்த் தங்கப்
பொடி அள்ளித் தூவிப்
பூமியினை மயக்கும்

தூவியுள்ள பொடியில்
தூரிகையைத் தோய்த்து
ஓவியங்கள் கோடி
ஒரு நொடியில் எழுதும்

ஒரு நொடியில் இந்த
ஓவியத்தை மாற்றிப்
பெரு நெருப்புப் பொங்கும்
பிரளயத்தைக் காட்டும்

திரை வானம் இதனால்
தீய்ந்து போய்க் கருக
உரை செய்வான் சூசை
உதயம் இரவென்றே

தூரிகையோ கோலம்
தொடர்ந் தெழுதிச் செல்லும்
காரிகையின் முகம் போல்
கலை நிலா வரையும்

பாயும் வான் கடலுள்
படகு என நிலவு
மேயும் அலையாக
மேகங்கள் கூட்டம்

கண்ணிரண்டுங் கொள்ளாக்
காட்சியிவை போலப்
பன் மடங்கு கண்டு
பாலை வன நாடாம்

எகிப்து தனைச் சேர்வார்
இறைவனவன் அருளின்
மகத்துவத்தை எண்ணி
மனமாரத் துதிப்பார்

# நைல்நதி நாடு

(வேறு)

நாடு வளஞ் செய்யும் நைல்
　　நாற்றிசையும்
பாடு மதன் புகழ் கோடி
　　பாலைவனம்
காடு வளர் சோலை எனக்
　　காட்சி தரும்
தேடு சுவை பேரீச்சை
　　தேவலோகம்!

அடிமைகளாய் யூத இனம்
　　அக்காலம்
விடிவின்றி வாழ்ந்த நிலம்
　　விலங்குகளைப்
பொடிப் பொடியாச் செய்தயுக
　　புருஷனவன்
அடி மலர்கள் பதிந்த நிலம்
　　அரும் பேறே

அந் நாட்டைத் தேவமகன்
　　ஆசையோடு
தன் நாடாய்க் கொண்டிருப்பான்
　　தந்தை வளன்
கண்ணூடே தெரிந்த தொரு
　　காட்சியினால்
பொன்னாட்டை நண்ணியவர்
　　போவாரே!

# நசரேத் ஊரில் நல்ல ஒரு குடும்பம்

(வேறு)

அலை யெழுந் தாடுங் கூத்து
அகப் பொருள் பாடுங் காற்று
சல சல வென்னுங் கீற்று
சலங்கையின் தாளம் போடும்
தலை தனை நீட்டி மீன்கள்
தரை தனை எட்டிப் பார்க்கும்
நலமுற மக்கள் வாழும்
நசரேத்து என்னும் ஊரில்

கலை விழா நடக்கும் நல்ல
கடற்கரைப் பூமி ! வாடி
இலை விழா மரங்கள் ! பூக்கள்
எழில் செய்யும் ஏரி ! வாவி !
குல மகன் சூசை அன்புக்
கொடியுடன் மலருமாகப்
பல பல ஆண்டு காலம்
பாங்குற வாழ்ந்த பூமி.

குடும்பமாம் கோயில் தன்னில்
கும்பிடும் தெய்வமாக
நடுவினில் யேசு பாலன்
நல்லருள் ஆட்சி செய்யும்
இடமது சொர்க்க மென்றே
இயம்புவார் பார்த்தோரெல்லாம்
கடவுளின் வீட்டில் துன்பம்
காலடி வைக்குமாமோ?

மறை முகமாக வாழ்ந்த
மாசிலாத் தேவபாலன்
நிறை வுடை ஞான நூல்கள்
நெறி வழி உயர்ந்த நூல்கள்
குறை வறக் கற்றார் நல்ல
குருவிடம் பயின்றார் எல்லாம்
இறைவனே ஆனபோதும்
எழுது கோல் பிடித்தார் அம்மா

பன்னிரண்டாண்டுக் குள்ளே
பண்டித னான பாலன்
தன்னையே வென்றார் மண்ணில்
தளர் நடை பழகும் போதே
நன் னெறி பயின்றார் என்றால்
ஞான நூல் கற்றார் என்றால்
மண்ணிலே நம்மைப் போல
மனித ராய்ப் பிறந்த தாலே

# திருவிழாக் காண.....

திரு விழாக் காணத்
தேவ மகன் செல்வார்
ஒரு பெருங் கூட்டம்
ஓராண்டு தோறும்
எரு சலேம் நோக்கி
ஏறு நடை போடும்
பெரு விழாப் போலப்
பிறிதொன்று மில்லை

ஓரணியிற் பெண்கள்
உண்மையிலே தங்கத்
தேரணியைப் போலத்
தேவதைகள் செல்லும்
பேரணியோ என்பார்
பேதலித்த ஆண்கள்
காரணியே என்பார்
கருங்குழலைக் கண்டு

ஆடவர்கள் செல்வார்
ஆன சுமையெல்லாம்
கூடு மவர் கையில்
குழந்தைகளோ தோளில்
ஓடுமவர் கால்கள்
உணர்ச்சியிலே உள்ளம்
ஆடும் மிகவாக
ஆனந்தத் திருநாள்

நீடும் ஒரு பயணம்
நிகழும் சில நாள்கள்
ஈடு இணை யில்லா
இனிய திரு நாளே
நாடு அது போற்றும்
நாலு திசை வந்து
கூடு மொரு நாளே
குதூகல விழாவே

உள்ள மெலாம் உருக
உணர்ச்சியலை பெருக
பள்ளு மழை பொழியும்
பரவசத்திற் கூட்டம்
கொள்ளு மிதைக் காதில்
குழந்தை யது தானும்
துள்ளி எழும் தந்தை
தோள் தனிலே இருந்து

பாலனவர் செல்வார்
படியும் பல எண்ணம்
காலமது தந்த
கடவுள் மகன் அவனே
ஞாலமது தன்னை
நான் மீட்க வேண்டும்
ஆலமதை அமுதாய்
ஆக்குபவர் நினைப்பார்

எண்ணியவர் போவார்
இனிய தாயவளும்
நண்ணிமிகு பார்ப்பாள்
நன்கு தன் ஊரை
மண்ணழகுக் கோலம்
மனந் தன்னில் நிறையும்
விண்ணழகுக் கோலம்
விழி பருகிச் செல்லும்

(வேறு)

நால் விதமாகப் பேசும்
    நாக்குள்ள மனிதர் போல
காலது வீசும் போது
    கரையினில் நிற்கும் நாணல்
சால்புற ஆடும் என்றும்
    சத்திய தேவன் கண்டு
வேலென நிற்கும் அந்த
    விருட்சத்தை ஒத்துப் பார்ப்பார்

கூனிய கிழவன் போலும்
    குமரனின் முன்னே நிற்கும்
நாணிய மங்கை போலும்
    நன்குரம் பசளை போட்டுப்
பேணிய கதிர்க ளெல்லாம்
    பேரருள் யேசு பார்த்துத்
தானிய மவற்றைத் தந்த
    தலைவனைப் புகழுவாரே

மஞ்சளில் ஆடும் வண்ண
    மங்கையின் அங்கம் போலக்
கொஞ்சிடும் கதிர்க ளெல்லாம்
    கோதுமை வயலைக் கண்டு
நெஞ்சினில் மகிழ்வார் யேசு
    நிறைவது ஈந்தார் எண்ணி
அஞ்சலி செய்வார் எல்லாம்
    அளித்திடும் தந்தாய் போற்றி!

(வேறு)

சரிவான மலைகள்
    சாய்ந்தாடும் புற்கள்
கரிவானம் போலக்
    கண் முன்னே தோன்றும்
விரிவான வாரி
    விளையாடும் திரைகள்
தெரிவான மக்கள்
    தேசமது சொர்க்கம்

தரு வெலாம் பூக்கள்
தலைமீது சூடும்
உரு வெலாம் அழகு
ஓவிய மாகும்
தெரு வெலாம் காற்றுத்
தேனள்ளிச் சிந்தும்
கரு வெலாம் நல்ல
கார் மேகமாகும்

நட்ட பெரும் பந்தல்
நடக்குமதில் திராட்சை
விட்டு கிளை எங்கும்
விரியும் நல் நிழலே
சொட்டு தேன் பழங்கள்
சுவைக்க வரும் வண்டு
வெட்ட வெளி எங்கும்
விருந்து ! நல் இன்பம்

(வேறு)

நாடதன் சிறப்புக் கண்டு
நகரும் பொன் மாலை கண்டு
கூடிடும் இருளைக் கண்டு
குளிர்ந்த தேன் மதியைக் கண்டு
சூடிடும் விடியற் காலைச்
சுந்தரப் பூக்கள் கண்டு
ஈடது இல்லை என்னும்
எருசலேம் நகரம் காண்பார்

நகருளே நுழைவார் யேசு
நடந்திடும் விழாவைக் காணப்
பகரரும் மக்கள் கூட்டம்
பரவையின் அலையைப் போல
அகமது மகிழத் தாமே
ஆலயம் நுழைவார் ஆங்கு
இகமது படைத்துக் காக்கும்
இறைவனை மட்டும் காணார்

# தாரகையின் நடுவே.....,

தாரகையின் நடுவே
தண்மதியம் போல
ஆரணியிற் பதித்த
அழகு மணி போல
நீர் மேவும் பொய்கை
நிறைந்த மலர் போல
ஊரிடையே தோன்றும்
ஒளியதனைப் போல

கோயிலதன் நடுவே
குழந்தை யவர் இருப்பார்
ஆய மென அறிஞர்
அரிய பல விடயம்
தூயனவன் நெஞ்சைத்
துளைக் குமவை அதனால்
பாய்ந்து வரும் கேள்வி
பண்டிதர்கள் திகைப்பார்

அந் நேரம் ஆங்கே
அவரன்புப் பெற்றோர்
பொன்னனைய பேச்சில்
புகுந்த மகன் கண்டு
என் செய்தீர் மகனே
என்று ருகக் கேட்பார்
அன்னை யவள் கேள்வி
அடுத்து அவர் சொல்வார்

எந்தையவர் வீட்டில்
இருக்கின்றேன்! அறியீர்
விந்தையவர் பேச்சு
விளங்க விலை யார்க்கும்
சிந்தை தனில் எல்லாம்
தேக்கித் தாம் வைப்பார்
அந்தளவில் மகனும்
அவர்களுடன் செல்வார்!

# இரண்டாம் பாகம்



# வாழ்வு தரும் வார்த்தை

# புகழ்
# மணக்கும்
# புனிதன்

ஒட்டக மயிரினால்
ஆன ஓர் ஆடை
உடம்பு தனை மூடும்
தொட்டு அவர் இடை
தொங்கு மொரு கச்சை
துனி யறு முனிவனவன்
வெட்டுக் கிளியுடன்
விரும்பு தேன் உண்டு
வேத மொழிகளையே
எட்டுத் திசையிலும்
எடுத்துரை செய்வானே
எல்லோரும் கூடுவரே!

# பாலைவனக் குரல்

பாலை வனத்திலே கேட்கும் ஒரு குரல்
பாவிகளே கொஞ்சம் கேளுங்களேன்
சாலையது தன்னைச் சீர்செய்ய வேண்டுமே
சர்வேசுரன் மகன் தோன்றினாரே!
மாலை முகில் குவி மலையைத் தகர்த்துமே
மடு குழி பள்ளங்கள் நிரப்பு வாரே
வேலை சூழ் உலகதன் வேறுபாடுகளை
வேரோடழித்திடல் கூடு மாமே!

தீய விஷப் பாம்புக் குட்டிகளே நீவிர்
திருந்த ஒரு வழி சொன்னவரார்?
ஏய நறுங் கனி ஈயா மரமெலாம்
எரிதீயில் கொண்டவர் வீசுவாரே
ஆய முழுக்கது நீரில் அளிக்கிறேன்
அக்கினி ஆவியில் அருளுவாரே
தூயனவன் அணி காலணி தன்னையே
தொட்டு அவிழ்க்கவும் கூடு மாமோ?

கையில் சுளகவர் ஏந்தியுளார் ஒரு
காலம் வரும் போது காணுவீரே
கொய்யும் கதிர்தனில் கோது பதர்களை
கொண்டவர் தீயிலே கொட்டுவாரே
அய்யனவர் மிகு நன் மணி தன்னையே
ஆன களஞ்சியம் ஆக்குவாரே
வையமிது மீட்பைக் காணல் உறுதியே
வருபவர் என்னிலும் உயர்ந்தவரே

(வேறு)

எங்கள் தந்தையவர் ஆபிரகாம்
என்று மொழிந்திடல் ஏற்குமோ?
இங்கு வெற்றுக்கல் தன்னிலே
இருந்து குழந்தைகள் தம்மையே
எங்கும் நிறைந்தவர் செய்குவார்
என்றும் இது உண்மை நம்புக
பங்கமிலா முனி வார்த்தையைப்
பாவிகள் காதுகள் கேட்குமே

கொண்டு பொருள்தனை விற்பவர்
கொள்ளை நயம் கொளல் பாவமே
உண்டு இரு பொருள் என்பவர்
ஒன்றை அளித்திடல் நீதியே
மண்டு மிருள் பாவ வாழ்க்கையை
மானிட சாதி நீ நீக்குவாய்
அண்ட மதிர்ந்திடச் சொல்லுவார்
அருளப்பர் என்னுமோர் ஞானியே!

# தொண்டும் துறவும்

முழுமையாய் நசரேத்தூரில்
முப்பது ஆண்டுக் காலம்
குழுமையாம் அன்பைப் பெற்றுக்
குறையிலா ஞானம் பெற்றுச்
செழுமையாய்த் தோன்றுங் காலைச்
செங்கதிர் போலும் யேசு
இளமையாம் வசந்தத்துள்ளே
இருந்தருள் செய்யுங் காலை

தந்தையின் பணிகள் செய்யும்
தருணமும் வந்ததாலே
சிந்தையில் வாழும் அன்புத்
திருவினை தாயை நீங்கி
மந்தையைத் தேடிக் கொண்டு
மேய்ப்பனும் போகலானார்
சொந்தமும் உறவு மெல்லாம்
தொண்டின் முன் நிற்குமாமோ?

# திரு முழுக்கு

ஊரது நடுவே ஓடும்
ஊமையைப் போலும் ஆறு
பேரது ஜோர்தான் ஆகும்
பெண்மையின் அழகுக் கோலம்
காரது துடைக்கும் வானக்
கதிரவன் ஒளியைப் போல
நீரது பாவம் போக்கும்
நிகரில்லாப் புதுமையாமே

ஏட்டினில் இல்லா ஞானம்
எழுத்தினில் காணாத்தூய்மை
காட்டினில் வாழும் அந்தக்
கடுந்தவ முனிவன் சொல்லில்
நாட்டினில் அரசர் தாமும்
நடுங்குவர் பெயரைக் கேட்டால்
வீட்டினின் பேறே கூறும்
வேதியன் யுவானி என்பார்

ஏனைய மனிதர் போல
யேசுவும் வருவார் அங்கு
ஊனமே இல்லா அந்த
உத்தமன் கையினாலே
ஞானமாம் முழுக்குத் தன்னை
நாடியே கொள்ளும் போது
வானமே திறக்கும் அன்பு
வார்த்தைகள் பாயும் காதில்!

விண்ணகம் சொல்லும் வேதம்
வியப்புடன் உலகம் கேட்கும்
என்னக நேச மைந்தன்
இவரில் நாம் பூரிக்கின்றோம்
கண்ணகம் நிறைய ஆவிக்
கடவுளும் அந்தப் போது
அண்ணலின் தலையின் மீது
அழகுறு புறாவேயாவார்

# மனப் போராட்டம்

தனியிடம் ஒதுங்கி வேள்வி
தவமது செய்ய யேசு
மனிதர்கள் அறியாப் பாலை
மண் வெளி செல்வார் கெட்ட
பிணியினைப் போன்றோன் அந்தப்
பேயிதை அறிந்தே எங்கள்
புனிதனின் பின்னாற் போவான்
பூமியே கலங்கிப் போகும்

அன்னத்தின் பின்னாலேகும்
அழகிலாக் காகம் போல
வன்ன மா மயிலைத் தாவி
வான் கோழி செல்லல் போல
புண்ணியம் போகப் பின்னால்
புறப்பட்ட பாவம் போல
அண்ணலைத் தொடர்ந்தே அந்த
அசுத்தனும் செல்வானம்மா!

போனவன் நாணமின்றிப்
புகலுவான் மூடச் சொற்கள்
வானவன் மகனே யாயின்
வலிய இக் கல்லை நல்ல
ஊனுடல் வளர்க்கும் அப்ப
உணவெனச் செய்க என்பான்
கோனவன் வார்த்தை கேட்டு
குறு நகை மிளிரச் சொல்வான்

உணவது மட்டுந் தானோ
    உடலினை வளர்க்கும் சக்தி
பணம் பொருளாலே மட்டும்
    பாரினில் வாழ்ந்தாரில்லை
தினமருள் செய்யும் அன்புத்
    தேவனின் வார்த்தையாலே
அனைவரும் வாழ்கின்றாரே
    அறிக நீ உண்மை என்றார்

யேசுவின் உரையைக் கேட்ட
    எரி தணற் பேயும் வேறு
பேசுவதறியா னாகி
    பித்தனின் செய்கை போல
ஈசனைத் தூக்கிக் கொண்டே
    எழுமலைச் சிகரம் நோக்கித்
தூசெனப் பறப்பான் வானில்
    தூயனோ சிரித்துக் கொள்வான்

மலையினில் இருத்தி எங்கள்
    மாதவச் செல்வன் தன்னை
நில வுல கெல்லாங் காட்டி
    'நீ எனை வணங்குவாயேல்
நலந் தரும் இதனையின்று
    நானுனக் கீவேன்' என்பான்
புலனது கெட்டுப் போன
    பொறாமையின் பேச்சுக் கேளீர்

அலகையின் பேச்சைக் கேட்ட
    அமலனும் சினமே பொங்க
உலகினைப் படைத்துக் காப்போன்
    ஒருவனே அவனின் தூய
மலரடி பணிவீர் என்றே
    மாபெரும் அறிஞ ரெல்லாம்
கலை பயில் நூலிற் சொன்ன
    கருத்துரை அறிவீரென்றான்

சொன்ன இப் பதிலினாலே
சொல்லுவ தென்ன வென்றே
உன்னியே நின்றான் நெஞ்சில்
ஒன்றுமே தோன்றவில்லை
என்ன தான் முளைக்கும் சொல்வீர்
எருக்கிலை வளரும் காட்டில்
மண் வளம் பொறுத்துத் தானே
மரஞ் செடி கொடிகள் தோன்றும்

நெடுமரம் போல நின்றான்
நிறுத்திய தூண் போல் நின்றான்
முடிமலை போல நின்றான்
மூச்சற்ற பிணம் போல் நின்றான்
படீரென மின்னும் மின்னற்
பாங்கினைப் போல வாங்கே
திடீரென ஒன்றைச் செய்தான்
தேவனைத் தூக்கிக் கொண்டான்

தூக்கிய இறைவ னாரைத்
தோளிலே சுமந்து கொண்டு
பார்க்கவே அச்ச மூட்டும்
பழம் பெருங் கோபுரத்தில்
மூர்க்கமாய் இறக்கி வைத்தான்
மூன்றாவதாக ஒன்றைத்
தீர்க்கமாய்க் கேட்டு வைத்தான்
திருவுளம் அறிகிலாதான்

இப் பெருங் கோபுரத்தில்
இருந்து நீ குதிப்பாயாயின்
தப்ப ஓர் வழியை உன்றன்
தந்தையின் அருளே செய்யும்
ஒப்பிலா உன்னைப் பேண
ஓடியே வருவார் தூதர்
இப்படி நூலில் எல்லாம்
எழுதிய தறியா தென்னே

கெட்ட தீ நெஞ்சன் இந்தக்
கேள்வியைக் கேட்க யேசு
பட்டெனப் பதிலே சொல்வார்
பாரெல்லாம் படைத்தோன் தன்னைத்
துட்ட உன் நெஞ்சினாலே
சோதிக்க வேண்டாமென்று
திட்டமாய் நூலில் எல்லாம்
தெளிவாக உள்ள தென்றே

மூ சிறு கேள்வி கேட்டு
மூக் குடைபட்ட கூளி
தூ வெனத் துப்பிக் கேலித்
தூற்றலுக் காளான் போல
பூமியைப் பார்த்த வண்ணம்
புலனெல்லாம் செத்துப் போகச்
சாமியை விட்டே போனான்
சதியது வெல்லுமாமோ?

பற்பல வழிகள் மூலம்
பாவமாம் விதைகள் தூவ
அற்பனும் முயன்றே பார்த்தான்
அடியது பலமாய்ப் பெற்றான்
சொப்பனம் போலு மந்தத்
துட்டனும் மறைந்தே போகப்
பொற் சிலை போலுந் தூதர்
புனிதரைத் தொழுவாரம்மா!?

# முதற் சீடர்

ஆங்கோர் இடத்தில் அமர்ந்திருந்தார்
அருளப்பர் என்னும் ஓர் முனிவர்
தாங்கிய சடையுடன் தாம் இருந்தார்
தபஸியவர் போல யாருமில்லை
ஈங்கவர் இருக்கையில் அவ்வழியே
எழில் நிலா போலும் யேசுபரன்
ஓங்கிய ஞான ஒளி பரவ
உலவுதல் போல எழுந்தருள்வார்

வந்தவர் தம்மை மா முனிவர்
வடிவுற நோக்கிப் பகர்ந்திடுவார்
'சந்தேகமில்லை சர்வேசுரன்
செம்மறி இவரே' இவ்வுரையைச்
சிந்தையிற் பதித்த சீடனவன்
செல்வான் எழுந்து அவர் பின்னால்
'எந்தையே குருவே' என அவரை
இரு கரம் கூப்பி வணங்கிடுவான்

திரும்பிப் பார்ப்பார் தேவமகன்
திசையதில் ! பின்பு தெளிவுடனே
'விரும்பியதேது' எனக் கேட்பார்
வித்தகர் வாழும் இடமெதுவோ?
அரும்பிய வினாவை அவர் கேட்டு
அவ்விடம் வந்து பார் என்பார்
சுருங்கிய பதில் தனை அவர் சொல்லச்
சுறுக்காய் அவனும் தொடர்ந்திடுவான்

அண்ணலைத் தொடர்ந்தவன் பின் தனது
அரிய நல் தமையனைச் சந்தித்து
விண்ணகம் இருந்து வந்தவரை
விரி கடல் சூழ் புவி மெசையாவை
என்னகம் கண்டேன் என வுரைத்து
இருவரும் பின்னவ் விறைமகனைக்
கண்ணது குளிரக் கண்டுரைப்பார்
கருணைக் கடலவர் மலர்ந்தருள்வார்

இன்றிருந்து நீ இராயப்பன்
இதற்கு முன் அருளப்பன் மகன் அறிவேன்
என்றவர் பார்த்து இயம்பிடுவார்
இதன் பின் நத்தனியேல் எனும் மனிதன்
சென்றவர் பார்ப்பான் யேசுபரன்
சீரியன்; புனிதன் எனப் பகர்வான்
அன்றிருந் தனைவரும் அவர் சீடர்
அதிசய விதமாய்த் தேர்ந் தெடுப்பார்

# இன்னும் இருவர்

பாய்ந்திடும் குதிரை போலப்
படகுகள் கடலினோரம்
சாய்ந்திடும் போது நன்கு
சாமரை வீசுங் காற்று
ஓய்ந்திடும் போது மக்கள்
உட்கார்ந்து மண்ணின் மீது
வாய்ந்திடும் கதைகள் பேசி
வலைதனைப் பழுது பார்ப்பார்

அவர்களில் ஒருவன் ஆண்டு
அதிகமே ஆனோன் கல்லுச்
சுவரினைப் போலுந் தோற்றம்
சுறு சுறுப் பெறும்பைப் போல
எவரொடும் கதையே யின்றி
இளவலும் தானுமாகத்
தவமது செய்வான் போலத்
தன் பணி ஆற்றுவானே

பணி யவர் ஆற்றும் போது
பரவையின் சத்தத் தூடே
மணி என ஒலிக்கும் வார்த்தை
மனிதர்கள் திரும்பிப் பார்ப்பார்
புனிதனே நிற்பான் ! 'நீங்கள்
புரிந்திடும் தொழிலை விட்டு
இனி எனைத் தொடர்க' என்பார்
எழுந்திவர் விரைகுவாரே

# கானாவூர்க் கல்யாணம்

கானா ஊரில் ஒரு கல்யாணம்
கல்யாண வீடெங்கும் கலகலப்பு
ஆன விதமெல்லாம் அலங்காரம்
அணி மணிகள் தோரணம் ஆயிரம்
வான வெளி போலப் பெரும் பந்தல்
வண்ண நிலாப் போல விளக்கங்கள்
காணும் விழியெல்லாம் பரவசமே
காட்சியது போலும் வேறுண்டோ?

நானா விதப் பண்டம்; நறுமணம்
நடந்து வரும் காற்று நவின்றிடும்
பானக் குடவரிசை; திராட்சைப்
பழந்தன்னைப் பிழிந்த தேன் சாறு
கூனக் கிழந் தானும் பருகினால்
குன்று என நிமிர்வான் குதித்திடுவான்
தேனா இல்லையது அமுதமே
திக்கெட்டும் புகழ் இது சொல்லுமே

இனத்தவர் என்பதால் மரியாள்
யேசுவுடன் அவ்வீடு செல்வாள்
சனத்திரள்; விருந்தினர்களெங்கும்
சாப்பாடு பரிமாறும் வேளை
பணத்தொந்தி மனிதர்கள் வரிசை
பண்டங்கள் மலை போலக் குவியும்
அனைத்துமே உண்டு அவர் ஏப்பம்
அளவாக விட்டபடி எழுவார்

ஏழைகளுக் கென்று ஒரு பந்தி
எச்சிலுக்(கு) ஏங்கு கின்ற நாய்கள்
வாழையடி வாழையென நாட்டில்
வர்க்கமிது வளர்கின்ற கொடுமை
நாளையிவர் கையிலெனும் உண்மை
நாட்டில் சிலர் அறியவிலை பாவம்!
வேளையது பிறந்தாலோ இவர்கள்
விதி முடியும்; விடியல் தனைக் காணார்

யேசு இவர் பக்கமே இருப்பார்
இல்லத்தின் தலைவனவன் தடுத்தும்
பாசமுடன் அவர் பேசி அந்தப்
பஞ்சைகளின் மனங் குளிரச் செய்வார்
ஆசையுடன் இந்நேரம் பெற்ற
அன்னையவள் வந்து அவர் காதில்
ஓசையது இன்றி உரை செய்வாள்
'உள் வீட்டில் ரசமில்லை' என்றே

காதில் இது நுழைந்ததுமே யேசு
கனிவுடனே தாய் தன்னை விளித்து
ஈது எனைச் சொல்லுவது ஏனோ?
என் நேரம் வரவில்லை' என்பார்
வேதனுரை கேட்டதுமே அன்னை
விரும்பியவர் சொல்லுவதை எல்லாம்
தாதர்களே செய்க எனப்பணிப்பார்
தாய்மனத்தைப் பிள்ளையறியானோ?

தாயினுரை கேட்டதுமே அவர்கள்
தண்ணீரால் ஆறு குடம் நிரப்பித்
தூயனவன் முன்னாலே வைப்பார்
'சுவை பார்ப்பீர்' என யேசு சொல்வார்
மாயமென அது மாறி இனிய
மது போல இனிக்கும்; சுவை பார்த்தோர்
வாயடைத்துப் போவார்கள் ஆங்கு
வையமது காணாத புதுமை

# சீக்கார் எனும் ஊரிலே.....

பூக்காத மரமில்லை
    பொழியாத வானில்லை
சேர்க்காத வளமில்லை
    தேராத துறையில்லை
சீக்கார் எனும் ஊருக்குச்
    செல்லுபவர் எல்லாம்
நாக் கூறிச் சொல்வார்கள்
    நாம் பிறக்க வில்லையே!

ஊரங்கே யேசு பரன்
    ஒன்றி வரச் சீடரெல்லாம்
நேராக நடந்திடுவார்
    நெடுவழியிற் களைப்பாலே
ஆராத தாகமெழும்
    அதனாலே அவ்வூரின்
நீரூறும் கிணற்றண்டை
    நெருங்கியவர் செல்வாரே

நண் பகல்; சுடுவெயில்
    நாதனவன் சீடரெலாம்
உண் பொருள் பெற்றுவர
    ஊருக்குள் சென்றிருந்தார்
பெண் ணொருத்தி அவ்வேளை
    பெரியதொரு குடமேந்தித்
தண் சுவை நீர் சேந்தத்
    தான் நடந்து வந்தாளே

தையலவள் தனை அணுகித்
தரணி புகழ் தேவ மகன்
கை நீட்டி 'நீர் வேண்டும்
கடுந்தாகம்' என்றிரப்பார்
மை தீட்டும் விழியழகி
மறுப்பின்றிப் பார்த்தவரைப்
பொய்யில்லை யூதரெனப்
புரிந்துள்ளம் வினவிடுவாள்!

'வேறு ஒரு சாதி நீர்
விரும்பியெனை அணுகியே
ஊறும் நீர் கேட்டுத்தான்
உண்ணுவதும் சரியாமோ?'
கூறுமவள் கூற்றுக்குக்
கோதில்லான் பதிலாக
ஊறதிலே ஏதுமில்லை
உண்மையினை நீயறிந்தால்

என்னிடமே நீர் கேட்பாய்'
என்றவரும் புதிர் போடப்
பெண்ணவளும் வியந்தவளாய்ப்
'பெருங் கிணறு; நீர் ஆழம்
உன்னிடத்தில் ஏதுமில்லை
ஊறும் நீர் மொள்வதற்கு
என்னிடத்திற் கதையென்ன
எங்களது யாக்கோப்பு

தந்த பெரும் கிணறாகும்
தாகமது தீர்க்கும் நீர்
விந்தையிது அவரை விட
மேலான ஆள்தாமோ?
இந்த விதம் அவள் கேட்க
யேசு மொழி புகன்றிடுவார்
'சந்தேகம் தவிர்க உயிர்த்
தண்ணீர் நான் தருவேனே

குடித்தவர்கள் அந் நீரைக்
    கொடுந் தாகம் அடையார்கள்'
அடித்தவரும் இயம்பிடவே
    'அதைத் தருக' என்றிரப்பாள்
பிடித்துக் கை வாழ்வோனைப்
    பெண்ணே நீ கொணர்க எனத்
தடித்த தோற் காரியவள்
    தனக்கில்லைக் கணவன் என்பாள்

'சரியாகச் சொன்னாய் நீ
    தையலுனை மணந்தவர்கள்
ஒருவரலர்; ஐந்து பேர்
    உள்ளவனும் துணையாமோ?
அரிவையவள் அது கேட்டு
    ஆச்சரியம் மிக்கவளாய்ப்
'பெரியவரே நீர்' என்பாள்
    பெண் மேலும் பல கேட்பாள்

'வணக்கமது செய்வதற்கு
    வளர் நகரே வாய்ப்பென்பார்
இணக்கமதில் எமக்கில்லை
    எழில் மலையைப் பார்த்தே நாம்
கனக்கின்ற நெஞ்சுடனே
    கை சேர்த்துத் துதிக்கின்றோம்
பிணக்கிதற்குத் தீர்வென்ன?'
    பேரழகி கேட்டிடுவாள்

'செபிக்குமிடம் இவையாமோ?
    சேர்ந்து வரும் ஒரு காலம்
அவிக்கு மிருள் தேவனவன்
    ஆவியிலும் உண்மையிலும்
குவிக்கும் கை இவ்வுலகம்
    கொற்றவனும் விரும்பிடுவான்'
செவிக்குத் தேன் பாய்ச்சுகின்ற
    யேசு எனும் புது மனிதன்

வார்த்தையது மொழிந்ததுமே
வடிவழகி மறுத்துரைப்பாள்
பார்த்திருக்கும் மெசையா தான்
பகர்ந்திடுவார் உண்மையினை
பூத்ததொரு தாமரை போல்
பொலிந்த முக நாதனவன்
'காத்திருக்கும் அவரே நான்
காணுகின்றாய்' எனச் சொல்வார்

உண் பொருட் பையோடு
ஊரிருந்து மீள வந்த
நண் புறு தொண்டரெலாம்
நாதனவன் தனிமையிலே
பெண்ணவளோடு கதை
பேசுவதைக் கண்டாலும்
எண்ணியொரு சொல்லேனும்
என்னென்று கேட்கவிலை

அப் பெண்ணும் குடந் தன்னை
அவ்விடத்தே விட்டு விட்டு
ஒப்பாரிப் பாடல் போல்
ஊரெல்லாம் சாற்றிடுவாள்
தப்பில்லாச் சொல்லதனைத்
தாங்கேட்ட மனிதர் சிலர்
ஒப்பினார் அவர் தம்மை
ஓடோடி வந்திரப்பார்

இதற்குள்ளே சீடரவர்
'எழுந்திருங்கள் உண்ணவென
அதற்கவர் பதில் சொல்வார்
'அனுப்பியவர் பணி தனையே
முதற் செய்தல் என்னுணவு
முற்றியது அறுவடையும்
அதைக் கொய்து வாவென்று
அனுப்பினேன் உங்களையே"

# இரவில் ஓர் உரையாடல்

இருள் கூடிச் சூழ்கின்ற இராப்போது
யேசு தமைக் காணவெனப் பரிசேயன்
அருள் தேடி வருவான் போல் அணுகித்தான்
அவரோடு பேசுவான் 'ஐயா நீர்
தெருள் ஞானத் தேவனவன் போதகரே
தெரிந்தோம் நாம் இல்லையெனில் புதுமைகளை
ஒரு நாளும் செய்ய உமால் இயலாது
உண்மையிது' என அவன்; உரைப்பாரே!

மீண்டிந்தப் பூமியிலே மனிதனவன்
மேன்மை தரும் பிறப்பிதனை எடுத்தால்தான்
ஆண்டவரின் அரசையவன் தரிசிப்பான்
அறுதியிட்டிஃதை நான் உரைக்கின்றேன்
நீண்டதொரு பெருமூச்சை விட்டந்த
நிக்கதேமு கூறிடுவான் 'நீணிலத்தில்
மீண்டும் நாம் பிறப்பதுவும் சாத்தியமோ?
மிக்க வயதானதால் கேட்கின்றேன்'

சத்தியமாய்ச் சொல்லுகின்றேன்; சரியாய்க்கேள்
தண்ணீரில் ஆவியினில் ஓர் மனிதன்
முத்தி தரும் சென்மத்தை அடைந்தால் தான்
மூலவனின் ஆட்சியினை முகங் கொள்வான்
எத்திசையும் இருந்து வளி வீசி வரும்
எவருக்குந் தெரியாது இதைப் போலாம்'
புத்தியது போதாத பரிசேயன்
'புரியவிலை' என அதன் பொருள் கேட்பான்

கண்ணகத்தாற் கண்டதையே சொல்கின்றேன்
    கண்டதற்கும் சாட்சி நான் பகர்கின்றேன்
மண்ணகத்தைப் பற்றித்தான் சொன்னாலும்
    மனிதர் நீர் நம்பவில்லை மறுவில்லா
விண்ணகத்தைப் பற்றி உரை விரித்திட்டால்
    விசுவாசங் கொள்வீரோ வியப்புத் தான்
தன்னகத்தில் அன்பு மிகு தந்தை தாம்
    தம் மகனை அனுப்பினார் தரணிக்கே

முடி வில்லா வாழ்க்கையினை அடைதற்கே
    மோயீசன் பாலையிலே பணி தன்னைப்
பிடித்து மேல் உயர்த்தியதைப் போலன்றோ
    பெருமையினை மனுமகனும் பெறவேண்டும்
இடித்து நான் சொல்வேனே அவர் மீது
    இல்லையெனில் நம்பிக்கை எப்போதோ
வடித்த தொரு தீர்ப்பையே பெற்றிட்டார்
    வையகத்தின் மீட்பு அவர் ஊடாமே

ஒளி தேடி வந்ததுவே உலகத்தை
    உலகம் அதைக் காணாது ஒதுக்குமே
விழியில்லா மனிதரவர் செய்கைகள்
    வேம்பாகக் கசக்குமே வினை செய்வோன்
ஒளி தன்னை வெறுக்கின்றான் உண்மையாய்
    உத்தமராம் அவரோடு ஒன்றித்தோன்
வெளிப்பட்டு வருகின்றான் எரிகின்ற
    வெளிச்சமதை நாடியே விருப்போடு

ஊனாலே பிறப்பதுவே உடலாகும்
    உண்மையது போலவே ஆவியும்
தானாகப் பிறப்பதில்லைத்தாய் பிள்ளை
    தத்துவத்தில் என்றுமே தவறில்லை
வானாலே வந்தவரே வான் செல்வார்
    வரமதனைப் பெற்றவர் மனுமகனாம்
கோனான அவர் மீது நம்பிக்கை
    கொண்டவரே புது வாழ்வு பெறுகின்றார்

# அருளப்பர் சாட்சியம்

விண்ணிலிருந்தவர் வந்தவர்
மேலாம் உலகினில் யாருக்கும்
கண்ணில் தெரிந்தது கேட்டது
கழறுமவர் மொழி வேதமே
அண்ணலவர் தரும் சாட்சியம்
ஆரும் ஏற்றுக் கொள்ளல் இல்லையே
எண்ணியவர் கூறல் யாவுமே
எல்லாம் வல்ல தேவன் எண்ணமே

தந்தையவர் மகன் தம்மையே
தாரணி உய்யவே தந்தனன்
அந்தமில் சக்தியைக் கொண்டவர்
அவரது சாட்சியம் உண்மையே
விந்தையிதில் ஏதும் இல்லை காண்
விண்ணும் மண்ணும் அவர் சொந்தமே
சிந்தையவர் பேச்சில் வைப்பவர்
சிரஞ்சீவி வாழ்க்கையைக் கொள்கிறார்

வளர் பிறையாகவே ஒளிர்பவர்
வாயுரை போல வேறுண்டுமோ?
தளர் பிறை போலும் ஓர் தன்மையன்
தாரணி தன்னை நான் சார்ந்தவன்
அழகு மணமகன் அவரது
அன்புறு குரல் தனைக் கேட்குமே
பழகிடும் தோழர்கள் மகிழுவார்
பாங்கிது அறிந்திடல் வேண்டுமே

# சிந்தனைப் பூக்கள்

பலஸ்தீனா எங்கும்
　　பரமனவன் யேசு
கலங்கரை விளக்காய்க்
　　காட்சி தரலானார்

அலையலையாய் மக்கள்
　　அவர் பின்னால் திரள
மலைக் குன்றில் ஏறி
　　மணி வார்த்தை சொல்வார்

எளிய நல் மனத்தினர்
　　ஏகுவர் விண்ணகம்
இழி துயர் அடைபவர்
　　எய்துவர் ஆறுதல்

தாகமது கொண்டவர்
　　தண்ணளி நீதியில்
ஆகமதில் நிறைவினை
　　அடைகுவர் நிச்சயம்

பொறுமையாம் அணியினைப்
　　பூண்டவர் அனைவரும்
பெரும் பேறு உலகினைப்
　　பெற்றவர் ஆவரே

இரக்கப் பண்பாளர்
　　இரக்கத்தை அடைகுவர்
சிரிக்கின்ற காலையின்
　　செழுமலர் போலவே

உள்ளங்கள் கொண்டவர்
　　உத்தமனைக் காணுவர்
நல்ல சமாதானம்
　　நாடுவோர் என்றுமே

இறையவன் மக்களாய்
இனிதுடன் வாழுவர்
கறையிலாச் சொல்லிது
காதினிற் கொள்ளுவீர்

நீதியின் பெயராலே
நீள் துயரானவர்
ஆதியின் உலகினை
அடைகுவர் திண்ணமே

என் பொருட்டுங்களை
இழியுரை செய்யினும்
வன் துயர் ஈட்டியால்
வதைப்பினும் மகிழுவீர்

விண்ணகத் திதனாலே
விளை பயன் அதிகமே
மண்ணகம் என்றுமே
மறையவன் எதிரியே

உப்பு நீ! அதன்
உறு சுவை போயின்
எப் பொருளாலே
இருந்த நிலையாகும்?

வெளியிலதை வீசின்
வீணாகும் அன்றோ?
விழியிரண்டிருந்தும்
விளங்காயோ இதனை?

உலகின் ஒளியாவீர்
உயர் ஒளிர்கின்றீர்
மலையின் மேல் நகரம்
மறைவாதல் இல்லை

கன்னத்தில் உன்னை ஒருவன்
கை நீட்டி அறையின்
கன்னம் மற்றொன்றையும்
காட்டு நீ அவனிடம்!

ஈரங்கி இருந்தால்
ஏழையவன் கையில்
ஓரங்கி தன்னை
உவந்து நீ கொடுப்பாய்

பல்லுக்குப் பல் எனும்
பழங்காலச் சட்டம்
இல்லை இனி என்பேன்
எதிரி தனை என்றும்

அன்பு நீ செய்வாய்
ஆரும் உனை வந்து
நண்பனே என்னோடு
நடந்து வா என்றால்

தொலை தூரம் எனினும்
துணையாகச் செல்வாய்
இலை என்று சொல்வோர்க்கு
இன் முகத் தோடளி!

அன்பர்க்கே அன்பு நீ
அளிப்பதால் பயன் என்?
பண்பில்லாப் பாவியும்
பாரில் இது செய்கின்றான்

நன்மையே செய்வோர்க்கு
நன்மை நீ செய்தால்
தின்மையே செய்வோனும்
செய்கிறான் பேதமென்?

கொல்ல வரும் எதிரிக்கும்
　　குறைவின்றி அன்பு செய் !
அல்லல் மிகச் செய்வோர்க்கும்
　　அகம் குளிர மன்றாடு

பிச்சையிடும் போது
　　பிறர் புகழ்வரென்றே
இச்சை கொளலாமோ ?
　　எடுத்து வலக் கையால்

அள்ளி நீ ஈயுங் கால்
　　அடுத்த உன் கரமே
தள்ளியே இருக்கட்டும்
　　தானறியா யலே !

அப்போதே உனக்கு
　　ஆன பலனெல்லாம்
தப்பாமல் இறைவன்
　　தந்தருள் செய்வான்

கூடப் பிறந்தவனைக்
　　கோபித்துக் கொள்ளுவோன்
மூடனென மிக
　　முறையின்றிப் பேசுவோன்

கடவுளின் தீர்ப்புக்குக்
　　கட்டாயம் ஆளாவான்
உடன் பிறப்போடு
　　உறவுனக் கில்லையேல்

இறைவனுன் படையலை
　　ஏற்றிடவே மாட்டான்
குறை தன்னைத் தீர்த்துக்
　　கோனவனைப் பணிவாய் !

கெட்ட செயற் கன்றிக்
கிடைத்த மனையாளை
விட்டு விடு மனிதன்
விபச்சாரி யாக்குகிறான்

பெண் ஒருத்தி மீது
பெருங் காமம் கொள்வோன்
தன் னெஞ்சில் விபச்சாரம்
தானாகச் செய்கிறான்

உன் கண்ணில் ஒன்று
உனக்கின்னல் செய்தால்
புண்ணாக அதனைப்
போக்கி விடு உடனே !

முட் செடியில் என்றும்
முந்திரிகை இல்லை
முட் புதரில் அத்தி
முளைப்பதுவும் இல்லை

நல்ல மரமென்றும்
நறுங் கனியே நல்கும்
சொல்கின்ற சொற்கள்
சொல் வோனைக் காட்டும்

ஆட்டுத் தோல் போர்த்து
அப்பாவி போலக்
காட்டுவார் தோற்றம்
கண்ணுக்குச் சிலபேர்

ஆனாலோ நெஞ்சில்
ஆபத்து மிக்க
ஓநாய்கள் என்றும்
ஒளிந்து கொண்டிருக்கும்

தன் விழியில் விட்டம்
    தங்கியுள போது
உன் விழியில் தூசு
    உள்ள தெனச் சொல்வோர்

நன் குலகை ஏய்க்கும்
    நடிகரவர் ஆவார் !
முன் தனது குறையை
    முற்றாக நீக்காரோ ?

பன்றிகளின் முன்னே
    பளபளக்கும் முத்தை
நன்றல்ல எறிவது
    நாய்களுக்கு முன்னே

சென்று நீ தருவதோ
    செம்பாகற் பொருளை
நின்று தம் காலால்
    நிலம் போட்டு ழக்கும்

நோன் பிருக்கும் போது
    நோயாளி போலக்
காண்பிக்க வேண்டாம்
    கபடரே செய்வார்

பிறர் காது கேட்கப்
    பெருஞ் சத்தம் இன்றி
அறை தன்னை மூடி
    அமைதியாய்ச் செபிப்பாய் !

மறைவான தெல்லாம்
    மா பரன் அறிவான்
நிறைவான பலனை
    நின் மீது பொழிவான்

மண்ணுலகிற் செல்வம்
மறைத்து வைத்தாலும்
கன்னமிட்டொரு நாள்
கள்வர்கள் கொள்வார்

விண்ணுலகிற் செல்வம்
வீண் போவதில்லை
தின்னு புழு பூச்சி
திருடர்களும் இல்லை

அளக்கும் உன் அளவால்
அளந்திடப் படுவாய்
வழங்கும் உன் தீர்ப்பே
வந்துன்னைச் சேரும்

மரக் காலின் கீழே
மறைவாக விளக்கை
ஒருக் காலும் வையார்
ஒளி தரும் பொருட்டு

தண்டின் மேல் வைக்கும்
தன்மையது போல
மண்ணுலகில் உங்கள்
மாசற்ற செயலை

மற்றவர்கள் கண்டு
மகிழ்ச்சி மிகக் கொண்டு
உற்ற தம் தேவை
உளமாரப் புகழ்வார்!

உடல் உணவு என்று
உள்ளமதிற் கவலை
அடைகின்ற மனிதா
ஆகாயப் பூட்கள்

விதை நடுவதில்லை
விளை வறுப்பதில்லை
அதையும் நம் தேவன்
அனு தினம் காப்பார்

வயல் வெளியில் ஆடும்
வனப்பு மிகு லீலி
இயல்பு தனைப் பாரீர்
இணையற்ற சலமோன்

மன்னன் அவன் தானும்
மலர்கள் அவை போல
வண்ண முறு ஆடை
அணிய விலை என்பேன்

புல் பூண்டு காக்கும்
பூபாலன் உனக்கு
எல்லையிலா நன்மை
ஏன் செய்ய மாட்டான்?

ஆனாலோ மனத்தில்
அணுவேனும் விசுவாசம்
ஏனோ தான் இல்லை
எண்ணிப்பார் மனிதா !

நிறைந்த என் உரையை
நெஞ்சாரக் கேட்போன்
அறிந்து தன் மனையை
அமைத்தவனே மலையில்

புயல் வீசி எழுந்தும்
புது வெள்ளம் பாய்ந்தும்
இயல விலை வீட்டை
இடிந்து விடக் கிழே

பொன் மொழிகள் இதுபோல்
புகன்றெங்கள் யேசு
தன்னுரையை முடித்துத்
தான் இறங்கும் போது

பிரமித்துப் போன
பெருங் கூட்டம் அவரை
ஒரு மித்துச் சென்று
ஊரெங்குந் தொடரும் !

# கலிலேயாக் கடலினோரம்

தனியவே வழக்கம் போலத்
தந்தையை வணங்கி ஓர் நாள்
மனத்தினில் அமைதி காண
மாலையிற் கடலினோரம்
நினைவினை எங்கோ விட்டு
நீள் சடை காற்றிலாட
இனிய நற் காட்சி நல்கும்
இயற்கையில் திளைத்து நின்றார்!

புன்னை நறும் பூ உதிரும்
பூமியெலாம் பொன் ஒளிரும்
பண்ணிசையில் செவி குளிரும்
படி தேனில் அளி மூழ்கும்
கன்னியென நடை பயிலும்
காற்றினிலே மெய் மயங்கும்
என் னென்ன இன்பம்! அந்த
எழில் மாலைக் கட லினோரம்

தாழம் பூ கமகமக்கும்
தங்கம் போல் பளபளக்கும்
சூழும் பூ நறுமணத்தில்
சுய நினைவு மறந்தே போம்
நாளும் பூ கடற்கரையில்
நந்தவனத் திருக்கோயில்
வாழும் பூ நெய்தல்நில
வளந்தன்னை என் சொல்வேன்?

மலையளவு மண்குவியல்
மண்ணளவு சங்கினங்கள்
வளையளவு நண்டினங்கள்
வரும் மீன்கள் எதிர் பார்த்துத்
தலையளவு நீண்டிருக்கும்
தபஞ் செய்யுங் கொக்கினங்கள்
வலையளவு மிஞ்ச வரும்
வள்ளமெலாம் மீன் இனங்கள்

(வேறு)

கோபுரம் போல் குவிந்திருக்கும் வெண் முத்தம்
கொள்ள வரும் பிறநாட்டு வணிகர் கூட்டம்
ஆவலுற அள்ளித் தம் அங்கை தனில்
அழகழகாய்ப் பார்க்கின்ற பெண்கள் கூட்டம்
கூவி விலை சொல்கின்ற குரலினோசை
குமுறி எழும் கடலையும் மிஞ்சிப் போம்
தேவுலகு வீதி யெனக் கலிலேயா
திரை கடலும் ஒளி மழையில் மூழ்கிப் போம்

(வேறு)

இளமாலை சிரிக்கின்ற இதமான நேரம்
எழில் வானம் சித்திரங்கள் எழுதுகிறநேரம்
பழமாகக் கனிந்திட்ட பகலவனும் கடலுள்
பாரத்தால் வீழ்ந்து போம்! பறவையினம் புலம்பும்!
நிழல் போலத் தொடர்கின்ற நீளிரவு நேரம்
நினை வெல்லாம் சுகமாக நின்றெங்கள் தேவன்
குழலான சிந்தனையும் குலைய வெளி வருவான்
குளிர்வானில் நிலவு பொற் குடம் போலத்தோன்றும்

# விளை நிலத்தில் விழுந்த விதை

கடற்கரை ஊர்களெங்கும்
    கடவுளின் வார்த்தை தன்னை
மடையது திறந்தாற் போல
    மாதவன் பொழியலானார்
படையது சூழ்ந்தாற் போலப்
    பக்தர்கள் திரள்வார் யேசு
படகதில் அமர்ந்தவாறே
    பகர்ந்திடும் உவமை கேளீர் !

நெல்லது விதைக்கச் செல்வான்
    நெடுவயல் உழவன் என்போன்
கல்லினில் வீழும் முள்ளுக்
    காட்டினில் வீழும், மக்கள்
செல்லுமோர் தெருவில் தானும்
    சிற்சில விதைகள் வீழும்
நல்லதோர் நிலத்தின் மீதும்
    நல் விதை வீழும் கண்டீர்

கல்லினில் வீழ்ந்த நெல்லு
    காலது கொண்டும் தண்ணீர்
இல்லையென்றான தாலே
    எறித்திடும் வெயிலிற் சாகும்
வல்ல முட் காட்டினுள்ளே
    வளரினும் பயிர்கள் யாவும்
ஒல்லையில் அமுங்கிப் போகும்
    ஓங்கிய புதர்களாலே

பாதையில் வீழ்ந்த வித்துப்
    பறவைகள் வாயிற் போகும்
சேதமே யின்றி மெத்தச்
    செழிப்புறு நிலத்தில் வீழ்ந்து
சாதனை செய்யும் வித்துச்
    சரித்திரம் படைக்குமன்றோ
போதனைப் பயனும் வார்த்தை
    புரிந்தவர் மனத்தைப் போலே

## பணக்காரனும் பஞ்சையும்

பேரோடு நல்ல
    பெருமை பலவோடு
சீரோடு வாழ்வான்
    செல்வந்தன் ஒருவன்
ஊரோடு ஏழை
    ஒருவனவன் அங்கே
வேரோடு வீழ்ந்த
    விருட்சம் போற் கிடப்பான்

தனவந்தன் அவனும்
    தண்ணீராய்ப் பணத்தை
மனம் போல அழித்து
    மது விருந்துண்பான்
பிணம் போலும் ஏழை
    பேச வாய் இன்றித்
தினங் காவல் இருப்பான்
    தெரு நாயைப் போல

எண்ணற்ற புண்கள்
    ஏழையவன் உடம்பில்
கண்டு நாய் நக்கும்
    கவனியா ததனைத்
தன் பசியைத் தீர்க்கத்
    தனவந்தன் என்பான்
உண்டு விழும் உணவை
    ஓடிப் போய் எடுப்பான்

இருவரையும் ஒரு நாள்
    எதிர் கொள்ளும் மரணம்
அருவருக்கும் நரகில்
    அச் செல்வன் வீழ்வான்
திரு வில்லா ஏழை
    தேவனவன் வீட்டிற்
பெருமை மிக பெற்றுப்
    பிதா மடியில் அமர்வான்

வீங்கியெழு நெருப்பில்
வீழ்ந்தந்தச் செல்வன்
தாங் கொண்ணாத் துயரில்
தான் வாடிப் போவான்
ஏங்குமவன் உள்ளம்
ஏதேதோ எண்ணும்
தூங்கு வான் உலகைத்
துணிந்தவனும் பார்ப்பான்

பாவியிவன் கண்ணில்
பஞ்சையவன் தெரிவான்
ஆவியது துடிக்க
ஆபிரகாம் நோக்கிக்
கூவி யவன் சொல்வான்
கொஞ்சம் நீர் ஏனும்
நாவில் விட அந்த
நல்லவனை அனுப்பு

செல்வனவன் அழுது
செப்பு வது கேட்டுச்
சொல்வாரே அவரும்
சொர்க்கமிதை விட்டு
நல்லவனாம் இவனும்
நகர வழி யில்லை
அல்லல் தனை நீயும்
அனுபவிக்க வேண்டும்

இம் மொழியைக் கேட்டு
இரைந்தவனும் சொல்வான்
எம்முடனே பிறந்தோர்
இருக்கின்றார் இன்னும்
உம் மகனை அங்கே
உடனனுப்பி வைத்தால்
அம் மனிதர் திருந்தி
அகம் புனிதமாவார்

திருந்தி யவர் வாழத்
தேவ மொழியாளர்
விருந் தெனவே பேசும்
வேத மொழியுண்டு
வருந்து மவன் பார்த்து
வார்த்தையது சொல்வார்
அறிந்தவராம் எல்லாம்
ஆபிரகாம் தந்தை

மீண்டுமவன் குரலை
மேலுயர்த்திச் சொல்வான்
மாண்டவரில் ஒருவர்
மண்ணுலகம் சென்றால்
தூண்டுமருள் பெற்றுத்
தூய்மையினை அடைவார்
ஆண்டையவர் இதற்கும்
அரிய பதில் உரைப்பார்

ஆங்குள்ளார் மோசேஸ்
அருள் வார்த்தை பகர்வோர்
தாங்குமவர் மொழியைத்
தம் செவியில் கொள்வோர்
ஈங்கிருந்து செல்லும்
இறந்தவரில் ஒருவர்
பாங்குடனே சொல்லும்
பதந்தன்னை நம்பார்

# இரு வேறு இதயங்கள்

ஆண்டவனைத் துதிக்க
ஆலயத்துட் செல்வார்
அவரில் பரிசேயன்
நீண்டதொரு செபத்தை
நிகழ்த்துவான்; நீசன்
நீதியிலார் கள்ளர்
ஈண்டுள்ளோர் போல
இல்லை நான் அதனால்
இறைவன் நான் உனக்கு
மீண்டுமொரு தடவை
மிக நன்றி சொன்னேன்
மேலான நோன்பும்,

வாரத்தில் ஈர்முறை
வழுவின்றிச் செய்வேன்
வருமானந் தனிலும்
சீராய்த் தான் தந்தேன்
செப்புவேன் அதனைப்
பத்திலொரு பங்கு
பேராய்த் தான் அவனும்
பெரிதாகச் செபித்தான்
பிறிதொருவன் ஆங்கே
தூரத்தான் நின்று
துணி வின்றிச் செபித்தான்
தூவானம் பார்த்து

இரக்கமாயிருப்பீர்
இறைவா நான் பாவி
என்றவனும் உள்ளம்
உருக்கவே சொன்னான்
உதட்டாலே அன்று
உண்மையாய் வருந்தி
ஊரக்க நான் சொல்வேன்
உயர்ந்தவன் இவனே
உலகத்தில் தன்னைச்
சிறுக்கவே செய்வோன்
சிரேஷ்டனே ஆவான்
சிந்தையினிற் கொள்வீர்

# உலகம் ஒரு வயல்

செய், இந்த உலகம்
சிறந்த நல் விதையை
அய்யனவன் விதைத்தான்
அதனுள்ளே களையைப்
பொய்யனவன் அலகை
புரியாமல் இட்டான்
கொய்யும் நாள் அன்று
குப்பை போல் அதனை

அரிந்தவர்கள் வேறாய்
அடுக்கி ஒரு கட்டாய்
எரி நெருப்பினுள்ளே
எறிந்திடுவார்; நன்கு
தெரிந் தெடுத்த நெல்லு
திரவியங்களாகும்
வரிந்ததனை வைப்பார்
வானகமாம் அறைக்குள்!

# மனந் திருந்திய மகன்

தண்ணளி நெஞ்சத்
தந்தையவன் இரண்டு
கண்ணென மக்கள்
கடை மகன் வாழ்வை
மண்ணென ஆக்க
மனங் கொண்ட போது
தன்னுடைச் சொத்தைத்
தாவென்று கேட்டான்

பங்கு தனைப் பிரித்துப்
பரிவுள்ள தந்தை
அங்கவனுக் கீந்தார்
அதைக் கையிற் பெற்றுக்
கங்கையென ஆசைக்
கரை புரண்டோட
எங்கேயோ ஊரை
எண்ணியவன் செல்வான்

வேற்றூரைச் சேர்ந்த
விடலையவன் பணத்தை
ஆற்றிலே புளிபோல்
அநியாயஞ் செய்தான்
ஈற்றிலோர் சதமும்
இல்லை யெனும் நிலையிற்
கூற்றெனப் பஞ்சம்
குடியேறும் அங்கே

பஞ்சமதன் அரசிற்
    பரதேசி யானான்
கஞ்சியது தானும்
    காண வழி இல்லை
தஞ்சமென ஊரின்
    தனவந்தன் வீட்டிற்
கெஞ்சி யொரு வேலை
    கேட்டுத் தான் பெற்றான்

பன்றி பல மேய்க்கும்
    பணியதனைச் செய்தும்
நன்றியிலாச் செல்வன்
    நம்பியவன் உண்ண
ஒன்றுந் தரவில்லை
    உடல் ஒட்டிப் போகும்
பன்றியதன் உணவைப்
    பதம் பார்க்கலானான்

உண்ணும் போதவனின்
    உள்ளமதில் ஊறும்
எண்ணங்கள்! வீட்டில்
    எத்தனையோ பணியாள்
வண்ணங் கொள் விதத்தில்
    வாழ்கின்றார்; நானோ
கன்னங்கள் ஒட்டிக்
    காய்கின்றேன் இங்கே

எழுந்து நான் செல்வேன்
    எந்தையவர் காலில்
விழுந்து நான் சொல்வேன்
    வேலை யாளாகக்
கொழுந் தென்னை ஏற்க
    கொடுமை நான் செய்தேன்
அழுந்து மென் துன்பம்
    அன்றுதான் தீரும்

என்றவனும் தனது
இதயத்திற் சொல்லி
நன்றெனவே வருவான்
நடந்து வரும் அவனைச்
சென்றோடித் தந்தை
சேர்த்து மார்போடு
ஒன்றாவார் பின்பு
ஊழியர்க்குச் சொல்வார்

புத்தாடை அணிவீர்
பொன்னகைகள் இடுவீர்
செத்த என் தனயன்
சீவனுடன் வந்தான்
சத்தான கன்றைச்
சாக் கொல்வீர் இன்றே
முத்தான விருந்து
முறையாக உண்போம்

எசமானின் சொல்லை
ஏற்ற பணியாளர்
வசமான விருந்தை
வழுவின்றிச் செய்வார்
இசையோடு பாடல்
இனிய நடமெல்லாம்
திசை யெல்லாம் கேட்கும்
தேனாகத் தானே

அந் நேரம் வருவான்
அண்ணனவன் வீடு
என்ன இது என்பான்
ஏவலரை நோக்கி
உன் னன்புத் தம்பி
உயிரோடு வந்தான்
அன்னவனைக் கண்ட
ஆனந்தம் என்பார்

உற்ற கதை கேட்டு
உள்ளமது எரிய
முற்றமதில் இருந்தான்
மூத்தமகன் அவனே
பெற்ற நற் பிதாவும்
பிள்ளை மனமறிந்து
பற்றுடனே அழைப்பார்
பதிலவனும் சொல்வான்

மனம் போன் போக்கில்
மாதருடன் சேர்ந்து
பணமெல்லாம் அழித்த
பாவியவன் மகிழ
மணமூட்டும் விருந்து
மற்றின்பம் தந்தீர்
தினமுன் றன் பணியைச்
செய்து வருமெனக்கு

என்ன தான் தந்தீர்?
எரிந்தபடி கேட்டான்
அன்னையென அவரும்
அமைதியாய்ச் சொல்வார்
என்னிழலே நீ தான்
இருப்பதெலாம் உனக்கே
உன்னிளவல் அவனோ
உயிர் பெற்று வந்தான்

## நல்லாயன்

போதனை செய்வார் யேசு
　　போனவர் எல்லாம் எங்கள்
வேதனின் உரையைக் கேட்பார்
　　வெறுப்புறு பரிசேயர்கள்
நாதனின் மொழியைப் பற்றி
　　நால் விதமாகச் சொல்வார்
தீதர்கள் செயலைப் பார்த்துத்
　　திருவுரை பகருவாரே

(வேறு)

ஆயனவன் வசம்
　　ஆடு நூறிருக்கும்
மாயமென ஒன்று
　　மறைந்தெங்கோ போகும்

போன ஆடெண்ணிப்
　　புலம்பியவன் அழுவான்
கானமெலாந் தேடிக்
　　கால் நோகச் செல்வான்

உள்ள தெலாம் விட்டு
　　ஒன்றதனை நண்ணிக்
கல்லு முள்ளெல்லாம்
　　கடந்தவன் போவான்

கடைசி வரை தேடிக்
　　கண்டடைந்த போது
உடையவனின் மகிழ்ச்சி
　　ஒரு பெரிய கடலே!

கடலிலே புரண்டு
கைக் கொண்ட திருவைத்
தடந் தோளில் ஏந்தித்
தாவியவன் வருவான்

உவமையினைக் கூறி
உத்தமனார் யேசு
தமை நோக்கிக் கேள்வி
தந்தவனைப் பார்த்து

ஆடு எலாம் ஒன்று
அவற்றிடையே பேதம்
தேடுபவன் நானோ
தெரிந்திடுக என்பார்

# இயற்கையை வென்ற இறைவன்

கடலதன் மீது செல்வார்
கடவுளின் மகனாம் யேசு
படகதிற் போகும் போது
பையவே துயிலலானார்
திடுமெனத் தோன்றும் காற்றுச்
சேர்த்தலை எழும்பும் மேலே
நடுங்குவர் சீடரெல்லாம்
நாமினிப் பிழைப்பதாமோ?

தொடையது நடுங்கும் சீடர்
தொட்டவர் எழுப்பலானார்
தடையது தானுமின்றி
தலைவ, நீர் துயிலுகின்றீர்
படையது வந்தாற் போலப்
பவனமும் கடலும் இங்கே
நடைபெறும் ஊழிக் கூத்து
நன்று நின் செய்கை என்பார்

அனைத்துமே அறியுந் தேவன்
அவர் தமை அதட்டிச் சொல்வார்
தினைத் துணை ஏனும் நெஞ்சில்
விசுவாசம் இல்லை என்றே
கனைத்திடுங் கடலைப் பார்த்துக்
காற்றதன் வேகம் பார்த்துக்
கணத்தினில் அடங்கச் செய்வார்
கனிந்திடும் அமைதித் தென்றல்

## துறவி எனில் நீ ......

கொல்லுங்கள் ஆசையைக்
கொள்கை இது ஒன்றே
கொண்டுள்ளம் ஒழுக
செல்லுங்கள் எங்குமே
செல்லும் மனையெல்லாம்
சிந்தையது மகிழச்
சொல்லுங்கள் மங்களம்
தூரப்போ என்றால்
தொண்டராம் உம்மை
தள்ளுங்கள் இடத்தினைத்
தாள் தன்னில் ஒட்டிய
தூசியினை உதறிக்
கொள்ளுங்கள் அவ்விடம்
கூறுவேன் அவர்கட்குக்
கொடுந் துன்பம் உண்டாம்
வெல்லுங்கள் பேயினை
வினை செய்யும் நோய்களை
விமலனவன் அருளால்

ஓநாய்களிடையே
ஆடுகளைப்போல
உங்களைத்தானே

வீணாக அல்ல
விண்ணரசை நீவிர்
விண்டுரை செய்ய

நானாக அனுப்பி
நற் செய்தி சொன்னேன்
நாகத்தைப்போல

பூணார மாகும்
விவேகம் எனும் ஞானம்
பூணுங்கள் நீங்கள்

கானுள்ள புறாவின்
கபடிலாப் போக்கைக்
கற்றறிய வேண்டும்

ஊனுடல் கொல்லும்
உலகத்துக் கஞ்சும்
உளமொன்று வேண்டாம்

(வேறு)

உங்களை ஏற்பவர்
உலகத்தில் எனக்குத்
தங்களது இதயத்தைத்
தந்து மகிழ்வாரே!

என்னை விடப் பிறரை
இனிதெனக் கொள்வோன்
விண்ணுலகில் என்னால்
விரும்பியவன் அல்லன்

தன் சிலுவை தன்னைத்
தான் சுமந்தென்னைப்
பின் செல்லா மனிதன்
பிரியனலன் எனக்கு

மனிதர் முன் என்னை
மறுப்பவனை நானும்
இனியன் என் தந்தை
இடத்தில் நான் மறுப்பேன்

எனக்காக உயிரை
இழக்கின்ற மனிதன்
தனக்காக விண்ணைத்
தானடை கின்றான்

# மாத்தாள் மரியாள்

பெத்தானியா என்னும்
    பேர் சொல்லும் ஊரில்
முத்தான குடும்பம்
    மூவருடன் பிறப்பு
அத்தனவன் யேசு
    அங்கெழுந்த வேளை
ஒத்தாசையானாள்
    ஒருத்தியவள் மாத்தாள்

மற்றவளோ அவரின்
    மலரடியில் இருந்து
உற்ற சொற் கேட்பாள்
    ஒன்று வேறியற்றாள்
முற்றுந்தன் பணியில்
    மூழ்கினாள் மூத்தாள்
குற்றமது சொல்வாள்
    குறித்திளையாள் மீது

ஒற்றை நான் தனியே
    உம் பணிகள் செய்யச்
சற்றுமிவள் உதவாள்
    சாற்றீரோ நீரும்
சொற்றமது கேட்டச்
    சுடர்ஞானச் செல்வன்
பெற்றி தரும் வார்த்தை
    பெண்ணறிய உரைப்பார்

மரியாளோ தனது
    மனங்கொள்ளும் விதத்தில்
அரியபணி ஏற்றாள்
    அதுவொன்றே நிலைக்கும்
உரியபணி என்றே
    உலகியலில் வீழ்ந்தாய்
சிறிய தென அதனைத்
    தேராயோ நீயும்

# விண்ணரசு - சில விளக்கம்

எங்கெங்கோ அலைவார்
ஏதேதோ சொல்வார்
எதையுமே நம்ப வேண்டா
அங்கிங்கு இல்லை
ஆர் சொன்ன போதும்
ஆண்டவரின் விண்ணரசு
உங்களிடை உண்டு
உண்மையிது சொன்னேன்
உள்ளமது கொள்வீரே

பெட்டியதன் உள்ளே
பெரியோனாம் நோவா
பிழையின்றி நுழைந்த பின்பு
தொட்டோடும் வெள்ளம்
தொடர்ந்து வருந் துன்பம்
தோற்றம் இது போன்றே
விட்டு நான் வருங்கால்
விளையும் பல் தீமை
விண் தீயைப் பொழிந்திடுமே

## தன்பாட்டில்.....

தன் பாட்டில் முளைக்கும்
தக்கதோர் வித்து
மண்ணதன் வளத்தால்
மாபெரும் பயனை

அள்ளித்தருதல் போல்
ஆண்டவரின் அரசு
தெள்ளிய உவமையைத்
தேவனவர் சொல்வார்

○ ○ ○

## வலை வீசுபவன்

வாரியதில் ஒருவன்
வலை வீசுகின்றான்
சேரும் மீன் அவற்றில்
சீரியதைத் தேர்ந்து

ஏனையவை எல்லாம்
எடுத்தெறி கின்றான்
வானுலகத் தரசு
வகையிது போலாம்

மண்ணதன் மடியில்
மறைந்துள புதையல்
கண்ணதன் ஒளியால்
கண்டதை எடுத்தோன்

இருப்பதை விற்று
இசைவுறுபொருளை
விருப்புடன் கொள்வான்
விண்ணரசிதுவாம்

# விளை நிலம்

விளை நிலத்தில் ஒருவன்
வேண்டுமெனப் பகையால்
களை விதைத்துச் சென்றான்
கதிரறுக்குங் காலம்

உரித்துடையோன் தன்னை
உழைப்பவர்கள் வந்து
கருத்துடனே கேட்பார்
களை வந்த தேது ?

பகைவனவன் வேலை
பண்ணையாள் மொழிவான்
புகையும் மனத்தோடு
போயறுப்போம் என்று

வேலையாள் சொல்வான்
வேண்டாம் என அவனும்
காலம் வரும் வரையும்
காத்திருக்க வேண்டும்

களை பிடுங்கும் போது
கை தவறு தலாக
விளை பயிருஞ் சேர்ந்து
வீணாய்ப் போம் என்பான்

வேளை வரும் போது
விஷப் பயிரைப் பிடுங்கிச்
சூளை தனில் போட்டுச்
சுட்டெரிக்க வேண்டும்

நல்ல மணி தன்னை
நாம் சேர்த்து வைப்போம்
வல்ல பரனரசு
வயல் இதைப் போலாம்

கழனி தனில் தோன்றும்
கடுகு மணி ஒன்று
வளர்ந்து பெரி தாகும்
வரும் புட்கள் அதிலே

தங்கிப் போம் அந்தத்
தரு போன்ற தாகும்
பொங்கு மிறை யரசு
புரிந்து கொள வேண்டும்

# முந்திரிகைத் தோட்டத்து முதலாளி

முந்திரிகைத் தோட்டத்து முதலாளி ஒருவன்
முடிவொன்று செய்வான்
தந்து தன் பண்ணையைத் தம்மவர் சிலரிடம்
தான் வரும் அறுவடையில்
முந்தித் தன் பங்கை முறையாகத் தருக
முழுவதும் நும் வசமே
இந்த விதங் கூறி ஏகுவான் அவனுமே
இன்னொரு தேசமதே !

குறித்த அப் பேச்சினைக் குத்தகைக் காரர்கள்
கொள்ளவில்லை மனதில்
உரித்தவன் தனது உடன்பாட்டின்படியே
ஒருவனை அனுப்பிடவே
வரித்தவன் தன்னை வசமாகத் தாக்கியே
வாசலில் எறிந்திடுவார்
ஒறுத்ததை அறியினும் ஒருவனைத் திரும்பவும்
உடனங்கு அனுப்புவானே

வந்தவன் தன்னையும் வலியவர் கூட்டமாம்
வன்முறை செய்திடுவார்
இந்த நிலை கண்டு ஏங்கிய முதலாளி
இனிய தன் புதல் வனையே
அந்த இடம் போக அன்புடன் கூறுவான்
அனுப்பிய அவனையுமே
தந்தையின் பின் இந்தத் தனயனே வாரிசாம்
தறுகண்ணர் உன்னிமனம்

கொன்றவன் தன்னையே கொல்லையில் வீசுவார்
கொடுமை இது தனையே
நன்றாகத் தெரிந்தவன் நல்லதோர் முடிவினை
நாளிலே எடுத்ததுமே
சென்றந்தக் கொடியோரின் செருக்கினை அறுத்தபின்
சீரிய மனிதரிடம்
அன்றந்தப் பண்ணையை அளித்திட்டுத் திரும்புவான்
அரிய தோர் உவமையினை

(வேறு)

யேசுபரன் கூறி இதன் மூலமாகவே
ஏற்றதோர் கருத்துரைப்பார்
வீசு மொரு கல்லே வீடதன் மூலைக்கு
விரும்பியே எடுத்திடுவார்
ஈசனவன் செயல் எல்லாமே வியப்பாகும்
என்றவர் இதுவுஞ் சொல்வார்
பேசுமவ் விறைவனின் பேரரசாங்கமே
பிறரிடம் கொடுபடுமே

கல்லதன் மீது கால் இடறி வீழ்வோர்
கட்டாயம் நொறுங்குவாரே
சொல்லிது கூறிச் சுதன் அவர் நிற்பார்
சூதர்கள் கூடி ஆங்கு
நல்லாகச் சொன்னார் நம்மையே என்று
நரித்தனமாகவே
எல்லாரும் கூடி யேசுவைப் பிடித்திட
எண்ணுவர் மனந் தனிலே

# திருமண விருந்து

மண விழா செய்திட வேண்டுமே — என்றன்
மைந்தனுக் கென் றொரு மன்னவன்
தினமொன்று குறித்தனன் அழைப்புகள் — தான்
தேர்ந்தவர்க் கனுப்பினன் அவர்களோ
மனமில்லை அதனாலே மறுத்தனர் — ஒரு
மனிதன் தன் தோப்புக்குச் சென்றனன்
தனம் செய்யும் வணிகனும் தப்பவே — ஒரு
சாட்டொன்று கூறியே போயினன்

விருந்திற்கு அழைத்திடச் சென்றவர் — பாவம்
வீணாக அடிபட்டு வீழ்ந்தனர்
வருந்திடும் காவலன் நெஞ்சினில் — சினம்
வளர்ந்திடும் தீயினைப் போலவே
மருந்திதற் குண்டென உறுமியே — அந்த
மன்னவன் தீயோரை மாய்த்துமே
இருந்த நல் நகரையும் எரித்தனன் — பின்
ஏவலர் தம்மையே விளித்தவன்

திருமண விருந்தது நடந்திடும் — நான்
தேடி அழைத்தவர் யாவரும்
அருகதை அற்றவர் ஆயினர் — நீர்
அதனாலே சென்றெங்கும் மக்களை
உரிமையோடழைத் திங்கு வருகவே — என்று
உரைத்தனன் ஊழியர் சென்றுமே
இரு விழிகண்டவர் யாவரும் — ஒன்றாய்
இனிய நல் விழாவுக்கு அழைத்தனர்

வரிசையில் அமர்ந்தனர் வந்தவர் — அவர்
வரவினைப் பார்த்திட விரும்பியே
அரசனும் உட்புறம் ஏகினன் — அந்த
அணியினில் மண உடை இன்றியே
ஒருவனைக் கண்டனன் கொற்றவன் — மனம்
உறுத்திடக் கேட்டனன் அவனையே
இருந்திடக் கூடுமோ இவ்விதம் — இதை
ஏற்பதற்கில்லை யென்றியம்பியே

ஏவலர் தம்மையே அழைத்துமே — நீவிர்
இம் மனிதன் தனைக் கட்டியே
பாவமே இல்லை காண் தள்ளுவீர் — அந்தப்
பாழ் இருள் வெளியினை நோக்கியே
மேவிய துயரங்கு நிறைந்திடும் — மித
மிஞ்சிய புலம்பலும் கேட்டிடும்
காவலன் சொற்படி ஊழியர் — தம்
கடமையைச் செய்தனர் காணுவீர் !

# பத்துக் கன்னியர்

கல்யாண வீடு கலகலப் பதிகம்
கன்னியர் பதின்மர் கையில்
நல் லெழில் விளக்கு நறுமணம் வீசும்
நாற்றிசை எங்கணுமே
மல்லிருள் வந்து மண்டிடும் நேரம்
மங்கையர் ஐவரவர்
சொல்லொணாத் துயிலில் சோருவார் நல்ல
சுகமது நீண்டிடுமே

சட்டெனக் குரலொலி சாமத்திற் கேட்டிடும்
சகலரும் விழித் தெழுவார்
மட்டிலா எழிலுறு மணமகன் வருவாரே
மதி நுட்பப் பெண்களவர்
விட்டு நெய் விளக்கினை ஏற்றியே நிற்பார்கள்
விவேகமிலாப் பெண்கள்
சொட்டு நெய் தானுமே சுடர் விளக்கில்லையே
தருகவே என்றிரப்பார்

இருக்கின்ற நெய்யது எங்கட்கே போதாது
இதனாலே நீவிர் சென்று
சுறுக்கெனக் கடையிலே வாங்கியே வருவீரே
சொல்லுவார் விவேகிகளே
மறுக்கின்ற நங்கையர் மணி விளக்கேற்றவே
மற்றவர் கடை செல்லுவார்
உருக் கொண்ட மணமகன் உடனங்கு ஏகுவார்
உட்செல்வார் அனைவருமே

அடைபடுங் கதவது அதனாலே அஞ்சியே
அறிவிலாப் பெண்களவர்
தடதட வென்னவே தட்டியே கெஞ்சுவார்
தலைவனே திறந்து விடு
திடமோடு அவருமே திரும்பியே சொல்லுவார்
தெரியாது உங்களையே
நடைபெறும் இவ்விதம் நாளையோ இற்றையோ
விழிப்பாக இருந்திடுவீர்

# காணாமற் போன காசு

காசினை இழந்த காரிகை ஒருத்தி
கவனமாய் அதனை
வீசொளி விளக்கில் தேடி எடுப்பாள்
வீடதன் உள்ளே
ஆசையோடவளும் அதைக் கண்டெடுத்து
அயலவருடனே
பேசி மகிழ்வாள் பிரிந்ததை எடுத்தேன்
பேரின்பமாமே

இது போல் தானே இழிசொற் பாவி
இதயம் திருந்தி
புது உளம் கொள்ளில் பொங்கிடும் இன்பம்
பொன்னகந் தனிலே
வித விதமான உவமைகள் மூலம்
விண்ணதன் அரசை
முதல்வன் யேசு மொழிவார் எண்ணி
மூடர்களிடையே

# இறைவன் இணைத்ததை.....

தான் மணந்த பெண்ணைத்
தள்ளி விடல் முறையோ?
வான் மணந்த பரனை
வந்து பரிசேயர்
ஊன் மணந்த நெஞ்சால்
ஒரு கேள்வி கேட்பார்
தேன் மணந்த மலரான்
தெளிவுறவே சொல்வார்

ஆணும் பெண்ணாகவே
ஆதியிலே பரமன்
காணுமவர் தம்மைக்
காசினியில் தந்தார்
பேணும் மனை வாழ்வில்
பெற்றவரைப் பிரிந்து
வானும் நிலாப் போல
வாழுவதே கடனாம்

இவ் வண்ணம் யேசு
எடுத்தோத அவர்கள்
எவ் வண்ணம் ஏற்போம்
இல் வாழும் மனைவி
ஒவ்வவிலை என்றால்
ஒதுக்கி விடு என்றே
செவ்வையாய் மோசேஸ்
செப்பியுளார் என்பார்

முந்தியதை அவரும்
முரடர்க்கே சொன்னார்
இந்த விதச் சட்டம்
இனியில்லை என்பேன்
எந்த வித மேனும்
இழுக்கில்லாத் துணையை
சந்தியிலே விடுவோன்
விபச்சாரம் செய்தான்

# சீடர்கள் சொல்கிறார்கள்

சென்றந்தச் சீடர்
திரும்பி வந்துரைப்பார்
நின்றந்தப் பேய்கள்
நின் பேரைச் சொல்ல
மன்றதிர ஓடும்
மகிமையினைக் கண்டோம்
என்றவரின் பேச்சை
யேசு பரன் கேட்டு

விண்ணிருந்தலகை
வீழ நான் கண்டேன்
இன்னு மதி காரம்
இன்றுமக் களிப்பேன்
மண்ணூரும் பாம்பு
மற்றுந் தேள் பகையை
அன்ன வகையெல்லாம்
அழிப்பீர்கள் ஏனும்

ஆவியெலாம் உமக்கு
அடி பணிந்த தாகக்
கூவி யுளந் தன்னில்
குதூகலிக்க வேண்டா
வாவி எனத் தோன்றும்
வானில் உம் பேரை
ஓவியமாய்த் தீட்டி
உள்ளார்கள் மகிழ்வீர்

## எப்படிச் செபிப்பது?

அருளப்பர் சீடர்கள்
அழகாகச் செபிக்கின்றார்
அதைப் போல நாங்கள் கூடிக்
கருதி மனம் இறைஞ்சக்
கற்று நீ தாராயோ
கறையில்லாத் தேவமகனே

தொழுது மிகக் கேட்பார்கள்
தோஷமிலாச் சீடர்கள்
தூயனவன் மௌனமாக
எழுதாத செப மொன்றை
எடுத்தவர்க் குரைப்பாரே
இதயங்கள் உருகிப்போமே

# இயேசு கற்பித்த செபம்

விண்ணகத் தந்தாய்
விரைந்துன் அரசு
மண்ணகம் வருக
மங்கலம் நிறைக

நின் னுளம் ஆங்கு
நிறைவுறல் போல
இந் நிலம் ஆக
எந்தையே இறைவா

உன் திரு நாமம்
உலகிது பரவ
உண்ணுணவளித்து
ஓம்புக நாளும்

வன் பவம் பொறுத்து
வழங்குக அருளே
என் பகை தன்னை
இரங்குதல் போலாம்

புலனதன் வழியே
போகுமென் மனத்தைத்
தலைவ நீ இறைவா
தடுத்தருள் செய்வாய்

## சொருக்கு வரி செலுத்தலாமா?

ஆட்சி செயும் செசாருக்கு
அளிக்கலாமோ வரிதான்?
சூழ்ச்சி செயும் பரிசேயர்
சுருக் கதனைப் போட

நாணயத்தைத் தருக என
நாதனவர் யேசு
காணுமொரு உருவத்தைக்
காட்டியவர் முன்னம்

மன்னனவன் சொத்து
மறுப்பின்றி அந்த
மன்னனுக்கே தருக
மாதவனார் சொல்வார்

இந்த விதம் அன்ன
இறைவனவன் பொருளைத்
தந்து விடல் தருமம்
தயாநிதி பகர்வார்

ஞானியவர் உரையை
நரிமனிதர் கேட்டுக்
கோணி ஒரு மனமாய்க்
கூறாது விரைவார்

## ஊசியின் காதுக்குள்ளே.......

பணக்காரன் ஒருவன்
பற்று மிகக் கொண்டோன்
பாசாங்கு செய்து
குணக்குன்று யேசு
குறித்து ஒரு கேள்வி
கூர்மையாய்க் கேட்டான்

எனக்கொன்று சொல்க
இணையில்லா வாழ்வை
எவ்விதம் பெறலாம்
உனக் கென்று வைத்த
உயர் பொருள் செல்வம்
ஒவ்வொன்றையும்

தனக் கொன்று மில்லாத்
தரித்திரர்க் கீவாய்
தருமமிது செய்தால்
இனிக்கின்ற வாழ்வை
இப்போதே பெறலாம்
என்றாரே யேசு

தனவந்தன் அவனோ
தான்மௌன மானான்
தானமது செய்ய
மனமில்லாச் செல்வன்
மாற்றம் உரையாது
மறைவானே போதில்

இனந்தன்னை நன்கு
எடைபோட்ட யேசு
இவ்வாறு சொல்வார்
குணந் தன்னைச் சொல்வேன்
குத்தூசி தன்னின்
குறுங்காதுட் பாலை

வனந்தன்னில் வாழும்
ஒட்டகமே நுழையினும்
ஓர் செல்வன் தேவ
கணந் தன்னைக் காணான்
கதி தன்னை அடையான்
கழலுவேன் நானே

பற்றற்றவ வர்க்கே
பரலோகம் சொந்தம்
பரமனவன் யேசு
உற்றதம் சீடர்
உள்ளமது தெளிய
உரைப்பாரே கேட்டு

# ஓய்வு நாள் - ஒரு கேள்வி

அண்ணலும் வருவார் அந்த
 அழகிய வயலினோரம்
கண்ணினைப் போலும் சீடர்
 காலடி பற்றிச் செல்வார்
அன்னவர் கதிரைக் கொய்து
 அடங்கிடாப் பசியினாலே
தின்னுவார் அதனைக் கண்டு
 தீயவர் குற்றம் சொல்வார்

ஓய்வு நாட்குரிய நல்ல
 ஒழுங்கினை மீறும் செய்கை
நேய நும் சீடர் செய்வார்
 நிச்சயம் குற்றம் என்பார்
காய்ந்தவர் நெஞ்சினாலே
 கழறிடக் கேட்டயேசு
ஆய்ந்த நல்வார்த்தை தன்னை
 ஆனதோர் பதிலாய்ச் சொல்வார்

தாவீது நண்பரோடு
 தாங்கிடாப் பசியினாலே
கோவிலின் உள்ளே சென்று
 குறித்தந்த அப்பந்தன்னை
ஆவலோ டுண்ட செய்தி
 அறியாத தென்ன நீவீர்
கேவலம் குற்றங் காண
 கிடைத்தவர் நாங்கள் தாமோ?

குருக்களே உண்ணத்தக்க
கோதறு அப்பந்தன்னை
இருந்தவர் உண்ட செய்கை
ஏற்றிடக் கூடுமாமோ?
அருளது பொழியும் அந்த
ஆலயந்தன்னைப் பார்க்க
பெரியது உண்டு என்னும்
பேருண்மை தன்னைக் கொள்க

களப்பலி தன்னை அல்ல
கருணையை; பாசந்தன்னை
உளமதில் கொண்டேன் இந்த
உண்மையை அறிந்தீராகில்
வழுவது அறியார் மீது
வம்புகள் பேச மாட்டீர்
பழுதறு ஓய்வு நாட்கு
பரன் மகன் பொதுவாம் என்பார்

## எரிக்கோவிலே.....

எரிக்கோ என்றொரு
ஊரதன் நடுவே
யேசுபரன் செல்வார்
உரக்கக் கேட்கும்
ஓர் குரல் காதில்
உத்தமனார் பார்ப்பார்
இரக்கமாயிரும்
தாவீதின் மகனே
இரந்தவர் கூவுவார்
உருக்க மானவர்
ஓடோடிச் செல்வார்
ஊனவிழி மனிதர்
பெருக்கு மருளால்
பேரொளி கொள்வார்
பிறிதென்ன வேண்டுமாமோ?

## நோயாளிகளைத்தேடி.....

மத்தேயு என்னுமொரு
மனிதனவன் வீட்டிலே
மாசில்லாத் தேவமகனே
பத்தியிலே அமர்ந்தவர்
பண்டங்கள் உண்ணுங்கால்
பார்த்தந்தப் பரிசேயரே
புத்தியது தடுமாறிப்
புலம்புவார் இவரிந்தப்
புன் குண மனிதரோடு
சித்தமது ஒன்றியே
செய்கின்றார் உணவு என
செப்பு மொழி அது கேட்டு
வித்தகராம் யேசு பரன்
விளம்புவார் நான் இங்கே
வியாதியில் வீழ்ந்தவரையே
நத்தி மிக வந்தேனே
நலம் உள்ள மனிதரோ?
நன்றாக அறிந்து கொள்வீர்

# பாலைவனத்தில் பார்த்தது என்ன?

ஆடிடும் நாணலோ அவ்வனம் கண்டீர்கள்
அலங்கார ஆடைகளே
சூடிடும் மனிதரோ? சொல்லுவேன் அவரெலாம்
சுகமான மனைகளிலே
கூடிடும் களியிலே குளிப்பவர் வாழ்க்கையில்
குன்றிடாச் செல்வர்களே
நாடிடும் தேவனின் வார்த்தையை நல்கிடும்
நல்லவர் ஒருவரையோ?

உண்மையைக் கூறுவேன் உத்தமர் அவர் போல
உலகினில் யாருமிலை
பெண்மகள் வயிற்றிலே பிறந்திட்ட மனிதரில்
பெரியவர் அவராவார்
விண்ணக அரசிலே சிறியவன் அவரிலும்
பெரியவன் அறிந்திடுக
மண்ணிலே மாசறு முழுக்கினைத் தருபவர்
மனிதர்கள் கொள்ளுவாரே

ஆயினும் சொல்லுவேன் ஆயங்கள் பெறுவோரும்
அம் முழுக்கேற்றனரே
ஞாயங்கள் பேசிடும் நாக்குள பரிசேயர்
நாடியே கொள்வதில்லை
தூயவர் யேசுவே தொட்டதைக் காட்டுவார்
தொண்டர்கள் சூழ்ந்திடவே
ஆய நல் விதமாக ஆயிரம் பகருவார்
அதிலொரு தவறிலையே!

# அருளப்பரின் அந்தியம்

ஏரோதன் என்று ஒரு இழிமகன்
இவன் கையில் ஓர் நாட்டின் அரசாட்சி
தீராத காமத்தில் தீயாவ்வான்
தேகத்தில் ஓடுகின்ற இரத்தத்தால்
வேறாக இல்லாத சகோதர
வேந்தனவன் மனைவியின் உடல் மீது
மாறாத ஆசையால் மனங் கெட்டான்
மனம் மாறும் பெண்ணாலே மண் கெடுமே

தன் மனைவி இருக்கையிலே தமையனவன்
தாரமதைத் தனதாகக் கொண்டவனின்
வன் பாவச்செயல் தன்னை அருளப்பர்
வகையாகச் சாடிடுவார் அவை முன்னே
பெண் பாவி அவளிந்தப் பெரு மகனைப்
பெரியதொரு கேடென்று வெறுத்தவளாய்த்
தன் நெஞ்சில் சூழ்ச்சி வலை பின்னிடுவாள்
தக்கதொரு தருணமும் வாய்த்திடுமே

மன்னனவன் பிறந்த நாட் பெருவிழா
மதுக் கடலில் நீந்துமவன் உடற் றோணி
பொன் நிலவு போலுமவள் புதல்வியின்
புது நடனம்; பூந்தென்றல் வீசிவரும்
தன்னுணர்வு இல்லாத தார் வேந்தன்
தள்ளாடி விழுந்தபடி உளறிடுவான்
என்னன்பு மகளே நீ கேட்டிடுவாய்
எது வேண்டுமானாலும் ஈவேன் நான்

அன்னையிடம் அவளோடிக் கூறிடுவாள்
அரசனவன் உரையினை அச்சேதி
கன்னலென அவள் காதிற் பாய்ந்தோட
கானகத்து அருளப்பன் தலை கொய்யும்
எண்ணமது நிறைவேற இது தருணம்
என அவளும் மகிழ்ந்தவளாய் இயம்பிடுவாள்
மன்னனிடம் சென்றந்தப் பரதேசி
மனிதனவன் தலை தன்னைக் கேளென்றே

அந்த மொழி கேட்டதுமே அரசனவன்
அடியற்ற மரம்போல வீழ்ந்திடுவான்
இந்தப் பொருள் மட்டும் நீ கேளாதே
என்று அவன் கெஞ்சிடினும் ஏற்கவில்லை
வந்த பல மன்னர் முன் தான் சொன்ன
வார்த்தையது காத்திடவே வழியின்றி
சிந்தையது நோகமிக அருளப்பன்
சிரந்தன்னைக் கொய்யென்று பணித்திடுவான்

அரியதொரு பரிசெனவே அத்தலையை
அப்பெண்ணும் வாங்கித் தன் அன்னையிடம்
உரியதவள் பொருளாக ஒப்படைப்பாள்
உற்றதொரு பகை முடித்த பெரு மிதத்தால்
கரிய மனப்பெண்ணவளும் தன் மகளைக்
கட்டியணைத் தானந்தக் கூத்திடுவாள்
பெரியதொரு பழிபாவம் செய்த இவள்
பெண்ணாமோ? இல்லை, வனப் பேயேதான்

# பாழ்வெளியிற் பக்தர் கூட்டம்

இருளப்பர் போலும் அந்த
ஏரோது மன்னன் என்பான்
அருளப்பர் தனைக் கொன்ற
அநியாயச் செய்தி கேட்டு
தெருளப்பர் எங்கள் பரன்
திசையது விலகிச் செல்வார்
மருளப்பர் போல பெரும்
மக்கள் அணி தொடர்ந்திடுமே

பாழ்வெளியான போதும்
பக்தர்கள் கூட்டம் போலச்
சூழ்ந்திடும் மக்கள் பார்த்துத்
தூயனோ இரக்கம் கொண்டு
நீள் வினை தீர்த்து நல்ல
நிறைவினைத் தந்தபோது
நாளது சாயும் மேற்கே
நகர்ந்திடார் ஒருவர் தானும்

அந்தியும் வந்ததாலே
அசைந்திடாக் கூட்டம் பார்த்துச்
சொந்த தம் ஊருக்கேகச்
சொல்லுக என்றே சீடர்
வந்தவர் பணியலானார்
வள்ளலோ அவர்கட்கெல்லாம்
தந்து நல் உணவு தாகம்
தணித்திட முயல்வீர் என்றார்

யேசுவின் வார்த்தை கேட்டு
என்னதான் சொல்வதென்றே
பேசவே சக்தியற்றுப்
பிரமித்துப் போன சீடர்
வாசனை ஊட்டும் நல்ல
வறுவல் மீன் அப்பமாக
ஈசனே எங்கள் கையில்
இருப்பது ஏழே என்றார்

உள்ளது போதும் இங்கே
உள்ளவர்க் கெல்லாம் என்ற
வல்லவன் எண்ணந் தன்னை
மனிதரும் அறிகுவாரோ?
சொல்லெதிர் பார்த்தவாறே
தோன்றிய சீடர் நோக்கி
உள்ள அவ்வுணவு தன்னை
உடன் கொண்டு வருக என்றார்

## புகழ்மிக்க புதுமை

கூடிய மக்கள் பார்த்து
கொடுத்த அவ்வுணவு பார்த்து
நீடிய வானம் பார்த்து
நிகழ்வதை முன்பே பார்த்து
மூடிய விழிகளாலே
மூலவன் எண்ணம் பார்த்து
வாடிய மக்கட் கெல்லாம்
வழங்கினார் போதுக்குள்ளே

உண்டது போக மீதி
ஒரு திரட்குவியலாகிக்
கண்டது பன்னிரண்டு
கூடைகள் நிறைவு ஆக
கொண்டனர் பெரு வியப்பு
கூறவே சொற்களின்றி
நின்றனர் ஊமையாக
நீண்டது அமைதியாங்கே

# வாய் தந்த வாழ்த்து

அமைதியைக் கிழித்துக் கொண்டு
    ஆர்த்தது கூட்டமொன்று
திமு திமு என்று மக்கள்
    திரண்டனர் வெள்ளம் போல
உமைவிடப் பெரியோன் இந்த
    உலகினிற் பிறக்கவில்லை
இமை நொடிப் போதுக்குள்ளே
    இணையற்ற புதுமை செய்த

யேசுவே வாழ்க என்றார்
    ஏந்தலே வாழ்க என்றார்
ஆசானே வாழ்க என்றார்
    அண்ணலே வாழ்க என்றார்
ஈசனே வாழ்க என்றார்
    எந்தையே வாழ்க என்றார்
ஓசைகள் வானைமுட்ட
    உணர்ச்சியால் வாழ்க என்றார்

காலினை வீழ்ந்து தொட்டார்
    கைகளை முத்தமிட்டார்
வேல் விழிமாத ரெல்லாம்
    வெட்கத்தை மறந்து தொட்டார்
கோலினைத் துணையாய்க் கொண்ட
    குடுகுடு கிழவரெல்லாம்
வாலிபராகி நின்றார்
    வழியினை மறித்துக் கொண்டார்

புதுமையைக் கண்டதாலே
    புலன்வழி மக்களெல்லாம்
கொதித்தெழு கடலைப்போலக்
    குழம்பிடக் கண்ட யேசு
அதி விரைவாக அந்த
    ஆற்றினைக் கடந்து சென்றார்
புது ஒளி மாலைப் போதும்
    புறப்பட்டு வந்த தம்மா

# இந்த உலகம் இப்படித்தான்

ஊது குழல் எடுத்து
ஊதினோம் நாங்கள்
ஓவென்று அழுதோம்
காதில் அது வீழ்ந்தும்
கடுகளவும் நீங்கள்
கருதவில்லை என்று
வீதியிலே நின்று
விளையாடும் சிறுவர்
விசனமுறல் போலும்
பேதைத் தனமான
பேருலகம் இதுவாம்
பெருமானே சொல்வார்

உணவு என அப்பம்
உறு சுவை திராட்சை
உட் கொள்ள வில்லை
வன மதனின் தேறல்
வாய்த்ததொரு பிராணி
வாய்க்கு நல் லுணவாக
தின முண்டு பாவ
திரு முழுக் களித்த
செம்மலவன் தன்னை
மன மிருளானோர்
மாயப்பேய் என்றார்
மனு மகன் தன்னை

உணவு தனில் வேட்கை
உள்ளவன்; திராட்சை
உட்கொள்பவன்
கணிகையரின் வீட்டுக்
கதவு தனைத் திறந்து
கதை பேசுபவன்
பணமொன்றே சேர்க்கும்
பாவிகளின் நண்பன்
பல நூறு விதமாய்க்
கணமொன்று பேசும்
கயவர்களின் உலகம்
கண்கண்ட உண்மை

## மக்கள் — ஒரு மதிப்பீடு

உதட்டினாற் போற்றும்
உலகத்து மனிதர்
இதயமது எட்ட
இருக்கிறது என்பேன்

இம் மனிதர் வீணே
எனை வணங்குகின்றார்
நம்புவதற் கரிய
நாடகக் காரர்!

# இறந்தவன் உயிர்த்தெழுகிறான்

பெத்தானி என உலகு
பேர் சொல்லும் கிராமத்தில்
பிரியாமல் மூவர் தாமே
ஒத்தவர் வாழ்வார்கள்
உடன் பிறப்பாவார்கள்
உயர்வான பாசமதுவே
முத்தாக ஒளி வீசும்
மோட்சத்தின் அருள்வீசும்
மூவரில் ஒருவர் அவரே
சித்தத்தில் ஒன்றாகிச்
சினேகத்தில் நிறைவாகிச்
சிறிதங்கு ஆற வருவார்

ஆறவரும் நாள் தன்னில்
அவர்களிலே ஒருவனவன்
அறியாது நோயில் வீழ்வான்
மீறவருந் துயராலே
மேலவனைக் கேட்பார்கள்
மெதுவாக அவர் பேசுவார்
கூறவரும் பிணியாலே
குமரனவன் பிரியானே
கோமகனே மகிமை பெறுவார்
தேறவரும் மொழி கூறித்
தேவமகன் யூதேயா
தேசமது தொடருவாரே

இந்த மொழி கூறியவர்
என் நண்பன் லாசர்தான்
இனிய துயில் கொள்ளுகின்றான்
அந்த நிலை இருந்து நான்
அவனை எழச் செய்வேனே
அங்குநாம் செல்லுவோமே
மந்த மதிச் சீடர்கள்
மறைவார்த்தை புரியாது
மாறாக நல்ல தென்றார்
அந்த மிலா யேசுபரன்
அறியாமை எனவோர்ந்து
அவனிறந்த சேதி சொல்லி
வந்த வழி திரும்புவார்
வனிதையவள் முன்வந்து
வாய்விட்டு அழுது சொல்வாள்
சொந்த என் சோதரன்
சொல்லாமற் போய் விட்டான்
சுதன் நீ இருந்திருந்தால்

மரித்திருக்க மாட்டானே
என்றவளும் சொல்லியழ
மாதவனும் பதிலுரைப்பார்
பிரிந்தவனும் உயிர்த்தெழுவான்
பேருண்மை இது எனவே
பேதையவள் மறு மொழியாய்
அறிந்தேன் நான் இவ்வுண்மை
அனைவருமே உயிர்த்தெழுவார்
அது அந்தக் கடைசி நாளில்
விரிந்தவரும் இயம்புவார்
விசுவாசம் கொண்டவர்கள்
வீழ்ந்ததில்லை மரணமதிலே

உண்மையிது சொல்லியவர்
ஊளமார நீயுந்தான்
ஒப்பினையோ எனக்கேட்க
பெண்ணவளும் உடனடியாய்ப்
பெரியவரே மெசையா நீ
பேரருளின் மகன் என்பாள்
எண்ணமிது வெளியிட்டு
ஏந்திழையும் பின்னுந்தன்
இனிய உடன் பிறப்பிடமே

அண்ணலவர் அழைக்கின்றார்
ஆம் அவர் அங்கேயே
அந்த உரை காதில் விழவே
மன்னனவன் எதிர் கொள்வான்
மலர்ப்பாதம் வீழ்ந்தழுவாள்
மாதவனே இருந்திருந்தால்
என்னவனும் மரியானே
என்றவளும் அழுவாளே
எங்கே? என அவர்கேட்பார்

நீர் வந்து பாரும் என
நெருங்கியவர் உரைப்பார்கள்
நெஞ்சார அவர் அழுவார்
ஊர் வந்த யேசு பிரான்
உடனந்த இடம் சென்று
உள்ள பெருங்கல் தன்னையே

எடுத்திடுக எனச் சொல்வார்
இதைக் கேட்ட மார்த்தளோ
இன்றோடு நான்கு நாளே
படுத்தவனைப் புதைத்து நாம்
பரவி எழும் நாற்றமே
பாவையவள் சொற் பகரவே

நம்பிக்கை இலையாமோ
நாதனவன் மகிமையை
நன்கு நீ காணலாமே
உம்பரவர் பதில் சொல்ல
உடனிருந்த மற்றவர்கள்
ஓங்கு பெருங்கல் எடுப்பார்

கல்லையவர் எடுத்ததுமே
கண்களவை வான் பார்க்க
கடவுள் மகன் யேசு சொல்வார்
நல்லவரே தந்தையே
நன்றாகக் கேட்பாய் நீ
நன்றி நான் சொல்லுகின்றேன்
என்னை நீ அனுப்பினாய்
எனும் உண்மை ஏற்கவே
இவ்விதம் நான் செய்வேனே

விண்ணை யவர் பார்த்துமே
விளம்பி மொழி உரத்துமே
'வெளியே வா' லாசர் என்பார்
சொன்ன உரை கேட்டதும்
சுருண்டிருந்த இளை ஞனும்
சுயமாக எழுந்து வருவான்
அன்னவனைக் கண்டதும்
அவன் கட்டை அவிழ்த்துமே
அனுப்புக வீடு என்பார்

# மரத்தில் ஏறிய மனிதன்

நாடோடி வணங்கும்
நாயகனாம் யேசு
நன்றாகக் கண்டு கொளவே
ஓடோடி வருவான்
ஒரு பெரும் செல்வன்
உருவத்திற் குள்ளனவனே
ஊடோடி மரத்தில்
ஏறி யவன் அமர்ந்த
ஒரு பெருஞ் செயலைக் கண்டு
ஈடாடிப் போவார்
எம் யேசு பெருமான்
இறங்கி வா என்றவரே
வீடோடி வருவேன்
விருந்தினனாகவே
விளம்பவே அவரிதனை
பாவியுடன் தங்கல்
பரிசுத்தர்க் கழகோ
பரிசேயர் முணுமுணுப்பார்
கூவியவர் சொல்வார்
குறிப்பாகக் கேட்பீர்
குணமில்லா மனிதர்களே

இழந்ததையே மீட்க
இவ்வுலகம் வந்தேன்
இது உண்மை என்றவரின்
குழந்தை மனப் பேச்சைக்
குள்ளனவன் கேட்டான்
குதூகலம் கொள்வானே

# எஞ்சியோர் எங்கே?

தூயான யேசு
    தம்மூர்க்கு வரவே
நோயாளர் பதின்மர்
    நொடிப் போதுக்குள்ளே
பாய்ந்தோடி வருவார்
    பகவானே அருள்வீர்
வாயெல்லாம் இந்த
    வரமொன்றே கேட்கும்

அருகோடி வந்த
    அவர் மீது தேவன்
அருளள்ளிச் சொரிவார்
    அப்போதே சொல்வார்
குரு தம்மைக் கண்டு
    காட்டுவீர் உம்மை
திரு வார்த்தை பெற்றோர்
    தெருவோடி மறைவார்

எல்லோரும் நலத்தை
    எய்திட்ட போதும்
நல்லதோர் பிறவி
    நன்றியுடன் வருவான்
வல்லோனும் அங்கே
    வந்தவனைக் கேட்பார்
எல்லோரும் சுகமே.........
    எஞ்சியோர் எங்கே?

# இயேசு — இறைமகன்

நாதனவன் வருவான்
　　நகரமதன் ஊடே
சூதர் தமைப் போலச்
　　சூழ்ச்சி மிகு யூதர்
காது தனில் இரைவார்
　　கடவுளவன் மகனோ?
வேதனவன் இதற்கு
　　விளக்கமாய்ச் சொல்வான்

எடுத்து நான் சொன்னேன்
　　எத்தனையோ; நீவிர்
மடுத்திடவே இல்லை
　　மகிபனவன் பேரால்
அடுத்தடுத் தீங்கு
　　அருங்குறிகள் செய்தேன்
கொடுத்து நற் சான்றும்
　　கொள்ளவிலை யாரும்

ஆட்டை நான் அறிவேன்
　　அவையென்னை அறியும்
காட்டுமோர் திசையில்
　　கால் வைத்து நடக்கும்
கூட்டுமென் குரலைக்
　　கூட்டமது கேட்கும்
தேட்டமது போலத்
　　திரவியமே இல்லை!

சிந்தை யவர் எனக்குத்
தந்தவற்றில் எல்லாம்
மந்தை யிது பெரிது
மா பெரிய செல்வம்
தந்தையவரோடு
தனயன் நான் ஒன்று
இந்த வுரை கேட்ட
இழிந்த மன யூதர்

கல் தன்னை எடுத்தார்
கையிரண்டில் எறிய
நில் என்று யேசு
நியாயங்கள் சொல்வார்
வல்லவனின் அருளால்
வையமதிற் புதுமை
எல்லையில செய்தேன்
இதற்காகத் தானோ?

எனைக் கல்லால் எறிய
எண்ணுகிறீர் என்பார்
கனைத்தவரும் சொல்வார்
கடவுள் மகன் என நீ
உனைச் சொல்லுகின்றாய்
உன் பணிகள் எல்லாம்
இணையற்ற தேனும்
இறை நிந்தை செய்தாய்

என் சொல்லும் சட்டம்?
 இறைவாக்கை உரைப்போர்
மண்ணுலகில் தேவர்
 மறை நூலும் அழியா
விண்ணவனின் அருளால்
 வியன் உலகம் வந்த
என்னை நான் தனயன்
 என நானும் சொன்னால்

தீய பல கூறித்
 திட்டுவதும் ஏனோ?
நேயன் எனை நம்பும்
 நெஞ்சமிலை என்றால்
ஏய பணி ஏனும்
 ஏற்றிடுவீர் நெஞ்சில்
ஆயனவனோடு
 அநாதி நான் அல்லோ?

வேதனவன் இதனை
 விளம்பிடவே அவர்க்கு
காதகர்கள் அவரைக்
 கைக் கொள்ள முனைவார்
தீது தனை என்றோ
 தெரிந்தவராம் யேசு
காத வழி செல்வார்
 கண்மூட முன்னே

## உறவு என்பது......

உறவினன் என்பான் யாரோ?
ஓர் பெரும் கேள்வி தன்னை
இறைமகன் எழுப்பித் தானே
ஏற்றதோர் உவமை சொல்வார்

(வேறு)

கள்வர் பயமிக்க
காட்டு வழி தன்னில்
உள்ள பொருளோடு
ஓர் மனிதன் வருவான்

வரு மவனைக் கண்ட
வன் கள்வர் கூட்டம்
பெரு மகிழ்ச்சியோடு
பேயாகப் பாயும்

பாய்ந்தவனின் உடலைப்
படு காயப் படுத்தி
வாய்ந்த பொரு ளெல்லாம்
வசமாக்கிச் செல்லும்

பாதையதனோரம்
பாவ மவன் முனகி
வாதையுடன் கிடப்பான்
வந்திடுவார் குரவர் !

குரவரவர் கண்ணில்
குற்றுயிராய்ப் போனோன்
தெரிந்துமவன் தன்னைத்
திரும்பியவர் பாரார்

மதகுரவர் சென்ற
மறு போதுள் அவர்க்கு
உதவு மொரு தொண்டன்
உற்ற வழி வருவான்

தொண்டனவன் தானும்
துளியளவும் இரங்கான்
கண்டதுமே அவனின்
கால் விலகிச் செல்லும்

மற்றுமொரு மனிதன்
மார்க்கமதில் வருவான்
குற்றுயிராய்ப் போனோன்
குழறு மொலி கேட்பான்

அழு மொலியைக் கேட்ட
அம் மனிதன் ஓடித்
தழுவியவன் துன்பம்
தணித்திடவே முயல்வான்

கருணையவன் கண்ணில்
கடல் போலப் பொங்கும்
இருகையால் அவனை
எடுத்துடனே செல்வான்

செல்லுமவ் வழியில்
தெரியுமொரு திண்ணை
இல்லமதன் தலைவன்
இடந் தந்து பணத்தை

கருணையுடன் இவனைக்
கவனிப்பீர் இன்னும்
திரும்பி வரும் போது
திரவியங்கள் தருவேன்

அன்பனவன் இதனை
அகமொன்றிச் சொல்லி
தன் நெடிய பயணம்
தான் தொடரலானான்

# அறுவடை அதிகம்

ஆயன் இல்லா?
ஆடுகள் போல
மக்கள் ஆனார்
நேயன் யேசு
நிகழ்வது கண்டு
நிழலைப் போல
சேயாய்க் கூடும்
சீடரைப் பார்த்து
செப்புவாரே !

அறுவடை அதிகம்
ஆட்கள் குறைவு
அதனாலன்றோ
இரு மடங்காக
ஏவலர் தம்மை
அனுப்புக என்றே
பெரு மகனாரைப்
பிரார்த்திப்பீரே
பிரியத்தோடே!

# ஒடுக்கப்பட்டோர் உரிமை பெற....

வளர்ந்த தம் ஊருக்கு
வானவரும் வந்தார்
அளந்தார்கள் சனங்கள்
ஆரிவர் என்று
தளர்ந்தாரா? இல்லை
தான் செபமன்றில்
எழுந்தாரே இசையாஸ்
இன் வார்த்தை பேச

ஆவியவர் என்னோடு
அதனாலே நானும்
கூவியிது சொல்வேன்
குறையுடையோரே
தாவி வரும் செய்தி
தடையெல்லாம் உடைய
பூவினிலே உரிமை
பூரணமாய்க் கொள்ள

சிறைவாசம் செய்வோர்
சிட்டு எனப் பறக்க
புரையோடிப் போன
புண்ணெல்லாம் ஆற
நிறைவான வாழ்வு
நிலமெல்லாம் அடைய
உரை நானும் செய்தேன்
உத்தமனார் பேரில்

# இதோ — ஓர் அடையாளம்

காட்டுக அடையாளம்
கடவுள் மகன் என்றால் நீர்
நீட்டினார் வார்த்தைகளை
நின்றந்தப் பரிசேயர்
கூட்டுமருள் உணர்வோடு
கோமகனாம் யேசு பரன்
நாட்டுவார் பதிலொன்று
நஞ்சு மனப் பேய்கட்கே

( வேறு )

பழுதில்லா யோனாசைப்
பாருங்கள்; அவர் போலப்
பாரதன் கர்ப்பத்திலே
பொழுதிராப் பகல் மூன்றும்
புகுந்து நான் இருப்பேனே
புதுமை நிகழ்ந்திடுமே
அழுதிந்த மனிதர்தாம்
அடையாளம் கேட்கின்றார்
அதனாலே சொல்லுவேனே

மீனதன் வயிற்றிலே
மிக நேர்த்தியாகவே
மேலவன் கடுகளவும்
ஊனமே யின்றியே
இருந்தந்த உண்மையை
இகமிது உணர்ந்திடவே
நானிதை உங்கட்கு
ஞாபக மூட்டினேன்
நடந்திடும் காணுவீரே

# மலையில் ஒரு மகத்துவம்

மலை ஒன்றில் ஏறி
மாபரனாம் யேசு
நிலை ஒன்றிச் செபிப்பார்
நிகழும் ஒரு புதுமை
கலை ஒன்றி ஒளிரும்
கதிராடும் முகத்தில்
சிலை ஒன்றல் போலச்
சீடர்களாவார்

அருளாளர் எலியாஸ்
அவரோடு மோசேஸ்
திரு வார்த்தை பேசித்
திளைப்பார்கள், சீமோன்
ஒரு வார்த்தை சொல்வார்
ஊற்ற பொருள் அறியார்
சிறு பாடி வீடு
செய்து நாம் இருப்போம்

மேக மந் நேரம்
மேல் வந்து நிற்கும்
மாக மது அதிரும்
மண்ணுலகம் கேட்கும்
ஏக திரு மகனார்
இவரில் நாம் மகிழ்ந்தோம்
போக மவர் வார்த்தை
புவியோரே கேளீர்

விண்ணோசை கேட்டு
விதிர்ப்புற்றச் சீடர்
கண்ணெல்லாம் பீதி
கலந்தோடச் சோர்ந்து
மண் மீது சாய்வார்
மாசில்லாத் தேவன்
தன் கையால் எழுப்பித்
தவிர்க பயம் என்பார்

பயமெல்லாம் தீர்ந்து
பரிதாபமாக
அயலெல்லாம் பார்ப்பார்
அடுத்தவர்கள் இல்லை
இயல்போடு யேசு
எடுத்துரை செய்வார்
அயலவர்க் கிதனை
அறிவியா திருப்பீர் !

# நம்பிக்கையின் சிகரம்

கப்பர்நகூம் என்னும்
கடலோரக் கிராமம்
எப்போதும் காற்று
எழுந்து வரக் கண்டு
வெப்போடி மறையும்
வேனிலது இனிக்கும்
உப்பு மணல் எங்கும்
ஒரு பெரும் கானல்

அங்கவரும் வருவார்
அன்பர் புடை சூழத்
தங்கமவர் ஒளியில்
தரணியது மூழ்கும்
சங்க மென மக்கள்
தவ மகனை மொய்ப்பார்
இங்கவரின் பெருமை
எழுத்து தனில் வருமோ?

தேவமகன் சிறப்பைத்
தெரிந்த ஒரு தலைவன்
ஆவலுடன் வருவான்
அவரடியில் வீழ்ந்து
கூவியவன் சொல்வான்
கொடும் பிணியில் எனது
ஏவலனும் வீழ்ந்தான்
இனிய அருள் செய்வீர் !

தலைவனவன் பேச்சைத்
தன் செவியிற் கேட்ட
கலை நிலவு யேசு
கனிவு மிகத் ததும்ப
அலை போலும் நோயால்
அவதியுறு வோனை
நலம் செய்வேன் என்பார்
நான் வீடு வந்து

(வேறு)

அவ்வுரை காதில் வீழ்ந்ததும் சொல்வான்
அமலனின் முகம் பார்த்து
எவ்வகை யேனும் எனக் கிலை தகுதி
என் மனை தனிலுங்கள்
செவ்வரிப் பாதம் சேர்ந்திட நீரே
செப்புவீர் ஒரு வார்த்தை
வெவ்விட நோயும் விலகியே ஓடும்
வேலையாள் குணமாவான்

இன்னும் அவனே எடுத்துரை செய்வான்
என் பணியாளனை
நண்ணி நீ போவென நகர்வான் பின்பு
நான் வா எனவே வருவான்
எண்ணி என் கருமம் இயற்றுவான் என்பான்
இறைமகன் கேட்டிஃதை
மண்ணினில் இஸ்ராயல் மத்தியில் இப்படி
மனிதனைக் காணேன் நான்

உறுதியாய்ச் சொல்வேன் உங்களுக்கெல்லாம்
உலகிரு புலமிருந்து
பெருந் திரளாகக் கூடுவர் மக்கள்
பெரியவர் மூவரோடு
இருந்திடக் காண்பீர் அரசினைச் சேர்ந்தோர்
இருட்டினை அடைவாரே
வருந்துவர் ஆங்கே வான் எனத் துயரில்
வல்லவன் உரைப்பாரே !

நடைபெறும் உண்மை நாட்டிய பின்னர்
நல்லவன் அவனிடமே
விடைபெறு நீயும் விசுவாசத்தாலே
வேலையாள் குணமாவான்
கொடை பொழி வள்ளல் யேசுவும் கூறக்
குணமவன் அடைவானே
திடமிகு நம்பிக்கை இருந்தாற் போதும்
தீர்ந்திடும் துன்பங்களே

# பாஸ்காத் திருவிழா

புளிப்பிலா அப்பமென்னும்
புகழ் மிகு விழாவைக் காணக்
களிப்போடு மக்கள் செல்வார்
கவலையொன்றறிய மாட்டார்
பழிப்பிலா நகரமாகும்
படி மிசை ஜெருசலேமும்
குளிப்பினில் மூழ்கிப்போகும்
குறையதற் குண்டு மாமோ?

ஒவ்வொரு ஆண்டும் இந்த
உற்சவம் தொடங்கும் போது
நவ்வியின் விழியைப் போல
நங்கையர், ஆண்களெல்லாம்
அவ்விடம் விரைவார் அந்த
அழகிய நகரந் தன்னில்
ஒவ்விடும் வண்ணம் மக்கள்
ஒரு பெருங் குடும்பமாவார்

புடையது சூழச் சீடர்
புனிதனாம் யேசு தேவன்
நடையினிற் போவார் ஆங்கு
நகரினில் மக்கள் வெள்ளம்
மடையது திறந்தாற்போல
மாதவன் நெஞ்சந் தன்னைக்
குடைந்திடும் ஏதோ ஒன்று
குறிப்பினை அறிவாராரோ?

# விளம்பரம் வேண்டாம்

தனைக் கொல்ல நினைக்கும்
    தறுகண்ணர் வாழும்
    தாய் நாட்டை விட்டு
கனை கடற் சூழும்
    கலிலேயா நாட்டில்
    கால் வைத்த யேசு
அனை வர்க்குந் தேவ
    அருள் வார்த்தை பொழிவார்
    அற்புதம் தொடரும்
தினமிதைக் காணும்
    திருமகனின் அன்புச்
    சோதரர்கள் சில பேர்
உனை மக்கள் அறிய
    உன் சீடர் வாழும்
    யூதேயா சென்று
மனந் தன்னைக் கவர
    மறை உரை செய்க
    மறைவாக ஏனோ?
என்றவரும் சொல்வார்
    யேசு பரன் கேட்டு
    இந்த விதம் பகர்வார்
இன்றிந்த உலகம்
    எனக் கெதிரி யாகும்
    என் னேரம் இன்னும்
ஒன்றி வரவில்லை
    ஊர் உம்மைப் பகையா
    உங்கள் நிலை ஈங்கு

நன்று அது அறிவேன்
நகர் விழாக் காண
நான் வர வில்லை
குன்று என அவரும்
குலையாது சொல்வார்
குடும்ப இன சனத்தார்
சென்றிடுவார் அந்தத்
திரு நகரம் நோக்கிச்
சில நாட்கள் செல்ல

மறைவாகத் தேவன்
மணி விழாக் காண
மா நகரம் செல்வார்
குறைவாக அங்கு
கூறுவார் சிலபேர்
குறித்த வரை மற்றோர்
நிறைவாகச் சொல்வார்
நிகழ்ச்சியது முடிய
நிமலனவன் தோன்றி
இறை வார்த்தை பொழிவார்
இருந்தவர்கள் எல்லாம்
இம் மனிதன் நாவில்
வரையற்ற ஞானம்
வந்த விதம் யாதோ?
வாதமது கேட்டு
உரை செய்வார் யேசு
உள்ளபடி சொல்வேன்
உப தேச மெல்லாம்

எல்லையிலா அந்த
இறைவனவன் வேதம்
என் வார்த்தை இல்லை
நல் லந்தத் தேவன்
நாட்டத்தின் படியே
நடக்கின்ற மனிதர்
சொல்லிருந் தெங்கு
சுரந்து வரு மென்று
சுயமாக அறியார்
நல்லாகச் சொல் வேன்
நாதனவன் மகிமை
நாடு வார் மனத்தில்
வெள்ள மென உண்மை
வெளி வரும் சிறிதும்
வேஷ மதில் இல்லை

இல்லையோ சொல்க
மோயீசன் அன்று
எடுத்தாண்ட சட்டம்
கொள்ளவிலை நீங்கள்
கோமகனும் கடிவார்
குறிப்பாக என்னைக்
கொல்லவே விழைந்தீர்
கூற்றிதைக் கேட்டக்
கூட்டமது கொதித்துப்
பொல்லாப் பேய் உன்னுள்
புகுந்துள்ள தாமோ
புரளி விடுகின்றீர்
எல் லாரும் இரைவார்
எவர் உம்மைக் கொல்ல
எத்தனம் செய்தார்?

மக்களவர் வினாவ
மாதவனும் கேட்டு
மறு மொழியாகத்
தக்க தொரு செயலை
ஒய்வு நாட் போதில்
நான் செய்த தாலே
விந்தை யென நீங்கள்
விழிகளைத் திறந்தீர்
விருத்த சேதனத்தை
அந்த நாட் போதில்
ஆர் செய்ய வில்லை
அது போலத் தானே
இந்த நற்பணியை
ஏற்று நான் செய்தேன்
ஏன் கோபம் என்று
சிந்தித்து நியாயம்
செய்யுங்கள் என்பார்
தீர்ப்பதன் வழியாம் !

## எத்தனை பேருக்கு இரட்சணியம்?

எருசலேம் நோக்கி யேசு அவர் செல்கையில்
ஒருவனவன் கேட்பான்; உத்தமரே சொல்க
மீட்புதனை அடைவோர் மிகச்சிலர் தாமோ?
காப்பு என விளங்கும் கடவுள் மகன் சொல்வார்

ஒடுங்கிய வழியால் உட் செல்ல வேண்டும்
தட வழி ஆபத்தைத் தரும் அதனாலே
வாழ்வது வழங்கும் வழியினில் வருக
தாழ்வதில் இல்லை தவமகன் சொல்வார்

அப்போத வரைப் பரிசேயர் அணுகி
இப்போதகல்க; ஏரோதரசன்
உம்மைக் கொல்ல உளமது கொண்டான்
இம் மண்ணிருந்து ஏகுக என்பார்

உரையிது கேட்ட உத்தமன் முகத்தில்
கரையிலாக் கோபம் கடிதினில் தோன்றும்
சென்றந் நரியிடம் செப்புவீர் இதனை
இன் றென் நேரம்; என்பணி செய்வேன்

எருச லேம் விடுத்து இறை வாக்குரைஞர்
ஒரு வேறிடத்தில் உயிர் விடுதல் இல்லை
நடை முறை உண்மை நயமாய்ச் சொன்னார்
கிடைத்தற்கரிய கிறிஸ்து எம் பெருமான்

# ஓடிவந்த பெண்ணொருத்தி

யேசு எனும் தேவன் எருசலேம் வருகிறான்
என்னும் ஒரு செய்தி காதில் விழ
பேசுமவன் புகழ் பெருமை யெலாம் நெஞ்சில்
பேணி வளர்த்ததோர் பெண்ணழகி
கூசுமொரு மனம் கொண்டு பின் தள்ளினும்
குருபரன் தன்னையே காண என
ஆசை எனும் வெள்ளம் ஆளை விழுங்கிட
அவசரக் கோலத்தில் ஓடி வந்தாள்

வீட்டிலுள பல வேலையெலாம் அவள்
விட்டு விட்டே அங்கு ஓடி வந்தாள்
கூட்டிலுள ஒரு குருவி பறத்தல் போல்
கோதையவள் மிக ஓடி வந்தாள்
நாட்டிலுள மக்கள் நாடிப் புகழ்ந்திடும்
நாதன் முக மலர் காண என
ஏட்டிலுள கவி இன்பம் தருதல் போல்
இதயம் கனிந்திட ஓடி வந்தாள்

காற்றது வந்துமே போட்டியிடும் அந்தக்
கன்னியவள் தன்னைக் கண்டதுமே
தோற்றது யாரெனச் சொல்லுவரோ? எழில்
தோகையே என்பதைத் தள்ளுவரோ?
மாற்றுப் பொன் போலுமே மங்கை உடல் அதில்
மண் பூழி பட்டுமே மங்கி விடும்
தோற்றமது கொள்ளும் தோகையவள் ஒரு
துள்ளுத் துள்ளியே ஓடி வந்தாள்

கட்டிய பூங்குழல் கலைந்திடவே ஒரு
    கையினைக் கொண்டதைப் பிடித்தபடி
தட்டித் தடக்கிடும் சேலையதைத் தான்
    தவறியே வீழாது காத்தபடி
முட்டிய நாணத்தை மறைத்தபடி, தன்
    மோக விழிமையைத் துடைத்த படி
எட்டியவள் கால்கள் வைத்திடுவாள், ஒரு
    ஏக்கம் மனதினை வாட்டிடுமே

ஓடி வரும் அவள் பாதையிலே அங்கு
    ஒவ்வொரு ஆளையும் கேட்டபடி
கூடி வரும் பெரும் கூட்டமதற்குள்ளே
    கோமகன் தன்னையே பார்த்தபடி
தேடிவரும் அவள் கண்களுக்கு எங்கள்
    தேவமகன் முகம் தெரியவில்லை
வாடிவரும் அவள் வண்ண முகமெலாம்
    வார்த்தைகள் வாயிலே நின்று விடும்

மூச்சிரைக்க அவள் ஓடிவந்தாள், தூர
    மோகனன் யேசுவைக் கண்டதுமே
பேச்சை இழந்ததோர் பெண்மயிலாள் அந்தப்
    பேதையைக் கண்டவர் இரங்குவரே
நீச்சல் அடித்தவள் வந்ததனை எங்கள்
    நிர்மல யேசுவும் அறிந்ததனால்
ஆச்சரியம்மிக வினவிடுவார், அவள்
    ஆண்டவர் பாதத்தில் வீழ்ந்திடுவாள்

# பலியிடுதல் பாவம்

பற்பல ஆடுகள் கூட்டிவந்தார் — ஒரு
பலி பீடந் தன்னிலே மாட்டி வைத்தார்
சற்றும் இரக்கமே இல்லாதவர் — இந்தச்
சனங்களெல்லாம் மிகப் பொல்லாதவர்
கற்பனை என்றவர் முழக்கு கின்றார் — தம்
கடமை என வேறு விளக்குகின்றார்
விற்பனை; வியாபாரம் செய்பவர்கள் — ரத்த
வெறியினில் உயிர்களைக் கொல்பவர்கள்

கத்திதனை அவர் ஓங்குகின்றார் — பலர்
கை தட்டி மகிழ்ச்சியில் வீங்குகின்றார்
வித்தை யெலாம் அவர் காட்டுகின்றார் — பெரும்
வீரர் எனப் பெயர் சூட்டுகின்றார்
புத்தியிலா இழி மூடரவர் — பழம்
புராணத்தை நம்பிடும் கேடரவர்
பித்தர் குழாமதன் பிடியினிலே — வாய்
பேசா உயிர் ஒரு நொடியினிலே

மாண்டு மடிந்திடும் மண்ணுலகில் — இந்த
மமதை பிடித்தவர் ஏன் உலகில்?
கூண்டில் அடைத்திட்ட ஆடுகளை — கூட்டிக்
கொடியவர் செய்திட்ட பாடுகளை
தீண்டும் விஷந்தரு பாம்புகளே — தினம்
தீயவர் செய்வது வீம்புகளே
ஆண்டவர் யேசுவும் பார்த்திடுவார் — மன
ஆத்திரத்தால் உடல் வேர்த்திடுவார்

பஞ்சமா பாதகம் செய்வதோ? — ஏ
பாவிகளே ! உயிர் கொய்வதோ?
நஞ்சிலும் கொடியவர் மனிதரோ? — அவர்
நாடக மாடினாற் புனிதரோ?
தஞ்சமென வாழும் சீவனே — அதைத்
தந்தவர் உலகினில் தேவனே
கொஞ்சமும் கருணை இல்லையோ? உங்கள்
கொடுமைக்கிது தான் எல்லையோ?

வாளை எடுத்தவர் வாளினால் — செத்து
மடிவது நிச்சயம் ஊழினால்
நாளை வரு மொரு ராச்சியம் — அதற்கு
நானே தருவேன் சாட்சியம்
வேளை எழுமொரு காலமே — கண்கள்
விடியலைக் கண்டிடும் ஞாலமே
மோழைய ழியவே முழங்குவார் — யேசு
முனியவர் கோபத்தில் துலங்குவார்

உயிர் களிடத்திலே பேதமோ? — இதை
உரைப்பது தான் உங்கள் வேதமோ?
பயிர்களைக் கண்டதும் வானமே — இருண்டு
பரவியே பெய்திடும் தானமே
துயருக் கிரங்கிடும் நெஞ்சமே — என்றும்
தூயவன் வாழ் இடம் மஞ்சமே
உயர்ந்த நம் மானிட ஜென்மமே — இதை
உணராத தென்னவோ வன் மமே

யேசு குரலொலி கேட்டதும் — அந்த
எத்தர்கள் வாளினைப் போட்டதும்
நீசரவர் ஓடிப் போனதும் — ஒரு
நிமிடத்தில் அமைதியே ஆனதும்
தோஷ மெலாம் நீங்கச் செய்ததும் — மக்கள்
சூழ நல் வாழ்த்துக்கள் பெய்ததும்
தேச மெலாம் கூடிப் பேசுமே — எங்கள்
தேவமகன் புகழ் வீசுமே !

## எருசலேமே..... எருசலேமே

எருசலேம் நகரினை
யேசுவும் நோக்கியே
உருகியே சொல்லுவார்
ஓ ! என்றன் நகரமே !
வருமொரு காலமே
வன் முறை யாளர்கள்
பெரும் படை யோடுமே
பிடித்துனை அழிப்பரே

(வேறு)

தேவனவன் விரும்பித்
தேடியுனை வந்தார்
ஆவலுடன் நீயும்
அரவணைக்க வில்லை
பாவி நீ அவ்ரைப்
பரிகாசம் செய்தாய்
பூவி லே உன்னில்
பூண்டு தான் முளைக்கும்

# உடலம் ஓர் ஆலயம்

இடித்துமே போட்டாலிந்த
எருசலேம் கோயில் தன்னை
முடியுமே என்னாற் கட்டி
மூ நாளில் எழுப்ப வென்றே
அடித்தவர் சொல்லக் கேட்டு
அறிவிலா மக்கள் கூட்டம்
பிடித்ததோ பித்தம் இந்தப்
பேயனுக் கென் பார் கேட்க!

உடலெனும் கோயில் தன்னை
உட் பொருளாக்கி எல்லாம்
கடந்தவர் சொன்ன பேச்சின்
கருத்தினை உணரா மக்கள்
இடறினார் தமக்குள்ளாக
எதையுமே நுனிப் புல் மேயும்
மடையர் தம் மூளையாலே
மகி பனை அளக்கலாமோ?

# ஏைழ் பெண்ணின் காணிக்கை

கோவிலில் மக்கள் கூட்டம்
குழந்தைகள் பெரியாரோடு
ஓவியம் போலும் பெண்கள்
உருக்கமாய்ச் செபிக்கலானார்
காவிய நாயன் யேசு
கடவுளின் மைந்தன் தானும்
சேவிக்கும் நினை வாயங்கு
திரு வடி வைக்க லானார்

உண்டியற் பெட்டி ஒன்று
ஒளிர்ந்திடும் வெள்ளிக் காசு
கொண்டதில் இடுவார் செல்வர்
கொழு நனும் இல்லா ஏழைப்
பெண்ணவள் தானும் இட்டாள்
பெறற் கரும் ஒற்றைக் காசைக்
கண்டனன் தேவன் இந்தக்
காட்சியை; வார்த்தை சொல்வார்

இருந்ததை இட்டாள் இந்த
ஏழையும் அதனைத் தானே
வருந்தியே உழைத்தாள்; ஆனால்
வானெனச் செல்வம் பெற்றோர்
விருந்ததன் எச்சம் போல
விளங்கிடும் காசைத்தந்தார்
பொருந்தியே பார்க்கப் போனால்
பூவையே உயர்ந்தாள் என்றார்

# கல்லறை மனிதர்கள்

வேஷத்தைக் கலைக்க
    வேத நூல் அறிஞர்
மோசத்தைச் சொல்ல
    மூவு லகும் வெறுக்கும்
நாசத்தைப் போக்க
    நாதன் எம் யேசு
பேசத் தான் எழுந்தார்
    பெரும் புயல் வீசும்

(வேறு)

வேத நூல்கள் கையிலே
    விரிவுரைகள் வாயிலே
பாதகமோ நெஞ்சிலே
    பரி சேயரே கேட்பீரே !
மாதர் வீடு தேடியே
    மறைவாய்ச் செல்லுகின்றீரே
தீதர் உங்கள் தலையிலே
    தெய்வ பழி வீழுமே !

நச்சுமிழ் பாம்புகளே
    நாடகங்கள் ஆடு வோரே
இச்சை மிக வாகவே
    ஏழையவர் பொருள்களை
அச்சுறுத்திக் கவர்கின்றீர்
    அநியாயம் செய்கின்றீர்
எச்சரிக் கை செய்கின்றேன்
    எரி நரகம் வீழ்வீரே !

குருட்டு வழி காட்டிகளே !
    கோயில் மேல் ஆணையிடல்
பொருட்டாகத் தெரிய வில்லை
    பொன்மீது என்றாலோ
மிரட்டுகிறீர் மனிதர்களை
    மிக்க பொருள் ஆசையினால்
இருட்டுலகில் வாழ் வோரே
    எழுந்து வெளி வாருங்கள்

(வேறு)

சுமை யள்ளிப் பொது மக்கள்
தோள்களிலே வைப்பார்
சுண்டு விரலாலும் அதைத்
தொட்டு அவர் பாரார்
அமைவாகப் பிரசங்கம்
ஆயிரமாய்ச் சொல்வார்
அணு வேனும் செய்கையிலே
அதைக் காட்ட மாட்டார்
நமை ஏய்க்க எத்தனையோ
நாடகங்கள் செய்வார்
நாம் பார்க்க வேண்டுமென
நப்பாசை கொள்வார்
தமை முன்னால் நிறுத்தி மிகத்
தம்பட்டம் அடிப்பார்
'தான்' என்னும் அகந்தையிலே
தனை மறந்து போவார்

வெண்ணாடை நிலந்தோய
விருப்புடனே அணிவார்
விமலனவன் கோயில் களில்
விருந்துகளில் எல்லாம்
கண்வைத்து முதல் தானம்
கைபற்றிக் கொள்வார்
காணவென மற்றவர்கள்
களிவோடு ஜெபிப்பார்
மண்ணுலகில் 'தந்தை' என
மற்றவரை அழையீர்
மறந்துமே 'குரு' வென்று
மனிதர்களைக் கொள்ளீர்
எண்ணமதைச் சொல்வேன் நான்
இறையவனே தந்தை
இரட்சகராம் மெசையாவே
ஏற்ற தொரு குருவாம்

# கறை படிந்த கரங்களோ

அறவுரை ஆற்றுவார்
அமலனாம் கிறிஸ்துவே
அப்போது பரி சேயர்கள்
குறையது காணவே
கூட்டமாய்ச் சூழுவார்
கோதையின் பேர் தனிலே!

பாவமிவள் செய்தாள்
பகிரங்க மாகவே
பரிசுத்த வாளனே நீ
சாவே இதற்கு நாம்
தரும் பரிசாகுமே
சாற்றுமுன் பதி லென்னவோ?

குற்றமது காணும்
குறிக் கோளுடனேயே
கூடியே வந்தவரை
முற்று முணர்ந் தெங்கள்
மூலப் பழம் பொருள்
மோன மாயிருந்தனனே

இருந்தவர் நிலத்திலே
ஏதோ எழுதுவார்
இது கண்டெரிந்தவர்கள்
மருந்தினைச் சொல்லென
மா டெனக் கத்துவார்
மாதவன் பார்த்த வரை

கறை யில்லாக் கைகளே
 கன்னியிவள் மீது
 கற் களை வீசட்டுமே
உரையிதைக் கேட்டதும்
 ஓடியே ஒளித்தனர்
 உள்ளத்தாற் கெட்டவரே

ஓடி யவர் போக
 உட்கார்ந்திருந்தந்த
 ஊனமே ஆனவளின்
நீடிய பாவத்தை
 நிமலனும் பொறுத்தனன்
 நீ இனிச் செய்திடாதே !

புத்தி இது கூறிப்
 போ எனப் புகன்றனன்
 புனிதனாம் யேசு பிரான்
சுத்த மான மாது
 சோதியாம் தேவனைத்
 தொழுதடி பணிந்தனளே

# ஆர் தந்தார் அதிகாரம்?

ஆன பல பணிகள்
    அனு தினமும் செய்யும்
வான மகன் மீது
    வளர்ந்த பெருங் காழ்ப்பால்
ஊன விழியா னோர்
    உளங் குறுகிப் போனோர்
காண வென குற்றக்
    கணை யொன்று தொடுப்பார்

ஊரெல்லாம் சென்று
    உப தேசம் செய்ய
ஆர் தந்தார் உமக்கு
    அதிகாரம்? சொல்வீர்!
கூர் ஞான யேசு
    கூற்றதனை உணர்ந்து
ஓர் கேள்வி கேட்டார்
    உடனவரைத் தடுத்து

அருளப்பர் எனும் மகான்
    அளித்த திருமுழுக்கு
அருளியவர் யாராமோ?
    அவ்வானோ? இல்லையேல்
மருளுலகில் வாழ்கின்ற
    மனிதரவர் தாமோ
பொருளுடைய பதிலொன்று
    புகன்றிடுவீர் இப் போதே

எப்பதிலும் சொல்ல வில்லை
    என்னுடைய கேள்விக்கு
அப்படியே கல்லானீர்
    அருளப்பர் தமை உலகு
ஒப்பிலான் எனச் சொல்லும்
    உண்மையிது; அஞ்சுகின்றீர்
செப்பேன் நான் பதிலேதும்
    செயலுமது போல் தானே!

# உலக அழிவு

இறுதி நாள் எவ்விதம் இருக்கும்?
என்னுமொரு கேள்விக்கு
உறுதியாய்ச் சொல்வார் யேசு
உளந்தனில் பதியத்தானே

(வேறு)

ஊரோடு ஊர் மோதும்
உற வோடு உறவூடும்
உட் பகைகள் உயிர் கொள்ளுமே
வேரோடு மரம் வீழும்
விதம் போலக் குடும்பங்கள்
வெவ் வேறாய்ப் பிரிந்து விடுமே
நீரோடு நீர் மோதும்
நிலத்தோடு நிலம் சாடும்
நீ யாரு என்று தாயைப்
பேரோடு பெற்ற மகன்
பெரிதாகக் கேட்பானே
பெற்ற மனம் சாயமிடுமே

ஆரோடு ஆர் பேசல்
அதுவுந்தான் எது பேசல்
அறியாதோர் மிகுநேரமே
காரோடும் வானத்தில்
காணும் அடையாளங்கள்
கலக்கத்தை ஊட்டிவிடுமே

கருக் கொண்டதாய் மார்க்கு
காலமது பொல்லாது
கண்ணீரே வாழ்வாகுமே
உருக் கொண்ட பெருநோய்கள்
ஊரெல்லாம் பரவி வரும்
ஒரு கோடி துன்பம் எழுமே

தருக் கொண்ட பசுஞ் சோலை
  தண்ணென்ற மலர் தூவும்
  தளிரிளங் கொடி வர்க்கமே
திருக் கொண்ட நிலமெல்லாம்
  தீப்பட்டுப் பாழாகும்
  தேசத்தில் பஞ்சம் மிகுமே
பருக் கொண்ட முகம் போலப்
  பாரழகு குன்றி விடும்
  பார்க்கின்ற மனமெல்லாமே
செருக் கொண்ட களமாகும்
  செவ்விரத்த ரணமாகும்
  சிரிக்கு மொரு முகமில்லையே

போர் மேகம் சூழ்ந்து வரும்
  பூமி பல கூறாகும்
  பொது மக்கள் பிணம் வீழுமே
தேர் போல அசைந்து வரும்
  தென்றலது புயலாகும்
  திரை கடலும் பொங்கி எழுமே
ஆர் ஆரோ பல சொல்வார்
  அதிசயங்கள் இவை கண்டு
  அணுவளவும் நம்ப வேண்டா
நேரும் இவை எல்லாமே
  நிறைவன்று ஆரம்பம்
  நெஞ்சினிலே கொள்ளுங்கள் என்
பேர் சொல்லும் கிறிஸ்துக்கள்
  பிறந் தெங்கும் வருவார்கள்
  பெரு மக்கள் தாமும் அவரே
சீர் கெட்ட வார்த்தைக்குச்
  செவி தந்து நிற்பார்கள்
  சிந்தையது தடுமாறுமே

எண்ணாத புதுமைகள்
இவர் செய்து காட்டுவார்
இமை மூடித் திறக்கு முனமே
மண்ணாளும் அரசர்களும்
மனிதருமைச் சிறைக்குள்ளே
மரணம் வரை தள்ளுவாரே
என்னாலே உங்கட்கு
இன்னலது இது போல
எத்தனையோ தொடர்ந்து வருமே
கண்ணான மனிதர்களும்
கை விட்டுப் போவாரே
கடுகளவும் கலங்க வேண்டாம்
விண்ணாளும் அரசன் நான்
வீற்றருகில் இருப்பேனே
விசுவாச மிழக்க வேண்டாம்
என்னுரையில் சொல்லேதும்
எக் காலும் மாறாது
இவ் வுலகம் அழிந்தாலுமே

# நான் வழங்கும் தீர்ப்பு

ஆதி மகன் யேசு
அனைவர்க்கும் சொல்வார்
நீதி மான்தன்னை
நிறுத்து நான் எடுப்பேன்

வானுலகின் தூதர் படை
வந் தென்னை வணங்க
நானுலகின் மானிடரில்
நல்லவரைத் தெரிவேன்

நல்லவரைத் தேர்ந் தெடுத்து
நானவர்க்குச் சொல்வேன்
வல்லவராம் என் தந்தை
வலப் பக்கம் வருவீர்

தீயவரைப் பார்த்த வர்க்குத்
தீ எரியும் நரகம்
போய் விழுக என்று நான்
புகலுவேன்; உண்மை

## மீண்டும் நான் வருவேன்

இத்தனையும் நடந்த பின்
எழில் வானம் இருளும்
முத்தனைய நிலா வொளி
முற்றாக மங்கும்
எத்தனை யோ வெள்ளிப் பூ
எல்லாமே உதிரும்
பித்தனைய மனித இனம்
பெருங் கூச்சல் வைக்கும்

அந்நேரம் மேக மெனும்
ஆடையது விலக
என் நேரம் வந்ததினால்
ஈடிணையே இன்றிப்
பொன் போலுந் தூத ரெனைப்
புடை சூழ வருவேன்
மண் ணெல்லாம் புதியதோர்
மகிமை தனைக் காணும்

# உன் குடி அழியும்

உன் குடி அழியும்
உரைத்தனன் யேசு
என்னுரை நீயும்
ஏற்கவே இல்லை
அன்னையைப் போல
அழைத்தனன் நானே
மண்ணினில் உயர்ந்த
மா பெரும் நகரே

எருசலேம் நகரே
இது நான் சொல்வேன்
வருவது மொழியும்
வாக்கினர் எல்லாம்
கரு வறுத் தாயே
கருணையினாலே
குருகது போலக்
குஞ்சுகள் தம்மை

அருகினிற் சேர்க்க
அவா வினேன்; நீயோ
ஒருப்பட வில்லை
உத்தமன் பேரில்
வருபவர் தம்மை
வாழ்த்திடும் வரையும்
திருமகன் தம்மைத்
தீண்டிட மாட்டாய் !

# உலகின்

# ஒளி

ஒளி நான் உலகிற்கு
   உயிருள்ள அப்பம்
வழி நான் மனிதர்க்கு
   வருபவர்கள் எல்லாம்
இழிவுறு இருளை
   என்று மவர் பாரார்
அழிவில்லா வார்த்தை
   அனைவருமே கொள்க !

என் வழியில் வருவோன்
   இடறிவிழ மாட்டான்
தன் வழியிற் செல்வோன்
   தவறி விழல் உறுதி
விண் வழியில் வந்தோன்
   விமலனவன் யேசு
பொன் வழியே தந்தான்
   புரிந்தவர்கள் வாழ் வார் !

## தாயாக உங்களைத் தாங்குவேன்

ஓய் வது இன்றி
உழைப் போரே நீங்கள்
ஓடியே வாருங்களேன்
தாயாக மெல்லத்
தாங்குவேன் நானே
தாருங்கள் சுமையினையே

சாந்தமும் மகிழ்வும்
சகலமும் உள்ளவன்
தளர்ந்திட வேண்டாமே
பாந்தமாய் உங்களைப்
பற்றுவேன் நானே
பயப்பட வேண்டாமே

ஆன் மாவுக் கமைதி
அளிப்பவன் நானே
அனைவரும் வருவீரே
தேனாக இனிக்கும்
என் நுகம் இதனைத்
தெரிந்து தான் கொள்வீரே

## நம்பிவந்த மனிதரை......

வீற மறையில் ஏதுமில்லைப்
    பேசுகின்றீர் இப்படிப்
    பேசிப் பேசி மக்களிடம்
    பேதங்களை வளர்க்கின்றீர்
நிறை யழிந்த மனிதர்களே
    நீவிர் உங்கள் மதங்களில்
    நினைத்தவரைச் சேர்த்து விட்டு
    நியாயம் என்ன சொல்கிறீர்?

நம்பிவந்த மனிதர்களை
    நரகந் தன்னில் தள்கிறீர்
    நரகந் தன்னில் தள்ளி விட்டு
    நல்ல வேதம் படிக்கிறீர்
தம்பி இந்த மனிதர்களின்
    தர மறிந்து கொள்ளு நீ
    தர மறிந்து கொள்ளாவிடில்
    தவறி வீழப் போகிறாய்

# நான்
# இருக்கும்
# இடம்

என் பெயரைக் கூறி
இருவரவர் இருந்தால்
அன்பரவர் இடையே
அமர்ந்து நான் இருப்பேன்
என்புருகும் சொற்கள்
இறைவனவன் சொல்வான்
இன்பமெனும் ஊற்று
எழுந்து வரும் அம்மா !

# நோய்
# தரும்
# கிருமிகள்

உள்ளமதன் நிறைவால்
ஒரு மனிதன்
வெள்ள மெனச் சொல்லை
வெளி விடுவான்

வாயிருந்து வருமந்த
வார்த்தைகளே
நோய் தரும் கிருமிகள்
நூதனமோ?

## நம்பிக்கை இருந்தால்.....

இம்மி யேனும் இதயமதில்
விசுவாசம் இருக்கு மாயின்
அம் மலை தன்னைப் பார்த்து
அகலுக என்றாற் கேட்கும்
நம்புக இறைவன் தன்னை
நாயகன் அவனே யார்க்கும்
அம்புவி தன்னில் யாவும்
அறிந்தவர்; அளிப்பார் தானே

## இறைவன் கட்டளை இரண்டு

படைத்தவன்; தேவன்
பாதமது பணிந்து
அடுத்தவன் பணிகள்
ஆற்றுவது முதன்மை
எடுத்தவர் சொல்வார்
இன்னுமொன்றாங்கே
மடுத்தவர் நிற்பார்
மனுமகன் முன்னே !

உன்னைப்போற் பிறரை
உளமார நேசி
கண்ணைப் போல் இறைவன்
காத்துன்னை அருள்வான்
அன்னை போல் ஒருவன்
அகம் எல்லாம் குழையப்
பொன்னைப் போல் வார்த்தை
புகலுவான் இனிக்க !

## கேளுங்கள் கொடுக்கப்படும்

தட்டுங்கள் கதவைத்
தாளது திறக்கும்
கிட்டவே சென்று
கேளுங்கள் கிடைக்கும்
எட்டவே பொருள்கள்
இருப் பினும் நீங்கள்
தொட்டதைச் செல்க
துலங்கிடும் கண்ணில்

## ஏன் நான் வந்தேன்?

நெருப்பது மூட்டவே
நிலமது வந்தேன்
நீண்டது எரிந்திடுமே
இருப்பவர் வீட்டில்
எதிரியே யாவார்
எழுந்திடும் பிரிவினையே
விருப் பிது நடக்க
விண்ணகம் இருந்தும்
விரைந்து நான் வந்தேனே
ஒருப் படுவேனோ
உலகினில் அமைதி
உயிர் பெற்றோங்கிடவே

# பயன் தரா அத்தி மரம்

பகலவன் கதிர்கள்
படி மிசை எங்கும்
அகலவே விரியும்
அணி யிளங்காலை
சகலமும் நடத்தும்
தயா பரன் யேசு
நகரதன் பக்கம்
நடையினில் வருவார்

வரும் போதந்த
வழியினில் நிற்கும்
தரு வொன் றோங்கித்
தண்ணிழல் பரப்பும்
அரு கதை அண்டி
அவர் பார்த்திடுவார்
ஒரு காய் தானும்
உயர் கிளை இல்லை

மன தினிற் கோபம்
மண்டிடும்; சொல்வார்
வன மரம் நீயே
வளராய் இனிமேல்
தணல் தனில் எரியும்
தருவென ஆவாய்
கண மதில் அதுவும்
கருகியே போகும்

செத்த மரம் பார்த்துச்
சீடரவர் வியப்பார்
வித்தகனார் அதனை
விளங்கவுரை செய்வார்
கத்து கடல் உள்ளே
கல் மலையும் வீழும்
வித்தை தனைச் செய்வீர்
விசுவாசம் இருந்தால்!

# சந்திரோதயம்

ஒலிவ மலை தனில் ஏறி அமருவார்
உத்தமர் யேசு பிரான்
பொலியும் அழகினிற் பூமி மிதந்திடும்
பொன் மாலைப் போதினிலே
நெளியும் வளியிலே நெஞ்சு குளிர்ந்திடும்
நிமலன் அமர்ந்திருப்பான்
நலியும் இருளினில் நல்லொளி பரவிடும்
நறை நிலா தோன்றிடுமே.

(வேறு)

பொற் குடம் போலப் பூரண நிலவு
பொலிந்திடும் வானில் பொங்கல் நாளோ?
சொற் குடமேந்தும் சுந்தரக் கவிதை
சுரந்திடும் இன்பம்! சுகம் அதுதானோ?
பற் குடம் வேண்டும் பால் அது மொள்ள
பருகிடும் உலகம்! பரவசமாமோ?
கட்குடமேந்தும் கள் அது போல
கண்டால் இனிக்கும் கற்பனை ஊற்றோ?

நீல வானின் நித்திலப் பொட்டோ?
நிருத்தம் பழகும் நேரிழையாளோ?
கோல வானின் கொஞ்சும் மலரோ?
கோப் பெருந் தேவி கொலு இது தானோ?
ஓலக் கடலில் ஓடும் படகோ?
உச்சி வானின் ஒளி விளக்காமோ?
ஞாலம் போற்றும் ஞாயிற் றொளியோ?
நள்ளிர வாளும் நங்கை தாமோ?

தங்கத் தகடோ? தமிழ்ப்பெண் முகமோ?
தடாக வானின் தாமரைப் பூவோ?
திங்கள் இதுவோ? தேன் கனி யாமோ?
தேவதையாளின் தேர் உலாத்தானோ?
பொங்கும் எழிலோ? புதுமணப் பெண்ணோ?
புலரும் மாலைப் பூ இது தானோ?
கங்குற்கடலின் கலங்கரை விளக்கோ?
கவிதைப் பொருளோ? கலைநிலாதானோ?

(வேறு)

பல் நூறு வடிவத்திற் பால்நிலவு தோன்றும்
பகல் போல இரவைப் பளிச் சென்று காட்டும்
கல்லூறும் நீர் போலக்கண் முன்னேதோன்றும்
கார் மேகத்திரையிலே கணப் போதில் மறையும்
சொல்லூறும் கவியிலே சுகந்தன்னைக் கொட்டும்
சுந்தரமே நிலவு எனச் சொர்க்கமது கூறும்
நல்லூராம் வானத்தின் நாலுவிதம் பார்த்து
நாதனவன் யேசு நகர் வாரே மெல்ல!

# நறுநெய் பூசிய நங்கை

மரித்துயிர்த்த லாசர் தம் மனைதனிலே
மங் கல மாய் விருந் தொன்று மகிழ்ந்தளிப்பார்
சிறுத்த தொரு விருந்தேனும் சிறப்புத்தான்
சேர்ந்த சுவை ஆறோடு கறிவகைகள்
இரத்த மெனச் சிவந்த புதுப் பழக் குவியல்
இரசமதை நினைத்தாலோ இனிப்புத்தான்
உரித்தான விருந்துண்ணத் தெய்வமகன்
உரிமையுள சீடருடன் உள் நுழைவார்

உரத்த கதை பேச்சுடனே ஒடுங்கிப்போம்
ஓவென்ற சிரிப் பொலியும் ஓடிப்போம்
சிரித்ததொரு முகமான யேசுபரன்
செய்ய மலர்ப் பாதத்தைச் சேவித்து
இருத்தியொரு இருக்கையிலே இறைஞ்சிடுவார்
இந்நேரம் எழில் மிக்க ஏந்திழையாள்
விரித்த பெருங் குழலாட விரைந்தங்கு
விமலனவன் பாதத்தில் வீழ்ந்திடுவாள்

வாச மிகு எண்ணெய் தனை வார்த்தந்த
வள்ளலவன் பாதத்தில் வளமாக
ஆசையுடன் பூசுவாள் அதன் பின்னால்
அலை நெளியும் குழலாலே துடைத்திடுவாள்
வேசை மனச் சீடனவன் வெறுத்திதனை
வேண்டாத செய்கையே; விற்றிதனைக்
காசில்லா ஏழைகட்குக் கையளித்தால்
கடுகளவு தானும் பயன் உண்டென்பான்

ஏழையவர் மீதுள்ள இரக்கத்தால்
இவ்வார்த்தை சொல்லவிலை இவனிங்கே
ஊளையிடல் எல்லாமே பணந்தன்னில்
உள்ள தொரு வெறியாலே உண்மையிது
தாழை மலர் போலும் மணம் தரும் யேசு
தன்னுடனே மூவாண்டாய்ச் சேர்ந்திருக்கும்
ஆளை மிக அறிந்ததனால் இது சொல்வார்
அவனுள்ளம் கருகிப்போம்; அறியாரோ?

நல்ல தொரு காரியத்தை நங்கை இவள்
நாளின்று செய்திட்டாள்; நடக்கட்டும்
ஒல்லையிலே வரும் எனது அடக்கத்தின்
ஒத்திகையாய் இதைநானும் உணர்ந்திட்டேன்
அல்லல் மிகு ஏழைகளே ஆயிரமாய்
அகிலத்தில் இருக்கின்றார் ஆனால் நான்
தொல்லுலகில் இருப்பதிலை இதனை நீர்
துளியேனும் உணரவிலை ஏனோதான்?

நற் செய்தி சொல்லுமிட மெல்லாமே
நங்கையிவள் காரியமும் சொல்வாரே
பொற்பாவை அன்பு மிகப் பூண்டதினால்
பூமியிலே இவள் நாமம் புகழ்வாரே
கற்போலும் இருந்தந்தச் சீடனவன்
காது தனில் இவ் வார்த்தை வீழ்ந்ததுமே
விற்போலக் குனிந்திட்டான் விழிதனிலே
விசமாடும்; விமலவனவன் அறிவாரே.

185.

# என் எதிரி

ஊன விழி மனிதனவன்
    ஊமையுமாய் இருந்தான்
ஞான விழி திறந்த மகன்
    நலம் செய்தார் அவனை
ஆன செயல் கண்டவர்கள்
    அகம எரிந்ததாலே
ஈனப் பொய் சொல்வார்கள்
    இவன் பேயைக் கொண்டே

ஓட்டுகிறான் பேய் என்பார்
    ஊரவர்கள் நடுவே
நீட்டு மவர் பேச்சதனை
    நேரிடையாய் அறிந்து
வீட்டிற்(கு) எதிராக
    வீடு அது எழுந்தால்
பாட்டிற்கே அழிந்து விடும்
    பரமன் மகன் சொல்வார்

பேயதனைக் கொண்டு நான்
    பேய் தன்னை ஓட்டும்
மாயத்தைச் செய் வதாய்
    மடையர்கள் சொல் கிறார்
நியாயத்தைக் கேட்கின்றேன்
    நிகழு மது வானால்
தீய தனை உம் மவர்கள்
    துரத்துவ தெங்ஙனமோ?

வலியனவின் வீட்டில்
    வைத்துள்ள பொருளை
எலி தானும் எடுக்கா(து)
    இல்லமதில் நுழைந்து
தலைவனவன் தன்னைத்
    தளைத்திட்டால் அன்றி
அலகில்லாப் பொருளை
    அபகரிக்கலா மோ?

என்னோடு இல்லாதான்
    என்னெதிரி யாவான்
அன்னவனே முற்றாக
    அழிந்திடுவான் உறுதி
மண்ணுலகில் எதனையும்
    மன்னிப்பார்; ஆனால்
விண்ணுலக ஆவியின்
    விரோதி தனைச் சகியார்

# நம்பினார் கெடுவதில்லை

சூதக நோயாற் சோர்ந்துடல் களைத்த
மாதவள் யேசு மன்னவன் பூண்ட
ஆடையைத் தொட்டால் அக்கணந்தானே
ஓடிப் போகும் ஒருபெரும் நோயே

என்றவள் எண்ணி யேசுவின் அணியை
நன்றாய்த் தொட்டாள்; நலமுடன் பெற்றாள்
தொட்டவர் யாரோ? தூயவன் கேட்டான்
சட்டென மறுப்பார்; சத்தியம் சிரிக்கும்

இப் பெரும் கூட்டம் இருந்திடும் போது
அப்படித் தொட்டார் ஆர் எனல் முறையோ?
சீமோன் என்னும் சிஷ்யன் கேட்பான்
ஆமாம் என்பார் அனைவரும் சேர்ந்தே

இருந்தொரு சக்தி என்னிடமிருந்து
அறிந்தேன் விலக; அமலன் சொல்வான்
நலமது பெற்ற நற்பெண் உடனே
கலவரத் தோடு கருணையன் காலில்

வீழ்ந்து தன் துயரை விழியாற் சொல்வாள்
ஆழ்ந்த நல் அன்பை அள்ளி வைப்பாள்
மங்கையைப் பார்த்து மாதவன் சொல்வான்
நம்புக என்னை நல்லது நடக்கும்.

# உயிர்த் தெழுதல் உண்டா?

மணம் செய்த மனிதனவன்
மரணிப்பான் அதனால்
இனம் வாழப் பிள்ளை இலை
என்பதனால் அப்பெண்
கனம் செய்யச் சட்டத்தைக்
கணவன் உடன் பிறப்பை
மனம் போலும் கொள்ளுவாள்
மரணிப்பான் அவனும்

இப்படியே எழு பேரை
ஏந்திழையாள் மணப்பாள்
எப்படியும் மகவில்லை
எல்லோரும் இறப்பார்
அப்படியே பெண்ணவளும்
ஆவியது துறப்பாள்
சொற்படியே உயிர்த்தாலோ
தோகையவள் யார்க்கோ?

சதுசேயர் என்பார்
சரம் போலும் இந்தப்
புதுக் கேள்வி கேட்பார்
புரிந் தெங்கள் யேசு
பதி லொன்று சொல்வார்
பரம் பொருளின் ஞானம்
கதிர் போலத் துலங்கும்
கண் கூசிப் போகும்

மண்ணுலகைப் போல
மறு உலகில் யாரும்
பெண் கொள்வதில்லைப்
பேருண்மை கேளீர்
பொன்னுலகத் தூதர்
போலுமவர் இருப்பார்
இன்னும் அவர் அங்கு
இறைக்கு நிகராவார்

இறந்தவர்கள் உயிர்ப்பார்
எனும் உண்மை தன்னை
நிறைந்த முட் செடியில்
நிகழ்த்தினார் மோசேஸ்
அறிந்திடுக நன்கு
ஆங்குள்ளோர் எல்லாம்
நிரந்தரமாய் வாழ்வோர்
நிமலன் அவர் மக்கள்

# யார் பெரியவர்?

பெரியவர் யாரெனப் பேதை மனிதர்
ஒரு நாள் தமக்குள் உரை பகர்ந்திடுவார்
அரியவர் யார்க்கும் அறிந்ததைக் கேட்பார்
விரிவாய்ச் சொல்லி விளக்கமுந் தருவார்

பன்னிருவரைத் தம் பக்கம் இருத்தி
அண்ணல் சொல்வார் அடுத்தவர்க்கெல்லாம்
எண்ணிப் பணிகள் இயற்றுவோன் தானே
மண்ணில் உயர்ந்த மனிதன் ஆவான்

சின்னஞ்சிறிய குழந்தைகள் போல
எண்ணம் வேண்டும்; இதயம் வேண்டும்
அன்னவர் தாமே அவனியிற் பெரியோர்
மன்னன் யேசு மலர்ந்தருள்வாரே

குழந்தைகள் யார்க்கும் குந்தகம் செய்வோர்
இழந்தார் எல்லாம் இயந்திரக் கல்லைக்
கழுத்திற் கட்டிக் கடலில் விடுக
அளந்தார் யாவும் அழகாய்ச் சொல்வார்

தன்னலம் இல்லாத் தளிர்கள் அவையே
அன்னவர் தம்மை அருகில் விடுவீர்
விண்ணின் அரசு விழைவோ ரெல்லாம்
மண்ணின் குழந்தை மலராய் ஆக

# பேய் பிடித்த பையன்

பேயது பிடித்த பிள்ளையிவன் அந்த
நோய் தனைத் தீர்க்கநும் சீடராலே
இயலவில்லை அதனால் இங்கு நாம் வந்தோம்
தயை செய்ய வேண்டும் தயாபரனே என்பார்

அவ்வுரை கேட்ட அமலன் எம் யேசு
செவ்வையாய்ச் சொல்வார்; சீர்கெட்ட இனமே
எத்துணைக்காலம் இன்னும் நான் இருப்பேன்?
அத்துணைக்காலம் ஆர் உம்மைப் பொறுப்பார்?

என்றவர் கடிந்து இயம்புவார் மேலே
கொன்றிடும் நோயாற் குலைந்திடுவோனை
இங்கென் அருகில் அழைத்துநீர் வருக
அங்கவன் வருவான் அறமகன் கடிவான்

கடிந்ததும் யேசு கணத்தினிற் பிசாசு
அடிபட்டோடும் அவன் சுகமாவான்
நிகழ்வதுகண்ட நேய நற் சீடர்
அகமது குலைவார்; அதிசயம் என்பார்

பின்னவர் எங்கள் பேரருட் கடலைத்
தன்னந் தனியே தயவாய் அணுகி
எம்மால் முடியாதேனோ என்பார்
உம்மிடம் விசுவாசம் ஒருதுளி இல்லை

கண்டிப்பாய்ச் சொல்வேன்; கடுகளவேனும்
உண்டெனில் விசுவாசம் உயர்ந்த இம் மலையை
இவ்விடம் விட்டு ஏகெனச் சொன்னால்
அவ்விதம் நடக்கும் ஆண்டவர் சொல்வார்

## ஏரிக்கரை ஓரம்

ஏரிக்கரை ஓரம் எண்ணறு புதுமைகள்
இறைமகன் செய்தருள்வார்
ஊரொன்றித் திரண்டிடும் உற்சவம் போலவே
ஒரு நான்கு திக்கிருந்தே
ஓரணியாகியே ஊரத்தவர் அழுவாரே
உள்ளங்கள் கசிந்திடவே
சீரவர் செய்வாரே செகமது புகழ்ந்திடும்
யேசு எம் பெரு மகனே!

# என் நிலை இது

கடல் போலுங் கூட்டம்
கருணை மகன் தம்மைத்
தொடர்ந்தங்கு நிற்கும்
தொன் நூலில் வல்லோன்
நடந்தவரை நாடி
நவிலுவான்; குருவே
இடமெங்கு செலினும்
இணைந்து நான் வருவேன்

என்றவனுங் கூற
யேசு அவர் பதிலாய்
ஒன்று நான் சொல்வேன்
ஓங்குவான் பறவை
நன்று ஒரு கூட்டில்
நனி வாழும்; நரிகள்
சென்று ஓர் வளையிற்
சீவிக்கும்; ஆனால்

தலை சாய்க்கத் தானும்
தான மெனக்கிலலை
நிலை ஈது என்பார்
நின்றவரில் ஒருவன்
இலை என்று ஆன
எந்தை தனை மண்ணில்
தலைவ நான் அடக்கத்
தருக விடை என்பான்

இறந்தவர்கள் முன்பு
இறந்தவரை அடக்கப்
பிறந்தவர்கள் அந்தப்
பெரும் பணியைச் செய்க
துறந்து நீ யாவும்
தொடர்க எனை என்பார்
நிறைந்தவ ராம் எல்லாம்
நிமலன் எம் யேசு

# ஓர் உண்மை

பெருமை மிகு ஞானப்
    பேராழி பொங்க
உரிமை மிகு ஊரை
    உவந்தவர் வந்து
அருமை மிகு வேத
    அருளுரை செய்வார்
சிறுமை மிகு மனிதர்
    சிந்தை யது எரியும்

தச்சன் மகன் அன்றோ
    தாய் மேரி தானே
விச்சையது பெற்ற
    விதம் என்ன அறியோம்
நச்சு மன மனிதர்
    நாதனவர் பற்றி
எச்சில் மொழி பெய்வார்
    இதை அறிந்த யேசு

தன் நாடு; வீடு
    தான் வாழும் சமூகம்
விண் போலும் ஞானம்
    விளங்குபவரை மதியா
உண்மையிது தன்னை
    உலக மது அறியத்
திண்ண முறச் சொல்வார்
    தேவ மொழி பொய்யோ?

# கிறிஸ்துவின் கேள்வி

நடந்து போம் போது
நாடுகளுக் கிடையே
கிடந்தாடு நெஞ்சின்
கேள்வி தனை யேசு
தொடர்ந்திடும் அன்புத்
தொண்டரிடம் கேட்பார்
படர்ந்திடும் கொடியாய்ப்
பற்றியவர் செல்வார்

வன மான போதும்
வரு மக்கள் தம்மைத்
தினங் கண்டு பேசித்
திருத் தொண்டு செய்து
மனந் தன்னை அறிந்த
மனிதர்களே சொல்வீர்
எனைப் பற்றி அவர்கள்
என் சொல்கிறார்கள்?

ஊரெல்லாம் பேசும்
உமைப் பற்றி அந்தப்
பூர் வீக இசையாஸ்
புனிதனாம், புவியிற்
பேர் பெற்ற ஸ்நாபக
பெரி யோனாம் என்று
ஆர்வ மோடன் பால்
ஆளை ஆள் முந்தி

சீடரவர் இயம்ப
　　யேசுபரன் இந்த
நாடகமாடிகளை
　　நானறிவேன் நன்கு
கூட உள நண்ப
　　குறிப்பிட்டுச் சொல்க
பாடு பட வந்த
　　பலியாடு பற்றி

குரு தேவர் இதனைக்
　　கூறிடவே திடமாய்
அருகமர் சீமோன்
　　அழுத்தியே சொல்வான்
பரதேவன் பெற்ற
　　பரிசுத்தன் நீரே
ஒரு குரல் ஊடாய்
　　ஒப்புவார் மற்றோர்

தலை மகன் சீமோன்
　　தமை நோக்கிச் சொன்ன
விலை மதிப்பில்லா
　　விச்சை மொழி கேட்டு
நிலையான அறிவ்வா
　　நிமலனவர் தாமே
மலை போலும் உண்மை
　　மறைத் துனக் குரைத்தார்

என்றவரும் விளம்பி
　　இராயப்பா கேளாய்
குன்று நீ உன்மேற்
　　குவலயமே வாழ
நன்று என் சபையை
　　நான் செய்வேன் இதனை
நின்றிங்கே எதிர்ப்பார்
　　நிச்சயமாய் இல்லை

# குருடன் குணமடைகின்றான்

யேசு ஒரு வழி போகையிலே அங்கு
எதிரில் நின்றனன் குருடனவன்
ஈசனவர் தம்மைக் கேட்டிடுவார் இந்த
ஈன நிலை பற்றிச் சீடரவர்
காசினி மீதிவன் கண்ணிழந்து மிகக்
கஷ்டப்பட்டிடக் காரண மென்?
ஆசானவர் பதில் சொல்லிடுவார் வேறு
ஆருமல்லர் அந்தத் தேவனவன்

மாட்சிமை மண்ணகம் கண்டிடவே இந்த
மனிதனுக்கிவ்விதம் நடந்த தென்றார்
காட்சியவன் காண வேண்டுமென ஒரு
கணத்தில் உமிழ் நீரைக் குழப்பியவர்
சாட்சி யெனச் சீடர் பார்த்திருக்க அந்தச்
சகதியினை அவன் கண்ணிலே பூசிக்
கூச்சமின்றி இந்தக் குளந்தன்னிலே நீ
கொண்டு கழுவுக என்றுரைத்தார்

பார்த்தவரெல்லாம் வியந்தவராய் இவன்
பார்வை பெற்றது எவ்விதமோ எனச்
சேர்த்தவரெல்லாம் பேசிடுவார், இந்தச்
செய்கையைச் செய்தவர் யாரெனவே
கூத்தவர் ஆடுவார் கோபத்தினாற்பின்
கொண்டு பரி சேயர் முன் நிறுத்தக்
காத்தவன் யேசு என்றுரைப்பான் அந்தக்
கபடர்கள் காதினைப் பொத்திடுவார்

பெற்றவர் தம்மையே அழைத்திடுவார் உம்
பிள்ளையிவன் தானோ என்றிரைவார்
சற்றும் தயங்காது கூறிடுவார் இது
சத்தியம் எங்களின் மகனே என
உற்ற புதுமையை நாமறியோம் வேறு
ஒன்றும் அறிந்திட வில்லையெனச்
சுற்றும் முற்றுமவர் பார்த்தபடி புதுச்
சூழ்ச்சிகள் ஆயிரம் பின்னிடுவார்

# பெற்றவள் கேட்ட பேறு

அன்னை யவள் ஆசை
ஆறாகப் பெருகத்
தன் பிள்ளை உயர்வைத்
தலை மேலே கொண்டு
மன்னனவர் யேசு
மலர்ப் பாதம் தொழுது
சின்ன மன உணர்வைச்
சிந்தியவள் நிற்பாள்

உன்னரசின் போது
உன் பக்கம் இரண்டும்
என் மக்கள் இருவர்
இருந்திடவே வேண்டும்
என்னு மவள் நெஞ்ச
எண்ணமதை அறிந்த
விண்ணவனும் இந்த
விதமாகச் சொல்வார்

என் கேட்டாய் என்று
எள்ளளவும் அறியாய்
உண்ணு மென் பானம்
உம்மாலே ஆமோ?
அண்ணனுடன் தம்பி
ஆமென்பார் அதற்கு
உண்மையிது நானும்
உண்ணுவதைப் பெறுவீர்

ஆனாலும் சொல்வேன்
அமையப் போம் என்றன்
வானரசில் நீங்கள்
வலமு மிடமாகத்
தான மது கொள்ளல்
தந்நை யவர் முடிவு
கோனவரே யார்க்கும்
குறித்த இடம் தருவார்

ஏனையோ ரெல்லாம்
இந்த வுரை கேட்டுச்
சோனை யென வெறுப்பைச்
சோதரரிற் சொரிவார்
தானை யதன் தலைவர்
தம் மருகில் அழைத்து
ஞான விளக் கேற்றும்
நல்ல உரை பகர்வார்

புற இனத் தலைவர்
பொது மக்கள் தம்மை
அற வழியே தவறி
ஆட்சி செய்கின்றார்
நிற மிதை நெஞ்சில்
நீர் கொள்ள வேண்டா
சிறந் தோங்க விழையின்
சிறுமையினை ஏற்பீர்

# பழையதும் புதியதும்

அடிக்கடி நோற்பார் அந்த
அருளப்பர் சீடர் ஆனால்
குடியுடன் உணவும் ஆகக்
கொள்ளுவார் உன்றன் தொண்டர்
வடிவிதோ என்பார் சொல்லில்
வழுவது காணும் நோக்கில்
நொடியினில் நிமலன் சொல்வார்
நுண் பொருள் விளங்குமாறே

(வேறு)

மணமகன் தனது தோழரோடிருக்கையில்
மனமேன் விரதத்திலே
மணமகன் பிரிந்திடும் நாள் வரும் அவர்கள்
வழியதிற் செல்வாரே
கணமதில் அவர்கள் கண்ணது திறக்கக்
காசறு தேவ மகன்
மனதினிற் பதிந்திடும் வண்ணமோர் உவமையை
மறு மொழியாக்குவாரே

புதியதோர் துணியைப் பழைய தோடிணைத்துப்
பொருத்துவார் யாருமில்லை
விதம் அது செய்தால் இரண்டுமே வீணாம்
விளங்கிட வேண்டுமே
புது ரசந்தன்னைப் புரியாது பழைய
போத்தலில் வார்த்தாலோ
மது அது சித்தையைக் கிழித்துமே போடும்
மனத்தினிற் கொள்வீரே.

# யார் இந்தக் கிறிஸ்து?

யேசு எனும் மனிதன் இவன் யார்?
என்று ஒரு கேள்வி தொடுப்பார்
வீசுமவன் புகழாலேதான்
விவாதம் எழும் விளங்குமிதை வான்
தூசு தனைப்போற் சில குருக்கள்
தூயவனைப் பிடிஎன்பார்; கிறுக்கன்
கூசுமவர் பேச்சு தனைக் கேட்டால்
குள்ளரவர் ஒன்று மனக்கூட்டால்

இரட்சகரே யேசு என்பார் ஒருவர்
இல்லையென மறுப்பார் பரிசேயர்
அருட்சுனையே அவர் என்பார் ஒருவர்
அதை எதிர்க்க முன் வருவார் இருவர்
இருட் குகையில் வாழும் சில நெஞ்சம்
ஏதேதோ சொல்லும் முழுவஞ்சம்
உருட்டியவர் பேசி நிற்கும்போது
ஒரு வார்த்தை கேட்பார் நிக்கதேமு

(வேறு)

செய்த ஒரு செயல்தனைப் பார்த்து — நீதி
செப்புவதே சட்டம்! இது கூத்து!
மெய் நிறைந்த பேச்சு தனைக் கேட்டு — அவர்
மேனி யெல்லாம் புழுங்கும்; பகைக்கூட்டு
அய்யனவன் கலிலேயா மண்ணில் — என்றும்
அவதரிப்பதில்லை உண்மை எண்ணில்
பொய்யர் அவர் பரிசேயர் சொன்னார் — அதைப்
பூமியிலே யாரும் மனம் எண்ணார்!

( இரண்டாம் பாகம் முற்றும் )

## மூன்றாம் பாகம்



# எழில் மிகு எருசலேம்

திருவளர் நகரம் தேவன் அவனாலே
தேர்ந் தெடுக்கப்பட்ட நகரம்
ஒரு பெரு நகரம் உலகதனில் என்றும்
ஓங்கு புகழ் தாங்கு நகரம்
அரு மறைப் பூசை அர்ச்சனைகள் ஓசை
அதிகாலை முழங்கு நகரம்
எருசலேம் என்னும் எழில் மிகு நகரம்
இணை யேது மூண்டு மாமோ?

மாகமது தழுவும் மாளிகைகள் வண்ண
மணி வயிரம் பதித்த சுவர்கள்
பாகு மொழிப் பெண்கள் பைய நடை பழகும்
பளிங்கு எனத் துலங்கு மாடம்
தாகமது தீர்க்கும் தடாகங்கள்; குளங்கள்
தையலர்கள் ஆடும் சுனைகள்
மோகமது ஊட்டும் முது பெரு நகரம்
முடி மன்னன் தாவீது நகரம்

ஞானியவன் சல மோன் நன் கரசு செய்து
நனி சீர்த்தி பெற்ற நகரம்
வானிலவு போல வளர்ந்த தொரு புகழால்
வையமது அளந்த நகரம்
கோனரசு நடத்திக் குடியரசு போற்றிக்
குன்றின் ஒளியான நகரம்
தானவளம் எல்லாம் தலை மீது சூடித்
தாரணியில் உயர்ந்த நகரம்

கலை ஓங்கும் நகரம் கவி பொங்கும் நகரம்
கடல் பாடி மகிழும் நகரம்
மலை யாளும் நகரம் மறை வாழும் நகரம்
மாசில்லாக் கோயில் நகரம்
நிலையான நகரம் நெறிகாட்டும் நகரம்
நில வுலகில் சிறந்த நகரம்
தலையான நகரம் தழைத் தோங்கும் நகரம்
தரும வழி நடக்கும் நகரம்

கட லேந்தும் தோணி கரையேந்தும் கானல்
    கையேந்தும் மனிதர் இலையே
மடலேந்தும் தாழை மலரேந்தும் வாசம்
    மது ஏந்தும் வாய்கள் இலையே
உடலேந்தும் அழகு உளமேந்துந் தூய்மை
    உத டேந்தும் பொய்கள் இலையே
அடலேந்தும் வாகை அறிவேந்தும் பெருமை
    அக மேந்தும் கர்வம் இலையே

கடைவீதி எங்கும் கனகமணிக் குவியல்
    காணக் கண் கோடி வேண்டும்
நடைவீதி மக்கள் நகர்ந்து வருங் மாட்சி
    நாலு திசை திரண்டு எழுமே
படைவீதி வீரர் பவனி வரும் கோலம்
    பல்லக்கு ஊர்ந்து வருமே
தடவீதி ஓரம் தரு நீழல் சொரியும்
    தரை யெல்லாம் குளிர்ச்சிதருமே

பூங்காக்கள் அழகு பொலியும் நல் இன்பம்
    பொன் வண்டு பாடல் பொங்கும்
தீங்காற்று மெல்லத் தேக மெலாந் தழுவும்
    தேர் போல ஊர்ந்து செல்லும்
பாங்கான காட்சி பருகவரும் மக்கள்
    பாலர் விளையாடு வாரே
ஆங்கவர் இருந்தே ஆனந்தந் துய்ப்பார்
    அந்திப் பெண் அசைந்து வருவாள்

பெண்ணவள் அசைவிற் பெருநகரம் சொக்கும்
    பேரின்ப லோகம் அதுதான்
பொன் நகரம் அதுபோற் பூமியிலே இல்லை
    பூலோக சொர்க்கம் அதுதான்
தொன்னகரம் யூதர் துதிபாடும் நகரம்
    தொடங்கும் ஓர் விழாக் காணவே
அந் நகரஞ் செல்வார் அமலன் எம் யேசு
    அன்பர்கள் கூடிவரவே

## ஓசான்னா

ஊர் அருகே செல்க
உள்ள வீடொன்றில்
ஓர் கழுதைக் குட்டி
உண்டு அதை அவிழ்த்து
வாரும் எனச் சொல்வார்
வந் தவர்கள் கேட்டால்
நேரு மது தேவன்
நெஞ்சிற் கெனப் பகர்க

(வேறு)

பழமை மிகு எருசலேம் பட்டினத்தில்
பலர் சூழ நடைபெறும் விழாவைக் காண
வழமைபோல் யேசுபிரான் எழுந்தருள் வார்
வரவேற்புப் பிரமாதம்; வீதி யெல்லாம்
இளமை மிகு மாதர்கள், குழந்தைகள்
இளைஞ ரோடு கிழவரெலாம் கூடிநின்று
அழகனவன் வருகையைக் காத்திருப்பார்
ஆலயத்தை நோக்கி அவர் அணி செல்லும்

(வேறு)

ஏறி அமருவார் யேசு பிரான்
இளைய தோர் கழுதைக் குட்டியிலே
மீறி எழுவார் மக்களெல்லாம்
விரித்துத் தம் ஆடையை வீதியிலே
கூறி மகிழ்வார் வாழ்த்துக்களே
குரு அவர் காதில் வீழ்ந்ததுமே
சீறி எழுவார் பாம்பினைப் போல்
சிரித்தபடி யேசு சென்றிடுவார்

ஓசான்னா என்றவர் புகழ்ந்திடுவார்
ஓடி மலர்ப்பாதம் தொழுதிடுவார்
பாச மெலாம் மிகக் கொட்டிடுவார்
பாதையிலே கிளை பரப்பிடுவார்
பேசும் அவர் வாய் அத்தனையும்
பெருமைகள் ஆயிரம் நிறைந்திருக்கும்
வீசும் இளங் காற்று தானுமது
விமலனவன் புகழ் பாடிடுமே

இறைவனின் பெயரால் வருகின்றவர்
இஸ்ராயல் அரசனே நீ வாழி
நிறைந்திடு் வாழ்த்து; கரகோசம்
நீண்டிடும் பவனி; நெஞ்சினிலே
பிறந்திடும் புதிய உணர்வுகளே
பேரருள் யேசு இவையெல்லாம்
மறந்தவராக அமர்ந்திருப்பார்
மக்களின் உளங்களை அறியாரோ?

(வேறு)

போற்றுவாய் எல்லாம்
புழுதி மண் வாரி
தூற்று மென அறிவார்
தூயனவர் யேசு
சாற்று மொழி யெல்லாம்
சக்கை யெனத்தள்ளி
மாற்ற மொன்றின்றி
மௌனமாய்ச் செல்வார்

# கடவுளின் கோயில் கள்ளர் குகையா?

ஆலயம் செல்வார் யேசு
ஆங்கவர் கண்ட காட்சி
சாலவும் கோப மூட்டும்
சத்தமாய்ப் பேசுவாரே

(வேறு)

பூ பழங்கள் உயர்ந்த
பொருள் வைத்து வணங்கும்
புண்ணிய னே
காவலவன் நமக்குக்
கருணை மகன் தொழுதால்
கடிய வினை நீங்கும்
தேவனவன் கோயில்
திருத் தலமே அதனைத்
திருடர்களின் குகையாய்ப்

பாவிகளே செய்தீர்
பணம் சேர்க்க எந்தப்
பாதையிலும் செல்வீர்
கோப மிகக் கொண்ட
குழந்தை மன யேசு
கூறி மொழி இதனைக்
கூவிப்பொருள் விற்ற
குணக் கேடர் ஓட
கொடுக்கு தனை எடுப்பார்!

# தீயோரின் திட்டம்

தூர் வாராக் கிணறு
    தொடர்ந் தோடா நீத்தம்
நேர் கோடு எடுத்து
    நெய் பூசி முடித்த
ஈரோடு பேன்கள்
    இருக்கின்ற கூந்தல்
பேரோடு வாழும்
    பெரிய குரு என்பார்

உரு கண்டு போற்றும்
    உலகமிது அதனால்
குரு வென்று அவனைக்
    கும்பிடுவார் மக்கள்
திரு வென்று நம்பித்
    தேடி வரு வோர்க்குக்
கரு நாக மாகக்
    காட்சி தருவானே

யேசு பரன் மீது
    எரிச்சல் மிகக் கொண்டோன்
வீசுமவர் புகழால்
    வெறி நாயாய் ஆனோன்
நீசன் இவன் நெஞ்சில்
    நிலைத்த தொரு எண்ணம்
ஈசன் அவன் உயிரை
    எடுத்து விட வேண்டும்

சதி செய்யலானான்
    சகுனி என மூப்பர்
விதி தன்னை முடிக்க
    வேண்டு மெனத் துடிப்பார்
புதிய தொரு துணையாய்ப்
    போகுமவன் கேடன்
வதியு மவன் நெஞ்சில்
    வானளவு ஆசை !

# துணைபோன துரோகி

பிரதான குரு என்னும்
பித்தனவன் முன்னே
பரதேசி யூதாஸ்
பல்லிளித்துச் சொல்வான்
இரவின்று யேசு
கிறிஸ்து எனும் நரனைக்
கரவாக உங்கள்
கையில் நான் தருவேன்

கூட்டுமோர் அவாவால்
குருத்துரோகி யூதாஸ்
நீட்டிடுங் கையிலே
நிறைந்த பணங் கண்டு
காட்டித்தான் கொடுத்தான்
கடவுள் மகன் தன்னை
வேட்டுவனின் வலையில்
வீழ்ந்த புறாவானார்

# விதை ஒன்று விழுந்தால்தான்.......

விதை ஒன்று மண்ணில்
 விழுந்தால் தான் நாற்று
புதிதாகப் பிறக்கும்
 பொங்குபயன் அளிக்கும்

எங்கு நான் இருப்பினும்
 எனது பணியாளன்
அங்கவன் இருப்பான்
 அன்பு மிகு தந்தை

மதிப்பவர்க் களிப்பார்
 மனிதனவன் என்னை
நிதமும் பின் செல்வான்
 நிலைக்கு மவன் வாழ்வு

என் ஆன்மா கலங்கும்
 என் செய்யமுடியும்?
இன்னல் தனில் இருந்து
 எந்தையே காப்பாய்

என்றவர் யேசு
 இயம்புவார் வருந்தி
ஒன்றிய சீடர்
 உளமது குழம்பும்

அந்நேரம் வானம்
 அதிர்ந்து மிகவாகப்
பொன்னான வார்த்தை
 புகலுமது மகிழ

நாம் உன்னில் மகிமை
 நாளெல்லாம் கொண்டோம்
ஆம்; அந்த வானம்
 அழகாகச் சொல்லும்

இடி என்பார் சிலபேர்
இதைக் கேட்டு மற்றோர்
வடிவான தூதர்
வார்த்தை யென்றுரைப்பார்

என் பொருட்டல்ல
இவ்வோசை இந்த
மண்ணுலகில் வாழும்
மக்களுக்காக

என்றவர் சொல்வார்
இனுமவர் தொடர்ந்து
மன்றமது கேட்க
மனமாரப் பகர்வார்

மன்புவி வாழும்
மக்களவர் எல்லாம்
என் நிலை உயர
ஈர்த்திடுவேன். அறிக!

இன்னும் சில போதே
இவ் வொளி சுடரும்
பின் பற்றி வருக
பேரொளி நானே

இருளிலே நடப்போன்
இலக்கினை அடையான்
அருளொளி தன்னை
அனை வரும் ஏற்பீர்

இவ்விதம் யேசு
இறை உரை பகர்ந்து
எவ்விதந் தானோ
ஏகினார் மறைந்து !

# எனக்கிவை நடக்கும்

எருசலேம் நகரம்
    என் முடிவை எழுதும்
அரு மறைக் குரவர்
    அறிஞர்கள்; மூப்பர்
ஒரு மனமாக
    உயிர் தனைப்பறிப்பர்
திருவுளம் அதுவே
    தெளிவுறச் சொன்னேன்

பாடுபட வேண்டும்
    பாருலகை மீட்கும்
ஆடு நான்; பலிக்கே
    அவதாரம் எடுத்தேன்
ஏடு அது கொள்ளா
    என் கதையின் உச்சம்
கோடு அதன் முடியிற்
    கொலு வேற்றுவாரே

சாட்டையால் அடிப்பார்
    சதை பிய்ந்து தொங்கும்
வேட்டை நாயாவார்
    விருப்பம் போல் என்னைக்
கூட்டிச் சென்றலைப்பார்
    கும்பிட்டுப் பழிப்பார்
நாட்டை ஆள் வேந்தன்
    நானெனச் சிரிப்பார்

காலொன்று முறிந்த
    கதிரை தனில் இருத்திக்
கோ லொன்று தருவார்
    கொடு முடி அணிவார்
நால்புறமும் நின்று
    நரி போலுங் கூடிக்
கால் தனில் வீழ்வார்
    கடித்து விட்டெழுவார்

எச்சில் தனை முகத்தில்
எல்லோரும் உமிழ்வார்
பச்சை ஊன் உண்ணப்
பாய்ந்தோடி வருவார்
நச்சு தனை வாய்க்குள்
நன் கூட்டி மகிழ்வார்
மிச்சமில்லை ஏதும்
மிக நன்றாய்ச் செய்வார்

ஆணி மூன்றடித்து
அதிலென்னை இடுவார்
காணீர் என என்னைக்
கண்டபடி வைவார்
கூனியவன் நெஞ்சாற்
குத்தீட்டிக்கொண்டு
ஊன்நீரைக் காண
உடல் தன்னைத்துளைப்பான்

இந்த வுரை காதில்
ஈட்டி போற்பாயச்
சிந்தை மிக நொந்தே
சீமோனும் சொல்வான்
அந்த விதம் நிகழல்
ஆகுமோ? வேண்டாம்
மந்தை மதியாளன்
மறுப்பிதனைக் கேட்டு

அப்பாலே போ நீ
அலகையே உனக்கு
ஒப்பு வதைச் சொன்னாய்
உன் எண்ணம் இவைகள்
இப் பார்க்கே ஆகும்
என யேசு இயம்பி
தப்பு தனைக் கடிந்து
தாம் தொடர்ந்துரைப்பார்

இறப்பேன் நான்; மீண்டும்
எனதுயிர் கொள்வேன்
இருப்பேன் நான் மண்ணில்
இரண்டோடு ஓர் நாள்
மறப்பேனா உம்மை
மண்ணுள்ள வரையும்
இருப்பேன் நான் இங்கே
இதை நெஞ்சிற் கொள்க

என்னைப் பின் செல்ல
எண்ணுமொரு மனிதன்
தன் சிலுவை தன்னைத்
தான் தூக்க வேண்டும்
என் பொருட்டுயிரை
இழப்பவன் எவனோ
கண் போலுமதனைக்
காக்கின்றான் என்றும்

தரணி எலாம் ஒருவன்
தான் கொண்டபோதும்
ஒருபயனும் இல்லை
ஓடி வருங் கேடு
அருள் உரையில் வெட்கம்
அடைபவனை நானும்
பரமனவன் முன்னம்
நாணடையச் செய்வேன்

மண்ணுலகில் வாழும்
மனிதர் சிலர் அந்த
விண்ணவனின் ஆட்சி
விளங்குவதைத் தத்தம்
கண்கொண்டு பார்க்கும்
காலம்வரை சாகார்
உண்மையிதை நானும்
உங்களிடம் சொன்னேன்

# பணி செய்த பரமன்

இரவுணவு கொள்ள
　　யேசு எம் பெருமான்
ஊறவு எனச் சொல்லும்
　　ஓர் நண்பன் வீட்டில்
பரவு அருட்சீடர்
　　பக்கம் வரச் செல்வார்
கரவு என அந்தக்
　　கங்குலது சூழும்

(வேறு)

பந்தியில் அமரும் முன்னம்
　　பன்னிரு சீடர் காலைச்
சொந்தத் தம் பாதம்போலத்
　　தூயனும் கழுவிச் சொல்வார்
முந்துக பணிகள் செய்ய
　　மூத்தவர் சிறியோர்க்கெல்லாம்
தந்தையின் பேரில் இன்று
　　தனயன் நான் செய்தாற்போல

என்றவர் மேலும் சொல்வார்
　　இன்றிர வொருவன் என்னைக்
கொன்றிடத்தருவான் அந்தக்
　　குருவெனும் மனிதர்கையிற்
குன்றென இருந்தோர்; நீரும்
　　கூறுவதாரே? என்பார்
ஒன்றென இருந்தோர்க்குள்ளே
　　ஒரு நூறு எண்ணந்தோன்றும்

என்னுடன் ஒன்றாய்ச் சேர்ந்து
இருந்தொரு கிண்ணத்துள்ளே
தன் கரம் வைப்போனாவான்
தலைவனும் திடமாய்ச் சொல்வார்
என்னையா சொன்னீர் என்பான்
எட்டியே யூதாஸ் என்போன்
உண்மையே சொன்னாய் என்றார்
ஒன்றுமே புரியார் மற்றோர்

உறுதியாய்ச் சொல்வேன் இந்த
உலகினில் அவனும் வந்து
பிறந்ததாற் பலனே இல்லை
பெருந் துயர் சூழுமாமே
அறிந்ததால் வ்ாயில் வந்த
அழிவிலா வார்த்தை யாலே
இறந்ததோர் மரமேயாவான்
இனியொரு வாழ்வே இல்லை

## நற்கருணை நாதன்

கண்ணது வானம் பார்க்கக்
  கையது அப்பம் ஏந்த
அண்ணலின் உள்ளம் எல்லாம்
  அறிந்தவர் வசமாய்ப்போக
என்னது என்றே சீடர்
  ஏறிட்டு நோக்கத்தாமே
உண்ணுக இதனை என்பார்
  உடலது உங்கட்காமே

உணவது செய்த பின்பு
  உறுசுவை ரசமுமேந்தி
மனிதர்கள் பாவம் போக்க
  மண்ணிலே சிந்தப் போகும்
எனதுடல் இரத்தமாகும்
  எடுத்திதைப் பருகி நீங்கள்
தின மிதைச் செய்வீர் என்பார்
  தேவ நற் கருணையாமே !

# அன்புக்கட்டளை

ஒருவர் மீதொருவர்
உளமார நீங்கள்
மருவுவீர் அன்பு
மலரெங்கும் பூக்கும்
திரு வாணை இதனைத்
தெளிந்து நான் தந்தேன்
குரு வாணை என்றே
கொள்ளுவீர் நெஞ்சில்!

உங்களது மனத்தில்
ஊடுருவியுள்ளேன்
அங்ஙனமே நீவிர்
அகம் வாழுகின்றீர்
இங்கென்னை நம்பும்
எவனும் எனைவிடவே
பொங்கருட் செயல்கள்
புரிகுவான் அறிவீர்

எந்தையும் நானும்
இரு பேரே அல்லோம்
தந்தையினைக் காண்போன்
தனையனையுங் காண்பான்
விந்தையிதில் இல்லை
விமலனவன் தானே
இந்த விதமாக
இயக்குகிறான் என்னை

தேங்கனி குலுங்கும்
திராட்சை நானே!
ஆங்கதன் கிளையாய்
ஆவீர் நீங்கள்
தாங்கிடும் கொடியைத்
தள்ளுவீர் ஆயின்
தீங்கினை எய்தல்
திண்ண மென்றுணர்க

என்னுள் ஒருவன்
　　இருந்திடும் போதே
இன் சுவைக் கனியை
　　ஈந்திட முடியும்
அன்பில் என்றும்
　　அசையாதிருப்பீர்
தொண்டர் ஆமோ ?
　　தோழர் அன்றோ !

சகமது தாரா
　　சமாதானந் தன்னை
அகமது நிறைய
　　அளித்தனன் பெறுவீர்
தகவுடைத் தந்தை
　　தண் முகங் காண
மகன் நான் செல்வேன்
　　மறுபடி வருவேன்

பாருலகம் உம்மைப்
　　பகைக்கின்ற தென்றால்
வேறென்னை என்றோ
　　வெறுத்ததனை அறிவீர்
ஊருலகம் தனக்கு
　　உகந்ததையே விரும்பும்
தேர்ந்தவுரை இதனைத்
　　தெளிய நான் சொன்னேன்

வேளை வந்தடுக்கும்
　　விஞ்சி யெழும் பயத்தால்
ஆளை ஆள் முந்தி
　　அசுப்பின்றிச் செல்வீர்
ஏழையென நானும்
　　இருந்தாலுந் தனியே
நாளை தனை நடத்தும்
　　நாதனவன் உள்ளான்

## நீ என்னை மறுதலிப்பாய்

இடறல்படுவீர் என் பொருட்டாக
யேசு எம் நாதர் இவ்விதம் சொல்வார்
உடனடியாக ஒரு பதில் தருவான்
உத்தமச் சீடன் ராயப்பன் என்பான்

ஆர் தடு மாறினும் அன்பனென் மனத்தில்
அலை எழும்பாது ! அவ்வுரை கேட்டு
ஊர் புகழ் யேசு உறுதியாய்ச் சொல்வார்
உற்று நீ கேட்பாய், ஒரு மூன்று தடவை

கோழி கூவுமுன் குரு எனை மறுப்பாய்
கூற்றிது கேட்டுக் குமுறுவான் சீடன்
ஆழி திரியினும் அடியேன் மாறேன்
அடுத்தவர் தாமும் அவ்விதம் மொழிவார்

# பூங்காவனத்தில்......

கருப்பாடை பூண்டு
  ககனமெனும் மங்கை
  காட்சி தரும் நேரம்

திருப் பாடல் பாடித்
  திரு விருந்துண்டு
  தேவ மகன் யேசு

விருப்பான சீடர்
  தொடர்ந்து வர ஒலிவ
  வெற்பு தனை நோக்கி

நெருப்பான துன்பம்
  நெஞ்சி லெழச் செல்வார்
  நிகழ்வதினை உணர்ந்தே

மருப்பானை ஒத்த
  மலை தனிலே அமர்ந்து
  மனமாரப் பேசிச்

சிரிப்பான கோலம்
  சிந்து மலர்ச் சோலை
  செல்ல என எழுவார்

(வேறு)

மலர்வனம் செல்வார் யேசு
  மறையவர் தம்மை விட்டு
நிலவதைப் போலத் தோன்றும்
  நிமலனின் வதனம் அன்று
கலவரம் தன்னைக் காட்டும்
  கனிவுறு நெஞ்சத்துள்ளே
அலையென எண்ணம் ஆடி
  ஆர்த்தெழும் கடலைப்போல !

தாளினில் வீழ்வார் யேசு
தலையது வானம் பார்க்கும்
வாளினில் நிற்றல் போல
வாழ்வது ஆகும் அந்த
நாளது நகரும் முன்னால்
நல்லவர் யேசு நாதர்
சூழ்வினை எல்லாம் எண்ணிச்
சோர்ந்துடல் வியர்த்துப் போவார்

எந்தையே இந்தக் கிண்ணம்
ஏகுக என்னை விட்டு
சிந்தையின் படியே அல்ல
திருவருட்படியே ஆக
விந்தையே வானின் தூதர்
விரைந்தவர் முன்னம் சென்று
நொந்தவர் உள்ளம் ஆற
நொய்ய நல் வார்த்தை சொல்வார்

வானவர் மறையத் தாமே
வந்தவர் தம்மைக் காண
தானவர் போவார் ஆங்கு
தனித்தவர் தூங்கக் கண்டு
கோனவர் உள்ளம் குன்றி
குனிந்தவர் எழுப்பலானார்
ஊனவர் பெற்றதாலே
ஓர் மொழி குழையச் சொல்வார்

மீண்டுமே அவரும் சென்று
மிகமிக வினயத்தோடு
வேண்டுவார் பிதாவைப் பார்த்து
விலகுக இந்தக் கிண்ணம்
தூண்டிய அன்பினாலே
துணைவரை நாடிச் செல்வார்
ஈண்டவன் வந்தான் இன்று
என்றனைக் காட்டத்தானே

ஒரு மணி நேரந் தானும்
உன்குரு நாதரோடு
இருந்திடக் கூடாதென்ன ?
இன்துயில் கொள்ளலாமோ ?
உருகியே சொல்வார் யேசு
உடல் பல மற்றதாகும்
அரிய நம் உள்ளம் மட்டும்
அதிவேகம் கொண்டதாமே !

ஆளரவம் கேட்கும்
அந்நேரம் கையில்
வாள் ஈட்டியோடு
வானவனைத் தேடிச்
சூழும் ஒரு சேனை
சூதன் அவன் முன்னால்
பாழும் மனத்தோடு
பாம்பு என நெளிவான்

பெரும் படையோடு வந்து
பேயவன் யூதாஸ் என்பான்
குரு மகன் யேசு முன்னால்
குனிந்தவர் கன்னந் தன்னில்
அரியதோர் முத்தமிட்டான்
அடையாளம் அதுவே என்று
உரியவரோடு முன்னம்
ஒப்பந்தம் செய்திருந்தான்

காட்டியே கொடுக்கத் தானா
கனிவுறு தோழா நீயும்
கூட்டியே வந்தாய் இந்தக்
கொடியவர் சேனை தன்னை ?
ஈட்டிபோல் வார்த்தை யாகும்
யேசுவும் செருகலானார்
ஊட்டியே வளர்த்தோன் தானும்
ஒரு மொழி சொன்னான் இல்லை

# உருவிய வாளை உறையில் போடு

முத்தமிட்டுக் காட்டியதும்
முகஞ் சோர்ந்த தெய்வ மகன்
இத்தனை பேர் கூட்டி நீர்
எவர் தேடி வந்திரோ ?
கர்த்தரவர் கேள்விக்குக்
காதெல்லாம் கிழியப்பெருஞ்
சத்தமிட்டுச் சொல்வார்கள்
சத்தியமாய் உன்னைத் தான்

என்னைத் தான் என்றால் நான்
எத்தனையோ முறை உங்கள்
முன்னாலே நின்றிருந்தேன்
மொழியிதனைக் கேட்டதுமே
பின்னாலே வீழ்ந்திடுவார்
பெரிய தொரு மரம் போல
அண்ணலவர் எழுப்பித்தாம்
அமைதியுறப் பகர்ந்திடுவார்

உங்கள் மனம் வேண்டுவது
ஒருவன் நான் என்றாலோ
தங்க மனச் சீடர்களைத்
தடுக்காது விட்டிடுவீர்
அங்கவரும் சொல்ல இதை
அருகிருந்த இராயப்பர்
பொங்கி எழும் சினத்தாலே
புல்லனவன் காதறுப்பார்

அறுந்தந்தச் செவி தன்னை
    அமலனவன் தானெடுத்துப்
பொருந்தந்த இடத்தோடு
    புதுமையாய்க் குணஞ் செய்தார்
இருந்தந்த வீரர் எல்லாம்
    இது கண்டு எள்ளளவும்.
திருந்தவிலை மனத்தாலே
    தேவனவர் உரைத்திடுவார்.

(வேறு)

உருவிய வாளைப் போடு
    உறைதனில, உள்ளத்தாலே
மருவியே வாழும் நண்பா
    மனதினில் பதியச் சொல்வேன்
கருவியாம் வாளைக் கையால்
    கதுவினார் அதனாற் சாவார்
துருவியே அறிவாய் நீயும்
    தோமறு வார்த்தை தன்னை

நிறைவுற வேண்டும் இந்த
    நிகழ்ச்சிகள் யாவும் என்றே
இறைமொழியாளர் அன்றே
    ஏட்டினில் பொறித்தார் நன்றே
மறைவுற நானும் இந்த
    மண்ணினில் வாழ்ந்ததுண்டோ?
சிறையுள பறவை போலத்
    திரிந்தனன்; அப்போதென்னைக்

கைது ஏன் செய்யவில்லைக்
    கள்ளனோ நானும் என்ன
கொய்தவர் தலையை வாளால்
    கொண்டுளம் மகிழ வந்தோர்
கைதனில் விலங்கைப் போடக்
    கண்டதும் இந்தக் காட்சி
பையவே சீடரெல்லாம்
    பதுங்குவார் இருளுக்குள்ளே

# பின் தொடர்ந்த சீடர்

கைதியாய்ச் சென்ற
கருணை மகன் கண்டு
மெய்யொடுங்கிப் போவார்
மேன்மையுறு சீடர்
ஐயனவன் போன
அவ்வழியே இருளில்
பைய ஒரு சீடன்
பயத்தோடு செல்வான்

கொற்றன் போல் வாழும்
குரு என்போன் வீட்டு
முற்றமதில் அமர்வான்
மூண்டிருந்த தீயும்
பற்றி மிக எரியும்
பனிக்காற்று வீசும்
மற்றவரைப் போல
மனிதனவன் காய்வான்

# பெரிய குருவின் பெருமை

பெரிய குரு என்னும்
பேறினைப் பெற்றவன்
பெருமைகள் கேளீரோ?

அரிய பல் சித்திரம்
அலங்கார ஓவியம்
ஆனதோர் மாளிகையே

உரிய நற் சிறப்புகள்
ஊரெல்லாம் துலங்கிட
உல்லாசமாகவே

கரியதோர் மனத்தினன்
கண்கள் இரண்டிலும்
கர்வம் நிறைந்திடவே

நரியென வாழ்ந்தனன்
நசரேத்து யேசுவை
நஞ்செ(ன) வெறுத்தவனே

சிறியவன் பேரினைச்
செப்புவேன் : கைப்பாஸ்
செகமிது அறிந்திடுமே

# காட்சிப் பொருள்

காட்சிப் பொருளாக நின்றனன் — அந்தக்
கைப்பாசின் முன்பாக யேசுவே — அட
சாட்சிகள் ஆயிரம் உண்டு காண் — நீ
சர்வேசுரன் மகன் என்றனை — பல
சூழ்ச்சிகள் செய்வதில் வல்லவன் — அந்தச்
சூதர்கள் கும்பலின் தலைமகன் — மத
ஆட்சி நடத்திடும் குருமகன் — தேவ
மைந்தனைப் பார்த்தவன் மிரட்டுவான்

என்ன மறுமொழி சொல்கிறாய் — நீ
இங்கு சொன்னதெலாம் கேட்டனை — அட
சின்ன மனிதனும் சீறினான் — யேசு
சிறிதும் அசைந்திடவில்லையே — அதை
அன்னவன் கண்டதும் அரவமாய் — ஓர்
ஆட்டமே ஆடியே கூறுவான் — அந்த
விண்ணவன் பேரில் நான் கேட்கிறேன் — நீ
விண்டுரை செய்திடல் வேண்டுமே

தேவனின் மைந்தனோ செப்புக — இந்தத்
தேசமெலாம் இதைக் கேட்கவே — அவன்
கூவி இரைந்துமே கத்துவான் — யேசு
குறு நகை புரிந்துமே சொல்லுவார் — உன்
நாவால் உரைத்தனை உண்மையை — அந்த
நாதன் அவன் வலப்பக்கமாய் — எழிற்
பூவாம் மேகங்களின் மீதிலே — மிகு
பொலிவோடு வருவேன் நான் காணுவாய்

(வேறு)

அவ்வுரை காதில் வீழ
ஆடையைப் பிய்த்துக் கொண்டு
வெவ்விடச் சர்ப்பம் போல
வெகுண்டவன் இரையலானான்
ஒவ்வுமா இவனின் பேச்சு
ஊரவர் தம்மைக் கேட்டான்
செவ்வையாய் அவரும் சொன்னார்
செத்திவன் அழிய வேண்டும்

கைப்பாசின் முன்னால்
கடவுள் மகன் மீது
வைப் பார்கள் கையை
வானுலகம் திகைக்கும்
பொய்ப்பாவம் போலும்
பொழுதிரா முழுதும்
கைப்பாவை ஆனோர்
காவடிகள் எடுப்பார்

# அவனை நான் அறியேன்

நெருப்பது காய்வோன்
நெஞ்சமும் காயும்
நிகழ்ந்திடும் துயரால்

வெறுப்பவன் முகத்தில்
விளைந்திடும் பாச
விழிகளும் நனையும்

இருப்பவர்க்குள்ளே
ஏந்திழை ஒருத்தி
இவனையே கண்டு

குறிப்புடன் கேட்பாள்
கூறு நீ அந்தக்
கலிலேய னோடு

ஊறுப்பென இருந்தாய்
ஊரவர் அறிவார்
உரையது கேட்டு

மறுப்பவன் வாயிற்
பிறந்திடும் அந்த
மனிதனை அறியேன்

இது போல் இன்னும்
இருவாய் கேட்கும்
அதனையும் அந்த

மூது கெலும் பில்லா
முதியவன் உதடு
முற்றாய் மறுக்கும்

அது வரை கூவா
அழகிய சேவல்
அனைவரும் அறிய

இது சரியாமோ
என்றது தனது
இறக்கைகள் அடித்து

எதிர்க் குரல் எழுப்பும்
யேசுவின் பார்வை
இராயப்பன் மீது

பதிந்திட அவனும்
பலமாய் அழுவான்
பாவம் போமே!

# காட்டிக் கொடுத்தவன் கதி

காட்டிக் கொடுத்த கயவனின் மனத்தை
ஆட்டிப் படைக்கும் அவனது துரோகம்
கூட்டிலடைத்த குருவியைப் போல
வாட்டுந்தனிமை; வாழ்வது வெறுக்கும்

விரும்பிப் பெற்ற வெள்ளிப்பணத்தைத்
திரும்பித் தருவான் தீயவர்கையில்
நிரம்பி வழியும் நெஞ்சினில் கசப்பு
அரும்பும் எண்ணம் அதனோடொன்று

ஒரு மூன்றாண்டு ஒட்டிய உறவை
திருகி எறிந்த தீயவன் நானே
குருவாய் ஏற்றுக் கும்பிட்டவனின்
அருமை தெரியா அறிவிலி நானே

என்றவன் உள்ளம் இடிக்கும், இடிக்கும்
சென்றவன் காட்டில் செத்துப் போவான்
குன்றென இருந்தோன்குலைந்தது ஏனோ?
நன் றொரு பாடம் நமக்கிதில் உண்டு

# யூதேயா நாடு

மலையெலாம் முகில்கள் ஆடும்
மண்ணெலாம் நதிகள் ஓடும்
அலையெலாம் மீன்கள் துள்ளும்
அழ கெலாம் பூக்கள் சூடும்
கலையெலாம் கதைகள் சொல்லும்
கவியெலாம் அமுதமாகும்
சிலை யெலாம் பெண்களாகும்
சிறப்பெலாம் யூதா நாட்டில்!

வளமெலாம் நிறைந்த போதும்
வரலாறு படைத்த போதும்
நலமெலாம் இருந்த போதும்
நாடெலாம் மதித்த போதும்
களமெலாம் கண்ட போதும்
காவியம் படைத்த போதும்
உள மெலாம் போற்றும் நீதி
ஒன்று தான் இல்லை அங்கே!

நீதியைப் பேணார், உண்மை
நியாயத்தை மதியார், நித்தம்
ஓதிடும் மறையின் வார்த்தை
உட்பொருள் அறிந்தாரில்லை
வேதியர் வாழ்க்கை என்னும்
விளக்கினில் எண்ணெய் இல்லை
பாதியே ஆனார் அந்தப்
பரிசேயர் செய்கையாலே

மதமெனும் சிறையினுள்ளே
மாபரன் தன்னைப் பூட்டி
விதவித விளக்கம் சொல்வார்
விரிந்த பல் உரையும் செய்வார்
கதையது கேட்கும் போது
காதது புளித்துப் போகும்
பதியது யூதா தேசம்
பழமையின் சின்னமாமே !

பல முறு இறைவன் தன்னைப்
பலா மிலா மனிதன் என்பான்
தலைக்கனம் மிக்க தாலே
தத்துவம் என்னும் பேரில்
அளந்திட முயல்வான் அந்த
அறிவிலி செயலைக் கண்டு
குலுங்கிடச் சிரிப்பான் தேவன்
குளிர் நிலா நாயைப் போலே !

சமயத்தின் பிடியில் சிக்காச்
சக்தி தான் தெய்வ மென்னும்
அமைந்த தோர் உண்மை தன்னை
அறிந்திடா மனிதர் நாட்டில்
சுமை யெனக் கிரிகை, பூசை
திருவிழா, பஜனையாலே
எமக்கொரு பயனுமில்லை
இறையவன் ஓடிப் போனான்

மந்தையைப் போலும் மக்கள்
மறுத்தொரு கேள்வி தானும்
சிந்தித்துக் கேட்பார் இல்லை
சிந்தையில் துணிவே இல்லை
முந்தையப் பெருமை பேசி
முடிந்த பல் கதைகள் கூறிச்
சந்தியில் மகிழும் சாதி
சரித்திரம் சிரிக்கும் அம்மா !

சிந்திக்க மறுப்பார்; ஏதோ
சீவித்தால் போதும் என்பார்
வந்தித்துக் காலில் வீழ்ந்து
வயிற்றினை நிரப்பிக் கொள்வார்
மந்தைகள் மேலாம், இந்த
மானிட ஜென்மம் இங்கே
அந்தமில் இறைவன் செய்த
அதிசயப் பொருளே யாகும்

தன்னினம், மானம் என்பார்
தான் மட்டும் வாழப்பார்ப்பார்
முன்னவர் வாழ்ந்த பூமி
முதுசம் நம் உடைமை என்பார்
என்னவர் சொன்ன போதும்
இதயமும் உதடும் வேறு
பொன் பணம் பொருளே தேடும்
பூரியர் தேசமம்மா !

முட்டையில் மயிரைக் காண்பார்
முந்துவார் பிடுங்கிக் கொள்ள
பொட்டலைச் சோலை என்பார்
புழுதியை விபூதி என்பார்
பட்டினி பஞ்ச மேனும்
பன்னீரில் குளிக்கும் மக்கள்
கொட்டுவார் மழையைப் போல
கொள்கை யொன்றறிய மாட்டார்

அரியணைக் கட்டில் மீது
அந்நியர் அமர்ந்ததாலே
உரிமையே இழந்தார் மக்கள்
உரோமரின் ஆட்சிக் காலம்
அரியவர் சலமோன் ஞானி
அரும்புகழ் தாவீ தென்போர்
பெருமையாய் ஆண்ட நாட்டைப்
பேயர்கள் ஆளலாமோ?

சட்டமே பார்ப்பார், தூயச்
சமயத்தை அறிந்தாரில்லை
பட்டங்கள், பதவி என்று
பரம்பரை உரிமை என்று
விட்டது எதுவுமில்லை
விசித்திரமான மக்கள்
எட்டவே நின்றார் யேசு
இவர்தமை அறிந்ததாலே!

சடங்குதான் சமயம் என்பார்
சாத்திரம் உண்மை என்பார்
மடங்களில் சுகமாய் வாழும்
மனிதரின் சொற்கள் எல்லாம்
படங்களை நிகர்த்த தாகும்
பரிசேயர் செல்லும் பாதைத்
தடங்களை மிதித்தற் கூடத்
தவறெனல் குற்றமாமோ!

(வேறு)

சட்டத்தால் மாறுமோ சமூகம்?
சாத்திரத்தால் வாழுமோ உலகம்?
திட்டத்தால் வளருமோ தேசம்?
தீர்த்தத்தால் போகுமோ பாவம்?
வட்டத்துள் வாழ்கின்ற மக்கள்
வையத்தை அறிவதே இல்லை
கட்டத்தின் பூச்சியினைப் போலக்
காட்சி தரும் பரிசேயர் ஏனோ?

அந்தஸ்து மரியாதை எல்லாம்
அமலனவன் அடியார்கள் என்போர்
சொந்தமெனக் கொள்ளுவது முறையோ?
சுகவாழ்வை இச்சுவது சரியோ?
வந்தனைகள், வணக்கங்கள், வாழ்த்து
வரவேற்பு உபசாரம் ஏனோ?
சிந்தனைகள் ஆயிரமாய்ப் பூக்கும்
யேசு எனும் புதுமனிதன் நெஞ்சில்!

உண்மையினைச் சொன்னாலோ கசக்கும்
உத்தமர்கள் என்போரின் வாழ்க்கைத்
தன்மையினை அறிந்தாலோ வெட்கம்
தாள் பதியுமிட மெல்லாம் சறுக்கும்
வெண்மையினைக் கருமையெனக் கூறி
வேதாந்தம் பேசுகின்ற மனிதர்
அண்மையிலே இருப்பதுவே பாவம்
அழகுமிகு கருத்துக்கள் தோன்றும்.

அதிபதி பிலாத்தே இந்த
அதிசயத் தேசம் ஆள்வான்
முதியவன் கொஞ்சம் அந்த
முது கெலும்பதனால் இல்லை
புதிய நல் கருத்தை ஏற்கும்
புத்தியும் அவனுக்கில்லை
விதியென மக்கள் சொல்ல
வீணனும் ஆளலானான்

# ஆளுநன் அரண்மனையில்

பேடியவன் பிலாத்து — அந்தப்
பித்தனவன் கையில்
கூடியவர் கொடுத்தார் — இவன்
குற்றம்பல செய்தான்
மூடியிலா வாயால் — அந்த
மூர்க்கரவர் இரைவார்
ஆடிவான் அசையும் — இந்த
அதர்மத்தைக் கண்டே!

என்ன பிழை செய்தான் — இந்த
யேசு எனும் மனிதன்
மன்னனவன் கேட்டான் — வெறும்
மாடுதனை நிகர்த்தோர்
தன்னை இறை யென்று — இந்தத்
தரணி யெலாம் அறிய
சொன்ன இவன் தன்னை — நாம்
சும்மா விடலாமோ?

கும்பலதன் பேச்சை இவன்
கூர்ந்து மிகக் கேட்டான்
நம்பவிலை நெஞ்சம் — ஆயின்
நடுங்கும் ஒரு பயத்தால்
எம்பரனைப் பார்த்து — வினா
ஈட்டிஎனத் தொடுத்தான்
அம்புவியில் நீவிர் — யூதர்
அரசர் எனல் மெய்யோ?

நீர்தானே சொன்னீர் — என
நிமலனவன் உரைப்பான்
ஊர்தானே திரளும் — மிக
உணர்ச்சி வசப்பட்டு
பார் இவன் பேச்சை — ஒரு
பயமின்றிச் சொன்னான்
ஆர் ஆரோ அங்கு — பல்
ஆயிரமாய்ச் சொல்வார்

(வேறு)

வியந்தனன் அவனும் யேசு
விளம்பிய பதிலைக் கேட்டு
நயந்தனன் நெஞ்சுக்குள்ளே
நாதனின் துணிவைப் பார்த்து
பயந்தனன் ஊருக்குள்ளே
பாமர மக்கள் எண்ணி
இயந்தனன் யேசு மீது
எக்குறை தானுமில்லை

திருவிழா நடக்கும் நேரம்
தீயவன் ஒருவன் தன்னைப்
பரிவுடன் விடுதல் என்னும்
பண்டைய மரபுக் கேற்ப
கருத்துடன் சொல்க அந்தக்
கயவனோ? இல்லை இந்தப்
பெரு மகன்தானோ என்று
பிலாத்தவன் வினவுவானே

பாவியாம் இவனைக் கொல்க
பரபாசை விடுவீர் என்று
கூவியே நிற்பார் மக்கள்
கோனவன் திகைத்துப் போவான்
மேவியே அவனும் கேட்பான்
மேலனவன் குறையைச் சொல்க
தாவியே அவரும் சொல்வார்
சாவினைப் பரிசாய்க் கொண்டான்

இதனிடை அவனின் அன்பு
இல்லத்தின் அரசி என்பாள்
இதமுடன் சொல்வாள் சேதி
ஏவலன் ஒருவன் மூலம்
சுதனவன் நீதிமானே
சொற்பமும் குற்றம் இல்லை
விதமுற நடப்பீர் இங்கே
வீண்பழி சுமக்கலாமோ?

உள்ளத்தில் அதனை ஏற்று
உத்தமன் இவனே என்று
வெள்ளமாய்த் திரளும் மக்கள்
வெளியினைப் பார்த்துக் கொண்டு
எள்ளள வேனும் மாசு
இவனிடம் காணேன் என்று
அள்ளிய நீரிற் கையை
ஆளுநன் கழுவிக் கொள்வான்

ஆங்கவன் செயலைக் கண்டு
அலையெனத் திரண்ட மக்கள்
தீங்குகள் எங்கள் மீது
சிந்திடும் இரத்த மெல்லாம்
தாங்கிடும் மக்கள் மீது
தலையிலும் என்பார் கத்தி
வீங்கிய அவரின் செய்கை
விண்ணினை அதிரச் செய்யும்

ஆளுநன் நழுவிக் கொள்ள
அறமது செத்துப் போகும்
வீழுக என்றே மக்கள்
விமலன் எம்யேசு தன்னை
சூழுவார் மிருகம் போலச்
சுற்றியே வளைத்துக் கொள்வார்
நீளுமே இரவுப் போது
நிமிடம் ஓர் வருடமாகும்.

# வெறியாட்டு

கட்டியவர் அடித்தார் — கருங்
கல்லிலான தூணில்
எட்டியவர் உதைத்தார் — காறி
எச்சில்தனை உமிழ்ந்தார்
கொட்டியவர் சிரித்தார் - எம்
கொற்றவனே என்று
குட்டியவர் மகிழ்ந்தார் — அக்
கொலைகாரர் கூடி

கோல் ஒன்று தந்து — பல
குறும்புகளும் செய்து
கால் ஒன்று இல்லா — ஒரு
கதிரையிலே இருத்தி
வால் ஒன்று இல்லா — அவ்
வானரங்கள் போல
நால் ஒன்று ஆக — பல
நாசங்கள் செய்தார்

முள்முடி சூட்டி — எம்
முடிமன்னன் என்று
சொல்லுவார் கேலி — அச்
சூதர்கள் எல்லாம்
கள்ளுண்டார் போல — பெருங்
கயமைகள் செய்து
துள்ளுவார் குதித்து இவன்
துரோகமே செய்தான்

கன்னத்தில் அறைந்து — அவர்
கைதன்னை முறுக்கி
மண்ணள்ளி வாரி — அவர்
மலர் மேனி எங்கும்
எண்ணத்தின் படியே — இனும்
ஏதேதோ செய்தார்
பொன்னதன் முன்னே — கெட்ட
புலை நாய்கள் ஆனார்

சிவப்பாடை தந்து — எம்
செம்மல் இவனென்று
அவப் பெயர் சூட்டி — இனும்
அவமானம் செய்து
உவப்பார்கள் தீயோர் — அந்த
ஓநாயின் வடிவம்
தவப்பயன் யேசு — உடல்
தள்ளாடல் ஆனார்

ஆடுகளைப் போன்றோர் — தம்
ஆசைவழி நடப்போர்
கேடுபல செய்தார் – அதைக்
கேட்க யார் இருந்தார்?
பாடுபல படவும் — வீண்
பழிதன்னைக் கொளவும்
ஈடு இலாத் தேவன் — எலாம்
எதிர் கொள்ளுவாரே

# மண்டை ஓடு மலை நோக்கி

எத்தனையோ இன்னல்
இது போலச் செய்வார்
அத்தனையும் தாங்கும்
அவரன்பு நெஞ்சம்

மரமொன்றைத் தூக்கி
மாதவனின் தோளில்
உரமாக வைப்பார்
உடலாடிப் போகும்

பாரமுள அந்தப்
பாவிகளின் சிலுவை
காராளன் தோளைக்
கல்லெனவே அழுத்தும்

தோளிலதை வைத்துத்
தூக்கி நட என்று
ஆளுக்கோர் விதமாய்
அதிகாரம் செய்வார்

போகும் வழியெல்லாம்
புல்லர் பலர் கூடி
சாகு நீ என்று
சரவார்த்தை தொடுப்பார்

காயிற் பழமான
கயவரவர் தங்கள்
வாயில் வரு விதமாய்
வார்த்தைகளை எறிவார்

முன் பின்னாற் செல்லும்
மூர்க்கர்களின் கூட்டம்
இன்னுமவர் உடம்பின்
இரத்தத்தை உறிஞ்சும்

உருவழிந்து போன
உத்தமரைப் பார்த்து
எருசலேம் நகரின்
ஏந்திழையார் கண்ணில்

அருவியது பொங்கும்
அமலனது கண்டு
உருகி மனம் சொல்வார்
உங்களுக்காய் அழுங்கள்

அழ வேண்டும் நீவிர்
அன்புடனே பெற்ற
மழலைகளை எண்ணி
மாதவனார் சொல்வார்

நிழல் தரு மரத்தின்
நிலை இதுவானால்
தழல் பட்டெரிந்த
தரு நிலை யாதோ?

கடவுள் மகன் இந்தக்
கனிந்த மொழி கூறி
நடந்திடுவார் மேலே
நங்கையவள் ஒருத்தி

தேடி வந்தவரின்
திருநிலா முகத்தைக்
கோடிப் பட்டாலே
குளிர மனம் துடைப்பாள்

துடைத்ததுமே அதிலே
தூயவனின் வதனம்
படம் போலப் பதியும்
பாவை மெய் சிலிர்ப்பாள்

தொடருமவர் பயணம்
    தோளின் சுமையாலே
இடறும் அவர் கால்கள்
    எங்கெங்கோ வீழ்வார்

வீழும் போ தெல்லாம்
    வெறியர்களின் கைகள்
நீளும் அவர் நோக்கி
    நெஞ்சமது கல்லே!

தள்ளாடி எழுவார்
    தம் சிலுவையோடு
கல்லான மனிதர்
    கைகட்டி நிற்பார்

மண்டை ஓடு எனும்
    மலை தன்னை நோக்கிக்
கொண்டோடு என்பார்
    கொடுஞ் சிலுவை தன்னை

வார்த்தையது கேட்டு
    வானவனார் நடப்பார்
கூத்து அது முடியும்
    கொஞ்சப் போதுள்ளே

அப்போது ஒருவன்
    அவ்வழியே வருவான்
எப்போதோ அவனை
    யேசுபரன் அறிவார்

தலைவனவன் கோலம்
    தான் கண்டு துடிப்பான்
மலைவரை யுமந்த
    மரச் சிலுவை சுமப்பான்

# தாயும் சேயும்

தலையினில் அடித்துக் கொள்வாள்
　　தாய்மரி மகனைக் கண்டு
அலையெனக் குமுறும் உள்ளம்
　　அனலெனக் கொதிக்கும் மேனி
வலைதனில் வீழ்ந்த மானை
　　வனசரர் துடிக்கக் கொல்லும்
நிலையிது என்பாள் தன்னுள்
　　நினைவதில் மயங்கிப் போவாள்

ஒரு மொழி தானும் அந்த
　　உத்தமி உரைத் தாளில்லை
வருமொழி ஏதும் இல்லை
　　வாயது அடைத்துக் கொள்ளும்
பெரு மகனாரும் தன்னைப்
　　பெற்ற நல் தாயைப் பார்த்து
உருகியே போவார் நேரில்
　　உதடுகள் துடிக்கும் அம்மா!

## துகில் உரியும் துச்சாதனர்கள்

நடுப்பகல் நேரம்
    நாற்புறமும் சூழ்ந்த
நெடுமரம், செடிகள்
    நிர்வாணமாகும்
கடு வெயிற் காலம்
    கனல் போல எரியும்
மடு குளம் வாவி
    மண்ணெலாம் பொரியும்

பொரியும் அவ் வெயிலில்
    பூபாலன் துகிலை
உரியும் அக் கூட்டம்
    உடம்பெல்லாம் பற்றி
எரியும் அதனோடு
    இரத்தமது வழியும்
விரியும் அவர் துன்பம்
    வெறியர் செயலாலே!

# சிலுவை மரத்தின் சிவந்த மலர்

நெடுமரச் சிலுவை
    நிலமதிற் சாய்த்து
படு இதில் என்றே
    பரமனைப் பணிப்பார்
இடு மொரு ஆணை
    ஏற்றவர் பணிவார்
எடு இருப்பாணி
    என்றவர் இரைவார்

தசை மலை வளர்த்த
    தடியர்கள் மூவர்
அசைந்துடல் குலுங்க
    ஆணிவைத் தடிப்பார்
பிசைந்த தோர் பழமாய்ப்
பிய்ந்துடல் சிதற
இசைந்தவை ஏற்பார்
    யேசு எம் பெருமான்

(வேறு)

கூரிய ஆணி கொண்டுடல் ஏறச்
சீறியே பாயும் செந்நிறக் குருதி
கீறிய மீனாய்க் கிறிஸ்துவின் தேகம்
பூரியர் கண்டு புன்னகை செய்வார்

குன்றினில் உயரும் கொடுமரச் சிலுவை
நின்றதில் தேவன் நெடுந்துயரடைவார்
கன்றெனப் பெண்கள் கதறியே வீழ்வார்
ஒன்றென இருந்தோர் ஒருவனே நிற்பான்

கள்ளர்கள் இருவர் கருணையன் அருகில்
முள்முடி தலையில் முத்திரை எழுத்தில்
எள்ளியே வைத்தார் இஸ்ராயல் அரசன்
சொல்லிது உண்மை சூட்டியோர் அறியார்

தொங்கிட யேசு தோல்வியாம் சிலுவையில்
பங்கவர் போட்டார் பரிசுத்தன் ஆடையை
இங்கிது நடக்க இறைமொழி வாக்கினன்
மங்கிடா வார்த்தை மறைவாய் உரைத்தனன்

சிலுவை மரத்தின் சிவந்த நற் கமலம்
நிலவுல கெங்கும் நிறைந்திடும் வாசம்
மலரதன் பெருமை மனிதர்கள் அறியார்
உலர்ந்தது வீழினும் உயிர் மணம் கமழும்

# பங்கவனுக்கருள்வாய் பரமபிதாவே !

மரணத்தைப் பரி சாக
மனிதர்கள் தந்தாலும்
மகிபன் அவன்
தருணத்தில் வேண்டுவான்
தந்தையை, இவரைத்
தயவாக மன்னிப்பீரே

(வேறு)

தொங்கு வான் கீழே தொங்குகிற சுதனை
அங்கு வரு மக்கள் அவமானம் செய்வார்
இங்கு நீ இறையேல் இறங்கிவா என்பார்
எங்குன் வீரம் என்றவரும் நகைப்பார்

இப் பேச்சைக் கேட்ட இறைமகன் யேசு
அப்பாவி மக்கள் அவர் செயல் அறியார்
இப்பாவம் தன்னை என்னருந் தந்தாய்
இப் போதே பொறுப்பாய் என வேண்டுவாரே

இம் மொழி கூறி இனியன செய்து
எம்பிரான் இறுதி எய்திய தெண்ணி
தம் பெருந்தாகம் தணிக்க நீர் என்பார்
அம்மம்மா தீயோர் அநியாயம் செய்தார்

காடியில் தோய்த்த காளான் எடுத்து
நீடிய தடியில் நீ குடி என்பார்
வாடிய நாதன் வாயினில் ஏற்று
மூடிய வானை முழுவதாய்ப் பார்ப்பார்

தீயோரில் ஒருவன் திருடன் இடமாக
வாயாரப் பழிப்பான் வல்லவன் ஆனால்
மாயாது நீயும் மரணத்தை வெல்வாய்
காயாக அவனும் கழறிட ஆங்கு

மறுத்துரை செய்வான் மற்றவன் வலத்தில்
பொறுத்தெனை அழைப்பீர், போகுமோர் இடமே
இறுத்தனன் யேசு என்னுடன் விண்ணை
உரித் தெனக் கொண்டாய் உடன் இப்போதே

அடிமரச் சிலுவை அணைக்கத்தன் கைகள்
துடித்திடக் கிடந்தாள் தூமரி அன்னை
கொடியவர்க் காசி கூறினை எனக்கு
விடிவினை நீயும் விளம்பா தென்ன?

இனிய தன் மகனை இவ்விதம் கேட்டாள்
கனியவே நெஞ்சம் காதலன் சொல்வான்
தனி யென நிற்கும் தகைசால் சீடன்
இனியுன் மகனே என்றவன் பார்த்து

அன்னையிவள் உனக்கு அருளப்பா என்பார்
சொன்ன உரை கேட்டுச் சோகமது பொங்க
மன்னனவன் அடியில் மாதரசி வீழ்வாள்
அண்ணலவர் தானும் ஆகாயம் பார்ப்பார்

இத்தனை சொன்ன இறைமகன் அதிர்வான்
கர்த்தனே என்னைக் கைவிட்ட தென்ன?
சத்தத்தைக் கேட்ட சனத்திரள் சொல்லும்
இத்தரை வாழ்ந்த எலியாஸ் அழைத்தான்

எல்லாம் முடிந்தது எனத்தன் உயிரை
வல்லவன் கையில் வைத்தவர் சாய்வார்
சொல்லது கேட்டுச் சொர்க்கமே புலம்பும்
கல்மனமனிதன் கலங்கிட மாட்டான்

# இயற்கையின் குமுறல்

இருண்டிடும் வானம்
எழு கதிர் மங்கும்
திரண்டிடும் காற்று
திசை பல சுழலும்
உருண்டிடும் பாறை
உடைந்தது நொறுங்கும்
மருண்டிடும் உலகம்
மாதவன் பிரிவால்

நிலமது நடுங்கும்
நெடிதுயர் மலைகள்
கல கலத் தாடும்
கல்லறை திறக்கும்
தலையது காட்டித்
தாமெழும் பிணங்கள்
புலனது அடங்கிப்
போவரே மாந்தர்

தேவனின் கோயில்
திரைத்து கில் கிழியும்
ஆவினம், பறவை
அனைத்துமே கதறும்
பூவனம் யாவும்
பொழுதினுள் வாடும்
சாவனம் போலச்
சர்வமும் தோன்றும்

கடலது குமுறும்
காவலை உடைத்துப்
படையது புகுந்த
பான்மையைப் போல
திடமணற் குன்றும்
சென்றது மூடும்
உடலது குலுங்க
ஓடுவர் மாந்தர்

கண்ணது இமையாக்
காவலன் ஒருவன்
மண்ணது காணா
மா பெரும் புதுமை
எண்ணில கண்டு
இருகரம் குவிப்பான்
உண்மையில் இவரே
உலகதன் இறைவன்

# இறைமகன் இவரே

இறந்தாரோ என்று அறிவதற்காங்கே
பறந்தோடி வருவான் பாவிமகன் ஒருவன்
அறிந்தாலும் உண்மை, அகம்பாவத்தாலே
திறந்தானே குத்தித் தேவனவன் விலாவை

குத்தியதும் அந்தக் குருட்டு விழி ஒன்றில்
நித்தியனின் குருதி நிலவு எனப்பாயும்
கத்தியவன் சொல்வான் கண்திறந்ததாலே
சத்தியமாய் இவரே சர்வேசுரன் குமாரன்

# மண்ணின் மடியில்

அரிமத்தியா என்னும்
அயலூரரைச் சேர்ந்த
ஒரு நல்ல மனிதன்
ஓடோடி வந்து
குரு அவர் உடலைக்
குழிதன்னில் வைக்க
அரசாளும் பிலாத்தின்
அனுமதியைக் கேட்டான்

உத்தரவைப் பெற்ற
உள்ளத்தாற் பெரியோன்
சித்திரம் போல் கீறிச்
சிதைந்திட்ட உடலை
பத்திரமாய் இறக்கிப்
பாசத்தாய் மடியில்
முத் தெனவே வைத்தார்
மூர்ச்சித்தாள் மாதா

அழுதழுது கிடப்பாள்
அன்னையவள், மகனின்
முழு உடலும் கொஞ்சி
முகம் சிவந்து போவாள்
பொழுததுவும் மேற்கே
போவதினை உணர்ந்தோர்
தொழுது டலை முன்பே
தோண்டிய தோர் கிடங்கில்,

வைத்தடக்கம் செய்வார்
வாழ்விழந்த தாயார்
தைத்த தொரு அம்பால்
தான் புலம்பலானாள்
கைத்த மன மாவாள்
கன்னியவள் மதலேன்
பொய்த்த உடல் அந்தப்
பூமியிலே மறையும்

## சூரியனின் சோகம்

கண்டதும் இந்தக் காட்சி
கதிரவன் செற்றங் கொண்டு
அண்டமே எரிப்பான் போல
அனலென எழுவான் மேலே
மண்டலம் தீய்ந்த தென்றே
மயங்கிடும் பறவைக் கூட்டம்
தொண்டைகள் கிழியக் கத்தும்
தோன்றிடும் கலக்கம் ! பீதி !

புலம்பலே கேட்கும் காதில்
புகுந்திடும் நெருப்பைப் போல
நிலமது கலங்கிப் போகும்
நெற்றியில் திலகந் தன்னை
இழந்தவள் போலவாகும்
இப்பெருந்து யரந்தன்னை
அளந்திடக் கூடுமாமோ ?
அவலமே சூழுமம்மா !

# திங்களும் வெள்ளியும்

முகத்தினை மூடிக் கொண்டு
முகில் எனும் ஆடை யாலே
அகத்தினில் அழுவாள் அந்த
அழகிய திங்கட் கன்னி
இகத்தினை மீட்கச் சென்ற
யேசுவின் மரணம் கேட்டு
நகத் தகும் செயலே என்கும்
நானிலம் உணரா தென்ன ?

துக்கத்தில் மூழ்கிப் போன
தூ மதி தன்னைக் கண்டு
பக்கத்து வீட்டில் உள்ள
பாலொளி வெள்ளிப் பெண்கள்
திக்கற்று நிற்பார் வானத்
தேவரே மயங்கலானார்
சொர்க்கத்தில் ஒளியே இல்லை
சோகத்தில் மூழ்கிப் போகும்

நல்லது செய்வோர்க் கெல்லாம்
நஞ்சினை, சிலுவை தந்து
கொல்லுதல் மனிதர் வேலை
குழந்தையும் அதுவே செய்யும்
சொல்லுவாள் தனக்குள்ளாகச்
சுந்தர நிலவுப் பாவை
வல்லவன் பகரும் அந்த
வார்த்தைதான் வேதம் அங்கே !

# வியாகுல மாதா

தனிமையில் இருப்பாள் அன்னை
தணலெனக் கொதிக்கும் உள்ளம்
கனியவன் மரணம் எண்ணிக்
கசிந்தவள் உருகிப் போவாள்
இனியவன் முகத்தைக் காணல்
எங்ஙனம் ஆகும் என்பாள்
வனிதையின் துன்பந்தன்னை
வார்த்தையில் அடக்கலாமோ !

பிறந்ததும் துயரம் சூழும்
பெத்லேகம் என்னும் ஊரைத்
துறந்ததும் குழந்தை யோடு
தூரவே பயணம் நீளும்
இறந்ததும் மன்னன் என்பான்
எகிப் தெனும் தேசம் விட்டு
பறந்துமே வருவார் அந்தப்
பார்புகழ் நசரேத்தூரே !

நடந்ததை நினைப்பாள் நெஞ்சில்
நரம்புகள் புடைத்துக் கொள்ளும்
கடந்தவை எல்லாம் வாழ்வில்
கரும் பென இனிக்குமாமோ !
விடந்தனை உண்டான் மேனி
வேகமாய் மாறல் போல
மடந்தையும் வெளிறிப் போவாள்
மன மெலாம் துயரந் தானே !

( மூன்றாம் பாகம் முற்றும்)

# நான்காம் பாகம்



# மரணம் வெல்லப்படுகின்றது

# எழுந்தனன் யேசு

ஆதவன் உதயம் அன்று
　　அரும்பிட வில்லை யேசு
நாதனின் உதயம் என்று
　　நாணியே போனான் எங்கோ
போதது காலை என்று
　　பூமியே அறியும் முன்னம்
கோதறு தேவன் தங்கக்
　　குடமென உதயம் செய்தான்

இறைவனின் உதயம் கண்டு
　　இயற்கைகள் யாவும் தம்மை
மறந்திடும்; இன்பம் என்னும்
　　மாகடல் தன்னில் நீந்தி
பிறந்ததன் பயனை இன்று
　　பெற்றனம் என்றே அந்தத்
திறந்தவான் வெளியும் கூடத்
　　திருவிழாப் பந்தலாகும்

கையெனக் குவிந்த கண்ணி
　　கண்ணென விரிந்த பூக்கள்
ஐயனை வணங்கும் வெள்ளி
　　அருவிகள் தரையில் வீழும்
மை யெனக் கிடந்த வாரி
　　மங்கள ஓசை செய்யும்
பையவே காற்றும் வந்து
　　பரன் புகழ் பாடுமம்மா !

# நற்செய்தி

நல்லிளங் காலை
    நாதனவன் துயிலும்
கல்லறையைக் காண
    கன்னியர்கள் இருவர்
செல்லுவார் ஆங்கே
    தேவுலகு மாதர்
கல்லதன் மேலே
    காட்சி தருவாரே !

தேடுவது யாரோ ?
    தேவனவன் தானோ ?
நாடியவர் கேட்பார்
    நற் செய்தி தொடரும்
கூடு தனைக் காண்க
    குருவியது இல்லை
ஈடில்லாக் கிறிஸ்து
    இறப்புதனை வென்றார்

தூதரவர் வார்த்தை
    தோகையர்கள் கேட்கக்
காதெல்லாம் இனிக்கும்
    கால் வேகம் கொள்ளும்
நாதனவன் உயிர்ப்பை
    நற் சீடர் அறிய
ஓதிடவே விரைவார்
    உள்ளமது வியக்கும்

# மனமொடிந்த மதலேனாள்

தேவனவன் உயிர்த்த நற்
    செய்திதனை அறியாத
பாவையவள் மதலேனாள்
    பாசமுறு உள்ளத்தாள்
கேவி மிக அழுதபடி
    கிறிஸ்து பரன் உடல் தன்னை
பாவியரே கவர்ந்தார்கள்
    பகர்ந்திடுவாள் சீடரிடம்

கேட்டறிந்த சீடரவர்
    கிடுகிடுக்கும் பயத்தோடு
ஓட்டத்தில் சென்றார்கள்
    ஒருவரவர் முன்னோடி
வாட்டத்தில் தேடிடுவார்
    வானவனின் உடல் என்னும்
தேட்டத்தைக் காணவில்லை
    திருடியது நிஜம் என்பார்

சீமோனும் வந்தாங்கு
    தேடித்தான் பார்த்தாலும்
பூமகனின் உடலில்லை
    புலம்புமொரு மனத்தோடு
ஆமவரின் உடல் தன்னை
    ஆரோதான் கவர்ந்தார்கள்
நாமென்ன செய்வோமினி
    நடவுங்கள் ஊரென்பார்

சீடரவர் சென்றாலும்
சேயிழையாள் மதலேனாள்
நாடு மொரு நினைவாக
நந்தவனந்தனில் நிற்பாள்
ஆடு மொரு உருவொன்று
அது தோட்டக்காரனென
ஊடுருவிப் பார்த்தபடி
ஒரு கேள்வி கேட்டிடுவாள்

அய்யா நீர் ஆர்தாமோ?
ஆண்டவரின் உடல் தன்னை
மெய்யாகக் கிடங்குதிலே
மிக நன்றாய் வைத்திருந்தோம்
பொய்யாகப் போனதுவே
புல்லர் தாம் வந்ததனை
கைவைத்து எடுத்தார்கள்
கண்டீரோ சொல் என்பாள்

மாதவளும் குமுறிடுவாள்
மரியாயே என்றவரும்
ஆதரவாய் அழைத்திடுவார்
அய்யா நீர் கிறிஸ்தாமோ?
நாதனவன் குரல் தன்னை
நன்கறிந்த மதலேனாள்
பாதமலர் வீழ்ந் தெழுந்து
பரவசத்திலாழ்ந் திடுவாள்

பிழம்பு என நின்றிருந்த
பெண்ணவளைப் பார்த்தவரும்
குழம்பிப் போய் இருக்கு மென்
கோதில்லாச் சீடரிடம்
விளம்பு நான் மரணத்தை
வென்றுயிர்த்தேன் என அவளும்
கிளம்பிடுவாள் கணை போல
கிறிஸ்து மனம் நிறைந்திடுவார்

# நாட்டில் பரவிய நச்சுப் பொய்

சொல்லரிய இயற்கையது
சோபனங்கள் பாடிடுங்கால்
கல்லறையைக் காத்திருந்த
காவலர்கள் நெஞ்சினிலே
வெல்லரிய பய மொன்று
விதையாகி மரமாகும்
மல்லரவர் பேடிகளாய்
மன்னனிடம் விரைவாரே

(வேறு)

காவலர் என்பார் ஓடிக்
கல்லறை தன்னை விட்டு
சீவனோ டெழுந்தான் அந்த
யேசுவாம் மனிதன் என்றே
கூவினர் நடுக்கத் தோடு
குருக்களும் அதனைக் கேட்டு
ஏவினர் பொன்னைத் தந்து
இவ்விதம் உரைப்பீரென்றே

தூங்கிய போது நாங்கள்
தொண்டர்கள் இருட்டில் வந்து
தாங்கிய பெட்டி தன்னைத்
தனிமையில் திறந்தே ஆங்கு
தேங்கிய உடலந் தன்னைத்
திருடியே சென்றார் என்று
ஓங்கியே பொய்யைச் சொல்க!
உலகிது நம்புந் தானே !

# எம்மாவுஸ் செல்லும் போது....

உம்மென்ற முகமாக
ஓரிரண்டு சீடர்கள்
எம்மாவுஸ் என்னும்
எழிலூரை நோக்கிச்
சும்மாதான் போவார்
சோர்ந்த மனமாகத்
தம்மவரைப் பற்றித்
தமக்குள்ளே கதைப்பார்

பாடு மிகப் படுவார்
பட்ட பிறகிங்கே
நீடு புகழடைவார்
நிகரின்றி வாழ்வோம்
கூடு மிவை என்னும்
குறிப்பு பிழையாமோ ?
வாடுமவர் நெஞ்சில்
வளரு மொரு வினாவே !

ஒரு மனிதர் இன்னும்
உடன் நடந்து வருவார்
இருவர் உரை யாவும்
இவர் காதில் வாங்கி
பெரு மடையர் நீவிர்
பேரறிஞர் இசையாஸ்
திரு வார்த்தைப் படியே
செத்துயிர்த்தார் என்றார்

அவ்வூரைச் சீடரவர்
அண்மித்த வேளையிலே
செவ்வானில் இருள் மேவும்
சேர்ந்தருகு வந்தவரோ
எவ்வூரோ அறியார்கள்
என்றாலும் இரவதனால்
அவ் வூருக்கழைப்பார்கள்
அவரும் ஒரு வீட்டினிலே

அப்பம் பிட்டளித்திடுவார்
அப்போதே உண்மையினை
ஒப்பாத சீடர்களின்
உள் மனமும் திறந்து விடும்
முப்போதும் அறிந்த பரன்
மூடுமிமைப் போதினிலே
தப்பியவர் கண்களுக்குத்
தாமாக மறைந்திடுவார்

# விசுவாசம் வேண்டும்

கதவந்தனைப் பூட்டிக்
கடிய தொரு பயத்தால்
இதயந்தனை நடுக்கி
இருக்கு மவர் சீடர்
உதய மென யேசு
உருவமது தோன்றும்
நியமது சாந்தி
நிறைக என வாழ்த்தும்

ஆணியது பாய்ந்த
அவர் தமது கையைக்
காணீர் எனக் கூறிக்
கால் தனையுங் காட்ட
தோணுமவர் விலாவின்
துளை தனையும் பார்ப்பார்
வானுலகின் அரசன்
வடிவமது கண்ட

தொண்டரவர் மகிழ்வார்
தூயனவர் மீண்டும்
கொண்டு திரு வார்த்தை
கூறி மனச் சாந்தி
பண்டு என் தந்தை
பணித்தது போல் நானும்
மண்டலமே வாழ
மற்றவரைத் தருவேன்

ஊதி அவர் மீது
ஒளி ஆவி தன்னை
மேதினியிற் பெறுவீர்
மேலும் நீர் ஈங்கு
ஏதமதைப் பொறுத்தல்
இல்லை யெனத் தள்ளல்
நீத மெனக் கொள்ளும்
நிச்சயமாய் வானும்

ஆங்கு ஒரு சீடன்
அச்சமயம் இல்லை
நீங்கிய பின் யேசு
நேயன் அவன் வரவே
ஈங்கு எம் முன்னே
இறை மகனும் வந்தார்
நாங்கள் அவர் தம்மை
நன்கு கண்டோமே!

என்றவர்கள் சொல்வார்
இதை யேற்காச் சீடன்
ஒன்று நான் சொல்வேன்
உத்தமனார் விலாவில்
நன்று என் விரலை
நான் விடுதல் வேண்டும்
அன்றேல் நான் ஒப்பேன்
அவன் ஓங்கிச் சொல்வான்

வீடு தனைப் பூட்டி
வெளியேறாச் சீடர்
மூடியவர் இருப்பார்
முழுப் பேரும் ஓர் நாள்
நாடியவர் மீண்டும்
நல்லமைதி பகர்வார்
கூடியவர் நெஞ்சில்
குதூகலமே பொங்கும்

நல்லமைதி பெய்து
    நம்பிடவே மறுத்த
கல்லு மனச் சீடன்
    கசிந்துருகும் வண்ணம்
மெல்ல மொழி பகர்வார்
    மேலவராம் யேசு
உள் விடுக உன்றன்
    ஒரு விரலை விலாவில் !

அப்போதே தொண்டன்
    அகக் கண்கள் திறக்கும்
ஒப்பாரி வைப்பான்
    ஓட நீர் கண்ணில்
செப்புவான் வார்த்தை
    'தெய்வமே, இறைவா'
ஒப்பில்லாக் கிறிஸ்து
    ஒரு வார்த்தை சொல்வார்

எனைக் கண்டே ஏற்றாய்
    இது வல்ல விசுவாசம்
எனைக் காணா நிலையில்
    ஏற்பவரே பேற்றைத்
தனதாக்கிக் கொள்வார்
    தளர் வில்லா நம்பிக்கை
உனதாக்கிக் கொள்வாய்
    உத்தமனார் சொல்வார்

# ஆயன் நீ ஆவாய்

காரிரா முழுதும்
கைநோக வீசி
வாரியதன் ஓரம்
வாடியுளம் நின்ற
ஆருயிர்ச் சீடர்
அவர் தமைப் பார்த்துச்
சீராளன் யேசு
தேவமொழி பகர்வார்

பிள்ளைகளே மீன்கள்
பிடிபட வில்லையோ?
வள்ளல் அவர் கேட்பார்
வாய் திறந்தவர்கள்
எள்ளளவும் இல்லை
என்பார்கள் யேசு
வள்ளமதன் வலமாய்
வலை வீசு என்பார்

அப்படியே செய்வார்
ஆயிரமாய் மீன்கள்
எப்படியோ சேரும்
இது என்ன வென்றே
அப்படியே நிற்பான்
அருமைமிகு சீடன்
ஒப்பில்லாப் பரனை
உடன் கண்டு கொள்வான்

இச் செய்தி தன்னை
    இராயப்பர் அறிய
அச்சமது இன்றி
    ஆழ் கடலிற் குதிப்பார்
மச்சமதை ஆங்கு
    மற்றவர்கள் கொணர
நிச்சயமாய்க் கரையில்
    நிர்மலனே நிற்பார்

நெருப்பது மூளும்
    நீள் கரை ஓரம்
விருப்புறு அப்பம்
    விளங்கிடும் தட்டில்
சிரிப்புடன் கிறிஸ்து
    செப்புவார் மெல்ல
இருப்புள மீன்கள்
    எடுத்து நீர் வருக

பின்பவர் உணவைப்
    பிரியமாய்ப் பகிர்ந்து
அன்பருக் களிப்பார்
    அப்போதவர்கள்
என்புரு இல்லா
    இறை மகன் என்றே
தன் மனம் கொள்வார்
    தயங்குவார் கேட்க

உணவது முடிய
    உத்தமன் கிறிஸ்து
மனமது நிறைவார்
    மறி கடல் ஓரம்
கணமது ஆறிக்
    கருத்துடன் ஒன்றித்
தன தருகிருந்தத்
    தலைவனைக் கேட்பார்

எனை அன்பு செய்கிறாயா?
  என்றெங்கள் யேசு
அனைய மனம் கேட்பார்
  அருளப்பர் மகனை
உனை அன்பு செய்தல்
  உண்மையெனச் சீடன்
அனை போலு மென்றன்
  ஆடுகளை மேய்ப்பாய்

தேவனவர் சொல்வார்
  சீடனவன் சீமோன்
ஆவென்று பார்ப்பான்
  அடுத்த கதை பேசான்
ஓவென்ற கடல் போல்
  உள்ளமது ஆகும்
ஆவலுடன் மற்றோர்
  ஆண்டவனைப் பார்ப்பார்

வயதான காலம்
  வரிந்துன்னைக் கட்டி
அய லிடம் எங்கோ
  அழைத்தவர் செல்வார்
நய முடன் யேசு
  நாளைவரு முடிவைத்
தயங்காது சொன்னார்
  தாமறிந்ததாலே !

எனை அன்பு செய்கிறாயா ?
  என்றவரே மீண்டும்
தனைக் கேட்கச் சீமோன்
  தணல் மெழுகாகி
உனை அன்பு செய்தல்
  உண்மையென ஆங்கு
அனைவரும் கேட்க
  அழுத்தமாய்ச் சொல்வான்

### 273

இன்னு மொரு தடவை
　　யேசு பரன் கேட்பார்
என்ன இது என்று
　　எல்லோரும் வியப்பார்
அண்ணலவன் செயலை
　　ஆர்தானோ அறிவார்
எண்ணமது குழம்ப
　　ஏழையவன் சொல்வான்

அனைத்தும் நீர் அறிவீர்
　　ஆண்டவரே உம்மை
மனத்துள்ளே விரும்பும்
　　மனிதன் நான் அன்றோ!
கணத்துள்ளே சீமோன்
　　கண் கலங்கி நிற்பான்
இனத்துள்ளே யாரும்
　　இவன் போலும் உண்டோ ?

என்னாட்டை மேய்ப்பாய்
　　எனை அன்பு செய்தால்
பொன் நாட்டின் தலைவன்
　　புகலுவான் அன்பாய்
அந்நாளில் விரும்பி
　　ஆன இடம் சென்றாய்
எந்நாளும் உன்றன்
　　எண்ணமது வெல்லா !

# விண் நோக்கி எழுந்த விமலன்

மலையிலே ஏறி மன்னவன் நிற்பான்
மாருதம் வீசிடுமே
தலையிலே பூக்கள் தாங்கிய மரங்கள்
தாள் தனில் சூடிடுமே
கலைபயில் குயில்கள் காவியம் பாடும்
காதது இனித்திடுமே
நிலமகள் முகத்தில் நிறைந்திடும் மாட்சி
நிமலனை வாழ்த்திடுமே

சீடர்கள் யாவரும் சேர்ந்திருப்பார்கள்
திருமகன் மாதாவே
பேடென அடங்கிப் பெண்மையில் திளைப்பாள்
பெண்மணி மதலேனாள்
ஓடவே கண்கள் உயரவே பார்ப்பாள்
ஓங்கிடும் காட்சியிலே
ஈடேதும் இல்லா இறைமகன் யேசு
இவ்விதம் சொல்வாரே

ஆவியை அனுப்புவார் அன்புறு தந்தையார்
அதுவரை யாவருமே
கோவிலின் நகரில் கூடியே இருப்பீர்
கூறியே இம் மொழியை
தாவினன் வானில் தத்துவப் மெய்ப் பொருள்
தாசர்கள் அனைவருமே
கூவினர் மகிழ்ச்சியில் குவித்தனர் கைகளைக்
குதூகலம் பொங்கிடுமே

மஞ்சுப் பூ மெத்தையில் மகிபனும் அமருவார்
மத்தளம் ஆர்த்திடுமே
விஞ்சிடும் வானிலே வெண்ணிலா போலவே
விளங்கிடும் தூதர்களே
கொஞ்சிடும் தாளிலே குவித்துத்தம் முகத்தினைக்
கோமகன் வாழ்த்திடுவார்
நெஞ்சம் பூ வாகும்ம நிமலனின் வருகையால்
நிறைந்திடும் சோபனமே

# மங்களம்

மங்களம் எங்கும் தங்கிடும் யேசு
மன்னவன் உயிர்ப்பினிலே
தங்கம் உருகித் தான் நகையாகும்
தன்மையினைப் போலே
இங் கொரு பிறப்பு இற்றிடும் போது
இன் னொரு அவதாரம்
அங்கவர் உலகில் அமரர்களாவார்
அழியா வாழ்வாமே

சங்கமத் தேவன் சரித்திரப் புகழில்
தழைத்திடும் அவர் வேதம்
பொங்கிடும் கதிராய்ப் பூமியில் ஒளிரும்
பொன்னுல கேத்திடுமே
மங்காப் பெருமை மானிடர் பெற்றார்
மா நிலம் சொர்க்கமே
அங்கமாக அனைவரும் ஆனார்
அமைந்தது திருச்சபையே

சீமோன் என்னும் சீரிய தலைவன்
செய்திகள் கூறிடுவான்
சீமான் அவனின் வழியில் மற்றச்
சீடர் நடந்திடுவார்
நாமம் ஒன்றே நாவில் நிற்கும்
நாதன் யேசுவே
பூமான் அவனே போற்றிடும் சக்தி
புரிந்தவர் வாழ்ந்திடுவார்

கோமகள் மரியாள் கலை நிலா போலே
கொண்டருள் பொழிந்திடவே
தூமகள் தாளில் தோமறு நூலாம்
துலங்கு ஆரணி யாம்
பூமகள் போற்று புகழ் மிகு சூசை
புனிதன் மகிழ்ந் திடவே
மாமகள் சிவந்தி மதலேன் என்னும்
மங்கை களித்திடவே

சாகர மெத்தையில் சங்கு துயின்றிடும்
தாலேலோ பாடுமலை
மாகரை எங்குமே மன்னிடும் தென்னைகள்
மழலைகள் பேசும் கிளி
தோகை போல் நெற்கதிர் தோன்றும் கழனியில்
துள்ளும் பணையான்களே
வாகரை என் றொரு வான் புகழ் நாட்டிலே
வாணன் எனும் கவிஞன்

தன்னிகரில்லாத் தலைவன் யேசு
தானவன் வரலாற்றைக்
கன்னித் தமிழில் காவியம் செய்தான்
கற்றோர் பொறுத்திடுக
எண்ணிப் படிக்கும் இதயமெல்லாம்
இன்னருள் பெற்றிடவே
புண்ணியக் கதையை அவனும் புகன்றான்
புவனம் வாழ்ந் திடவே !

சுபம்.

## இவர்களின் இதயங்களிலிருந்து......

கிறிஸ்து காவிய ஆசிரியரின் கவிதை ஒழுங்கில் மரபு புதுமையுடன் இலகுவாகக் குலவுகின்றது. கற்பனை இறையியலுடன் இதமாக விளையாடுகின்றது. கிறிஸ்தவம் தமிழுடன் உரிமையோடு கை கோர்த்துக் கண்சிமிட்டுகின்றது. இத்தகைய ஆற்றல் படைத்த கலைவாணர் ஒருவரின் படைப்பினை நூல்வடிவில் வெளியிடுவதில் திருமறைக் கலாமன்றம் பெரு மகிழ்ச்சி அடைகின்றது.

~ புலவர் நீ. மரியசேவியர் அடிகள்.

கவிஞரிடம் கடலளவல்ல, சமுத்திரமளவு திறமை இருப்பதைக் காவியத்தைப் படிப்போர் உணர்வர். தமிழன்னையை விளித்து பதி எனது நெஞ்சில் பரதம் நீ ஆடு என்று கவிஞர் இறைஞ்சியமையை அவள் ஏற்று கவிஞர் நெஞ்சிலும், நாவிலும், கையிலும் நின்று பரதம் ஆடியிருப்பதைக் காவியம் முழுவதும் காண முடிகின்றது.

~ அமரர் வித்துவான் சி. குமாரசாமி.

பாகுநேர் தனிப்பாடல்கள் பைந்தமிழ் செழிக்கச் செய்யும்
காவிய நறும் பாடல்கள் காலங்கள் பலவாய் நல்கி
பாநலம் துய்ப்போர் தம்மைப் பரவசம் உறச் செய்கின்றார்
வாகரை வாணன் என்ற வண்டமிழ்க் கவிஞர் நன்றே.

~ புலவர் ம. பார்வதி நாதசிவம்.

நற்செய்தி நூலின் உரைநடை வார்த்தைகளுக்குச் சந்தமும், ஓசையும் தந்திடும் இக் கவிதைகளில் பலஸ்தீன நாட்டினதும், ஜெருசலேம் நகரத்தினதும், ஏனைய நகர்ப் புறங்களினதும் இயற்கை எழில் மிகவும் இயல்பான வகையில் இணைக்கப்பட்டுள்ளமை கவிஞரின் கற்பனை வளத்திற்குச் சான்றாக அமைகின்றன.

~ கலாநிதி ஏ. ஜே. வி. சந்திரகாந்தன் அடிகள்.

நற் செய்திகளையும், தமிழ் இலக்கிய முறைகளையும் சங்கமிக்கச் செய்து ஒன்றுக்கொன்று மெருகூட்டும் பணியில் வாகரைவாணன் ஈடுபட்டிருக்கின்றார். அவரின் முயற்சி வளர்க. இதைப் போன்ற முயற்சிகள் பெருகுக. தமிழ்க் கிறிஸ்தவம் தழைத்தோங்குக.

~ அருட்திரு எஸ். ஜே. இம்மானுவல் அடிகள்.

**வெளியீடு - திருமறைக் கலாமன்றம்**